பிஸ்மில்லாஹி.

# மலுக்கு முலுக்கு ராஜன் கதை.

இதனை கல்வியிற்றேர்ந்த ஹாஸித்வானும் ஆலிமுமான

வாலை பாவா ஸாஹிபு

அவர்களின் புதல்வர்,

வாலை அப்துல் காதர் ஸாஹிபு அவர்களால்பாடி

பன்முறை பலரால் அச்சிட்டு விளங்கிவந்ததை சீர்திருத்தி,

சென்னை திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1949.

[அணா 12.

MADRAS

பிஸ்மில்லாஹி

MADRAS

# மலுக்கு முலுக்கு ராஜன் கதை.

இதனை கல்வியிற்றேர்ந்த மஹாவித்வானும் ஆலிமுமான

**வாலே பாவா ஸாஹிபு**

அவர்களின் புதல்வர்,

**வாலே அப்துல் காதர் ஸாஹிபு அவர்களால் பாடி**

பன்முறை பலரால் அச்சிட்டு விளங்கிவந்ததை சீர்திருத்தி,

சென்னை திருவல்லிக்கேணி,

**ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,**

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

**1949.**

இதன் விலை] [அணா 12.

பிஸ்மில்லாஹி.

# மலுக்கு முலுக்கு ராஜன் கதை.

## காப்பு—வெண்பா.

வீரன் மலுக்கு முலுக்கின் வரலாற்றை
பாரிற் றமிழ்மொழியாற் பகரவே—பேருலகில்
எண்ணமுடியாப் படைப்பு மெல்லாவற்றையும் படைத்துக்
கண்ணின்றிக் காண்பவனே காப்பு.

## விருத்தம்.

விண்ணகந் தலங்கயாவும் விளங்கிடச் செய்தோனீயே
மண்ணிடம் பலதுந்தோன்ற வகுத்தல் லவனுனேனீ
எண்ணிலா விதங்கள் செய்த விறைவனு னேனீதே
கண்ணினிற் காணுத்தூய கத்தனே கருத்துள்வைத்தேன்
கெட்டுட லாய்வளர்ந்த நீள்முடி மலுக்குராஜன்
வெட்டுப்பட் டிறந்தவாறை விளம்பிடப் புவியின்மீதில்
வட்டவான் மதியழைத்த முஹம்மது நபியுல்லாபூ
தொட்டிடாப் பாதந்தன்னைச் சிந்தையுள் ளிருத்தினேனே
பாதக மலுக்குராஜன் படைத்தொழி லதனைக்கூற
பூதலந் தான்விளங்கப் பெரியவன் தூதராக
ஆதநந் நபிமுதலா யஹம்மது நபிமார்மட்டும்
மாதவ நபிமார்பாத மனந்தனி லிருத்தினேனே
மணிமுடி முலுக்குராஜன் வரலாறு தன்னையிந்தப்
பணிசுமை கொண்டபாரில் படிப்படியாகச்சொல்ல
துணிவுள நெஞ்சரானோர் நீலுக்கோர் துணையாய் நின்று
அணியபூ பக்காபாத மகத்தினு ளிருத்தினேனே
மலையென வுடல்வளர்ந்த மலுக்கினின் வரலாறன்னை
அலைகடல் புவியிலோத ஆதவ னொளிக்கச்செய்த
தலைமையு மருவம்பெற்ற தவத்தின ருமர்க்கதாபின்
கிலைமலாப் பதத்தையென்ற நெஞ்சினுள் ளிருத்தினேனே
நிலமிசை கீர்த்திபொங்க நால்வகைப்படைகள் சூழ
வலிபல மொழிந்திறந்த மலுக்கினின் வரலாறோத
பலகைகண் டெழுதிச்சேர்ந்த பாத்திய ருதுமானுர்தன்
மலர்வடிப் பதத்தையென்றன் மனதினுள் ளிருத்தினேனே
நெடுமுடிமலுக்குராஜ நீண்டநாள் புவியையாண்டு

பொடிபட மடிந்தவரைப் புவிதனில் விளங்கவோத
படியிட மதிரவெட்டும் பார்த்திப ரலியார்கட்டும்
கடிமலர் பதத்தையென்றன் கல்பினுள்ளிருத்தினேனே
மலிபல மலுக்குராஜன் வரலாறு தன்னைப்பாட
அலிமகனசனுசைன்றன் னழகிய பாதம்போற்றி
ஒலிகளுக்கரசரான வுயரப்துல் காதிர்பாதம்
தலைமிசை யிருத்தி வாழ்த்திச் சாற்றினே னல்லோர்முன்பில்

## இந்நூல் செய்தவன் பெயர்.

தேன்கனி பழுத்துச்சிந்துஞ் செழுமக ராம்பூர்வாழும்
பான்மொழி வாலைபாவா சாயபுபுதல்வ ரானோர்
தீன்முறை தவறு அப்துல் காதிரு வென்னும்பேர்ச்
சீனமுதலா விளங்கச் செப்பினே னிந்நூல்தன்னை.

---

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.

## அரசுசெலுத்தினதைச் சொல்லுதல்.

---

### அலங்காரக்கண்ணி.

முத்தொளிவாக விலங்கிருந்த முஹம்மது நபியுல்லா
கத்தனரசினிலேறியேபேசிய ஹபீபுநபியுல்லா
அட்டதிசையின் குபிரைப்புடைத்த அஹ்மது நபியுல்லா
கட்டிலடங்கிடாக் காரணங்காட்டிய ஹபீபுநபியுல்லா
மேகந்தலைமேல் குடைபிடவந்த வேதநபியுல்லா
காதவழிக்கு வாடையும் வீசிடும் ஹபீபுநபியுல்லா
பாதம்புவிமேல் தட்டாநடக்கும் பயகாம்பர்நபியுல்லா
சோதிவடிவால் துலங்கிடவந்த சொரூபநபியுல்லா
நபிமார்க்கெல்லாம் நாயகமான நாயன்நபியுல்லா
அவனியை யொருகுடையாகிடவாண்ட அரசர்நபியுல்லா
பொல்லார்முடிகளை பொடிபடச்செய்த பெரியநபியுல்லா
எல்லார்தனக்குமிதயத் தீய்ந்த இறசூல்நபியுல்லா
மானும்புலியுமொருதுறைநீரை மகிழ்ந்துதான் குடிக்க
கிளியும்மருந்துமொரு கூண்டிருந்து கூடிவிளையாட
குதிரைத்தலைவரும் யானைத்தலைவருங் கூடியருகிருக்க
காலியார்களுமருகிலிருந்து நல்லமொழிகேட்க
அவ்ஹாபு மார்களெல்லாஞ்சுற்றி யருகிற்முனிருக்க
வணங்காராஜர்களெல்லாம் வந்து வரிசைகளிமாவோத

கெட்டநடப்புகளெல்லாம் நீக்கிக் கேள்வியாற்றுனடக்க
இந்த விதமா நபியுல்லாவு மிருந்தார் மக்கமதில்
வந்துவான வாடிகளைச்சூழ வண்மையாக செய்து
தேசங்களெல்லாங் கிடுகிடுவென்ன கலிமாப் பயிரேற்றி
நாளுக்கு நாள் தீன்பயிரோங்கி நாயனருளாலே
இவ்விதமாக நடந்து வருகுது இறையோனருளாலே
அந்த நாளையில் நடந்த சங்கதி யதனைச் சொல்லிடுவேன்
சிந்தைகுளிர வெல்லாங் கேளுஞ் செல்வமிகவோங்க
காதுகள் குளிரவெல்லாங் கேளுங் காரணந்தன்னைச் சொல்ல
ஆதிப்புலியின் மகனாகிய அசனாரென்னுமவர்
வேதனை மேன்மேலாகப் பொங்கிட விசனமுமேலோங்க
சந்திரன் போன்ற முகமும் வாடி துக்கமிகவாக
அல்லா தூதராகிய நபியி னருகில் வந்து நின்றார்
முகமும் வாடிட அருகினிலசனார் வந்து நின்றவுடனே
ஈரல் கொழுந்தே யென்றன்மகனே யென்னவயணத்தாலே
மதிபோலான முகமும் வாடி வந்தாயென் கிட்டே
என்றாவயணமேது வயண மென்னோடே சொல்லும்
உன்றன் மனதிலிந்த விசனங்கள் வந்த வரலாறை
சீக்கிரமாகச் சொல்லிடுமென்று சிறந்த நபியுல்லா
கேட்டிட அசனார் அந்தநபிமுன் கிருபை மிகப்பொங்க
அல்லா அரசினிலேறிப்பேசி அஹ்மதாய் வந்தவரே
பொல்லாக் குபிரைக்களை யில்லாமல் போக்கிய நன்னபியே
ஏழைகட் கெல்லா முதவி செய்யு மிறசூல் நன்னபியே
நாளை மஹுஷரில் மீட்ட வந்த நாயக நன்னபியே
என்ற வார்த்தையைத் தாங்கள் கேட்டு இரங்கிக் கிருபைசெய்யும்
அதனாலெனக்கு சந்தோஷமாகும் அல்லா திருத்தூதே
என்று அசனார் நபி முன்பாக வீது,வசனமோத
கண்ணின் மணியாய் வந்தவென் மகனே கடுக நீர் சொல்லும்
ஒன்று மறைந்திட வேண்டாமிப்போ உறுதியாகச் சொல்லும்
என்று முஹம்மது நபியுஞ் சொல்ல எழுந்து அசனாரும்
கொண்டல் கவியும் நபியின்றந்தையே கூறிட நீர் கேளும்
மக்கந்தனிலே யெனக்கொரு யிஷ்டர் மன்கூஹென் போற்கு
எட்டு நாளாய்ச் சுரத்தால் வாடியிருக்கிறார் மெலிவாக
அன்ன முண்ணார் நீருங்குடியா ரந்த சுரத்தாலே
கந்துத் தப்பியே போயிருக்கிறார் தீராச் சுரத்தாலே
பதைத்துத் துடித்து வாடி மெலிகிறார் பாரச்சுரத்தாலே
பார்க்க முடியவில்லைக் கண்ணாலவரைப் பெரிய சுரத்தாலே
ஆகையால் தங்களை மன்கூ நினைத்து அழுதுவெனக்குச் சொன்னார்
அவருட சொல்லைக் கேட்டிட வெனக்கு அதிக விசனமாச்சு

தங்களுக்கிதனைச்சொல்லிடுவென்று தயவோடுரைத்தாரின்று
ஆகையால்நானுந்தங்களைநாடி யசந்துநடந்துவந்தேன்
அவரிடவருத்தமெல்லாங்கண்டு அதிகவிசனமாச்சு
பொறுக்காதுக்கமேன்மேலாக பொங்கிவருகுதெனக்கு
தாங்களெழுந்து அவரைக்காணத் தயவாகவாரும்
என்றனுபாவாவென்று இரக்கமோடுசொன்னார்

## மன்சூரைக் காட்டப் போகுதல்.

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
சந்தோஷப்பட்டாரவ்விடம்போக அந்தவேளையிலே
நாலுயார்களும் அஸ்ஹாபெல்லாம் நபியைமொய்த்துக்கொண்டார்
பூவைவண்டுகள்சுற்றினார்போல நபியைசூழ்ந்துகொண்டார்
அந்தவேளையில்நபியுல்லாவும் அதிககிருபையோடு
மன்சூர்தன்னைக்காணவெழுந்தார் மன்னர்நபியுல்லா
இரண்டுபக்கமும்நாலுயார்களு மிறைஞ்சிவாழ்த்திவர
மலரைச்சூழ்ந்துவாறாஸ்ஹாப் மார்கள்சூழ்ந்துவரவும்
மதியிலொளிபோல்நபியுல்லாவு மனதுமகிழ்ந்துபொங்க
தரையில்பாதந்தாங்கமேகம் தலைமேற்குடையிடவே
மன்சூர்வீடுபுகுந்தார்நபியு மற்றோரெல்லாரும்
நபியுல்லாவின்வரவைக்கண்டார் நல்லமன்சூர்க்கு
மாய்ந்தவுடலுக்குயிர்வந்தாற்போல் வல்லமன்சூர்க்கு
காய்ந்தபயிருக்குமழைவாத்தாற்போல் கனத்தமன்சூர்க்கு
கட்டிலடங்காமகிழ்பொங்கிச்சு கனத்தமன்சூர்க்கு
நாயன்றூதே நபியுல்லாவே நபிமாருக்கரசே
எளியோன்றன்னைக்காணவந்தீரே என்பொருட்டாலெண்ணி
தாங்கள்வந்திடப்பாக்கியம் பெற்றேன் தரித்திரமுள்ளபாவி
என்றநானாவிதமாய்ப்புகழ்ந்தார் இறசூல்நபிதன்னை
அச்சொற்களைக்காதிலேகேட்டு அப்போநபியுல்லா
அரியபிணியைநொடிக்குநீக்குவான் ஆதிபெரியவனும்
கொஞ்சமஞ்சிடவேண்டாம்நீயும் கொடியபிணியாலே
காற்றுப்பறந்துபோகுஞ்சரமுங் கனத்தவுடலைவிட்டு
பஞ்சாய்பறந்துவிலகிடுஞ்சரமும் படைத்தோனருளாலே
என்றசொல்லைமன்சூர்கேட்டு இறசூல்முகம்நோக்கி
என்றனுயிரேயிறையோன்றூதே இறசூல்நன்னபியே
உங்கள்துவாவின்பறக்கத்தாலே ஒன்றுங்குறைவில்லை
சஞ்சலமெல்லாம்நீங்கிப்போச்சுது தங்கள்வரவாலே
சூரியன்முன்னேபனிபோலெனக்குச் சுற்றமிகவாச்சு
பொழுதுபுறப்படவிருள்களோடிப் புகுந்தவாறாக
தங்களைக்கண்டவுடனேயெனக்குச் சரமும்நீங்கிப்போச்சு
ஆனால்தண்ணீர்தாகமுமெனக்குத் தணிந்திடவேயில்லை

நெஞ்சுமுலர்ந்துபோகுதுவின்று நெடியதாகத்தாலே
நாவுமுலர்ந்துபோகுதுவெனக்கு நடுங்கத்தாகத்தாலே
என்றுமன்சூர் நபியைப்பார்த்து இந்தப்படியேசொன்னார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போநபியுல்லா
மன்சூர்கொண்டதாகந்தணிந்திட மன்னர்நபியுல்லா
தோப்புக்கதிபதிகாவற்காரரை சீக்கிரமாயிங்கே
அழையுமென்ன தஹீயத்துக்கல்வி அஸ்ஹாபுவந்தார்
அவரைப்பார்த்துநபியுல்லாவும் அப்போதுசொன்னார்
சீக்கிரமாகமாதளங்கனியுஞ் சிறந்தமுந்திரியின்
கனியுங்கொண்டுவாருமென்றனர் சிங்கநபியுல்லா
அவ்வார்த்தையைக்காதிலேகேட்டு அதபுடன்கைகட்டி
நபிகளுக்கெல்லாம்நபியாய்வந்த நாயகமானவரே
நிலவைப்புவியிலழைத்துப்பேசிய நாயகமானவரே
மானின்பின்னாலாற்றைத்தாண்டிய வல்லநபியினாரே
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் நயினார்முஹம்மதுவே
என்னசொல்வேனதுசொல்வே னிறசூல்நன்னபியே
கண்ணிலும்நானுங்கண்டதில்லை காரணநன்னபியே
சொல்லவுமெனக்குபயமாயிருக்குது தூயநன்னபியே
சொல்லாமற்போனால்முடிகிறதில்லை சோதிநன்னபியே
என்னகாரணமேதுகாரண மெப்படிசொல்லிடுவேன்
நாலுமாதமாய்நம்முடதோப்பிலுள் நாளுந்தவறாமல்
பழுத்திடுங்கனிகளும்காய்களுங்காணேன் பாழாய்ப்போகுதது
தங்கள்பேரமாரிரண்டுபேருக்கும் தவறாமல்நானும்
அயலூர்பழங்களைவாங்கிக்கொடுக்கிறேன் அவர்கள் தான்தின்ன
பூதமோபரியோசின்னோதேவோ பேயோபிசாசோ
என்னவந்துதினந்தின்றுபோகுதோ யானொன்றுமறியேன்
நாடிவருகிறபெயர்களாரோ நடக்குமடியுங்காணேன்
தேடிவருகிறபேயர்களாரோ தெரிகிறதேயில்லை
காவலாகக்காத்துமிருந்தேன் கண்ணிற்பார்க்கவில்லை
என்னமாயமோவதுமாயமோ என்னென்றுசொல்வேன்
காணப்புதுமையாயிருக்குதுநபியே ஹபீபுறசூலே
ஆகையால்கனிநானெப்படிகொடுப்பேன் அறிவின்கடலாரே
என்றுதஹியத்துக்கல்வியர்சொல்ல இறசூல்நபிகேட்டு
என்னபுதுமையோஅறிவோமென்று இறசூல்நபியுல்லா
மன்சூர்தனக்குதாகந்தெளிந்திட மருந்துசெய்துகொடுத்து
சந்தோஷமாகஅவ்விடம்விட்டு எழுந்துநபியுல்லா
நாலுயார்களும்அஸ்ஹாபுமார்களும் நாலுபக்கஞ்சூழ
பள்ளிக்குவந்தார்பொழுதும்போனது பயகாம்பரப்போ
மகரிபுமேஷத்தொழுதுகொண்டார் மகிழ்வாயெல்லாரும்

அந்தவேளையில்நபிமுன்பாக ஆதிப்புலியலியார்
ஆதியின் தூதே அஹ்மதுநபியே யரசாய்வர்தவரே
வீட்டுக்குப்போகஎனக்குவிடைநீ ரிப்போது தாரும்
சீக்கிரமாகயெனக்குவிடைநீர் தந்திடும்நன்னபியே
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அலியின்முகம்பார்த்து
சந்தோஷமாகவீட்டுக்குபோகும் சிங்கப்புலியாரே
என்றசொல்லைக்காதிலேகேட்டு ஏகன்புலியலியார்
நபியினிடத்தில்விடையதைப்பெற்று நடந்தாரலிப்புலியார்
வீட்டுக்குப்போயினர் ஆதிப்புலியார் வெறுப்புமிகக்கொண்டு
முகமும்வாடி ஆதிப்புலியார் மெலிவுமிகக்கொண்டு
இருந்தார்பின்புநபியுல்லாவும் யார்களுமற்றோரும்
பள்ளியிலிருந்துவணங்கியபின்பு பாரநபியுல்லா
அஸ்ஹாபுமார்கள் தங்களைப்பார்த்து அப்போதுசொன்னார்
என்றன் அஸ்ஹாப்மார்களேகேளு மிப்போதென்சொல்லை
நம்மிடதோப்பினில்நித்தம்பழுத்திடும் நல்லக்காய்கனியை
நித்தமும்வந்துதின்றுபோரவர் யாரோதெரியவில்லை
கண்டுபிடித்திடவேணும்மந்தக் கள்வன் தனைக்காண
இன்னுமொன்றுமறிந்திடவேணு மெந்ததிசையானோ
எந்தகுலத்திலுதித்தவீரனோ யென்னபெயரானோ
கண்டிடவேணுஞ்சீக்கிரமாகக் கள்வன்றனையிங்கே
பிடித்துவாருங்கண்டறிவோம்நாம் பெரியகள்ளன்றனை
என்றுசொல்லநபியுல்லாவும் எழுந்தாரஸ்ஹாப்கள்
பலபலஆயுதமெல்லாம்பூட்டினர் பெரியசிங்கம்போல
தண்டாயுதமும்சக்கரமெடுத்தார் திரண்டகைவாளும்
கட்டி அம்புகளெல்லாமெடுத்தார் வானினிடிபோல
குதிரையின்பேரில்றாறஸ்ஹாபுகள் கேசரிதானிகராய்
ஏறியேநபிமுன்வந்தாரெல்லா மேகனருளாலே
வந்த அஸ்ஹாப்மார்களைக்கண்டு வல்லநபியுல்லா
ஆதியின்கிருபையினாலேநீங்க ளவிடம்தான்சென்று
பொல்லாபாவியானகள்வனை பிடித்துஇங்குவாரும்
அவனைவிடாமலென்றன்கிட்டே அடவாக்கொண்டுவாரும்
போங்களென்றுவிடையுங்கொடுத்தார் பெரியநபியுல்லா

## கள்வனைப்பிடிக்கப் போகுதல்.

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
சந்தோஷமாகமக்கத்தைவிட்டு தெருக்கள்தான் தாண்டி
புலியைப்போலபந்தங்கள்பேசி போனார்தோப்புக்கிட்டே
சுற்றிவளைத்துக்கொண்டுதோப்பை தூங்காமலெல்லோரும்
காவலாகவேகாத்திருந்தார் கள்வன்றனைப்பிடிக்க
இவ்விதமாய்யஸ்ஹாப்மார் களிருக்கும்வேளையிலே

கருமலைபோல்ஜின்னும்வந்தது கள்ளத்தனமாக
தோப்பினுள்புகுந்துகண்டாரெல்லாம் துஷ்டக்கொடியஜின்னை
நீண்டபனைமரம்போலவேயுடலும் நெடியபல்லுகளும்
சாலைப்போலவயிறுமாக சல்லடைபோல்கண்ணும்
சைவலம்போலவுடலில்ரோமமும் ஜாலநீண்டகையுங்
நகங்கள்வாச்சிபோல்இலங்கிட நாற்றவாடைவீச
தங்குதடையில்லாமற்றோப்பினுள் தனியாய்ப்பெரியஜின்னு
வந்ததைக்கண்டு அஸ்ஹாப்மாரெல்லாம் வந்துவளைத்துக்கொண்
அந்தவேளையில்கொடியஜின்னது அஸ்ஹாப்மாரையெல்லாம் [டார்
கட்டிவளைத்துப்பிடித்துக்கொண்டது கருமலையானஜின்னு
அந்தவேளையிலென்னச்செய்தார் அமறுமதியரும்
கோபமிகவுமாகியேஜின்னை குத்தினார்ஒருகுத்து
அந்தகுத்தினால் கொடியஜின்னது அசந்துமெய்நடுங்கி
பிடித்தஅஸ்ஹாப்மார்களையெல்லாம் பயந்துவிட்டுதப்போ
அஞ்சிப்பயந்துகொடியஜின்னது அமறுமாதியரை
பற்றிப்பிடித்துக்கொண்டது அவரை பாரசண்டைசெய்ய
அந்தவேளையில் அமறுமாதியும் அந்தஜின்னுடனே
கொஞ்சமுநெஞ்சு அஞ்சிடாமலே கொடியசண்டைசெய்தார்
ஒருவர்க்கொருவர்தோர்த்திடாமலே ஓங்கியடித்திடுவார்
அப்படிஅமறுமாதியுஞ்ஜின்னும் அந்நேரவேளையிலே
கண்டைகள்செய்தாரொருவற்கொருவர் சாமர்த்தியமாக
ஆதியைநினைத்தாரந்தவேளையில் அமறுமாதியரும்
உடனேமலக்குஒருவர்வந்துஜின்னை ஒடுங்கிவலியழிய
கொடியஜின்னைதலைபூமிமேற்றள்ளினர் கோடையிடியைபோல்
அமறுமாதியரைமார்மேலாக்கி அஸ்ஹாபேகேளும்
கொடியபாதகஜின்னைவிடாமல் கொண்டுபோய்நீரும்
நபியுல்லாவின்கிட்டேவிடுத்திடு மென்றுநீங்கிப்போனார்
அந்தவேளையிலம்மாதியும் அஸ்ஹாபெல்லாரும்
ஜின்னைப்பிடித்துகயிறினால்கட்டினார் திறமைகுன்றிப்போக
கட்டினகட்டால்ஜின்னைப்பிடித்து கள்ளனிவனென்று
ஹபீபுநபியுல்லாவின்முன்னங் கருத்தபெரியஜின்னை
கொண்டுபோய்விட்டார்நபியுல்லாவுங் கொடியஜின்னைப்பார்த்து
இன்னுமதுதோப்பையழித் தவனெந்ததேசமுள்ளான்
என்றுடனே அமறுமாதிய ரிரசூல்முகம்பார்த்து
பாதகன்தேயமும்பெயரையுமவனே பகரக்கேளுமென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
கொடியபாதகன் முகத்தைப்பார்த்து கொற்றநபியுல்லா
உன்றன்றேசமெந்தத்தேசமோ வுன்றன்பெயரொன்று
உன்னையாளும்இராஜன்பெயரையு மேதென்றுகேட்டார்

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அந்தவலியஜின்னு
நபியுல்லாவின் முகத்தைப்பார்த்துநான்சொல்லக்கேளும்
உன்றனன்சேவகர் களொன்றுடன் சண்டை யுரமாகச்செய்தார்
அதனாலடியேன் மெத்தவிளைத்து ஆங்காரம்போச்சு
தாகமும்பசியுமிகுதியாச்சுது தயவுள்ளகோவே
இறுகிறுவென்றுவருகிறதெனக்கு தாகப்பசியாலே
தாகமும்பசியுந்தணிப்பீராகில் சகலசங்கதியும்
தப்பிதமொன்றும்வராமற்படிக்குச் சீக்கிரஞ்சொல்லிடுவேன்
என்றுவிப்படிஜின்னதுசொல்லிட இறசூல்நபியுல்லா
கடங்கலொன்றுந்தான்சொல்லாமல் தீவிரமாயன்று
பேரமாரருக்காகவிருந்தது பெரியமலைக்குள்ளே
ரொட்டியுங்கூசாத்தண்ணீருஞ் சீக்கிரங்கொண்டுவாவென்றுசொன்னார்
உடனேகொண்டுவந்துகொடுத்தா ரொட்டியுந்தண்ணீரும்
அந்தத்தண்ணீரொட்டியைக்கண்டு அந்தப்பெரியஜின்னு
ஆதியைப்பார்த்துநபியைப்பார்த்து அல்லாதிருத்தூதே
நாயகமானநபியேகேளும் நித்தந்தவறாமல்
அரிசிநூறுகலமாக்கித்தின் பேனதுவும்பத்தாது
எண்பதுஆடுமறுத்துப்புசிப் பேனதுவும்பத்தாது
அப்படியிருக்கத்தின்னப்போதுமா அனலின்பசியாலே
எப்படித்தின்றுநான்பசியாறு வேனிறசூல்நன்னபியே
என்றுசொல்லிடஜின்தனைப்பார்த்து இறசூல்நபியுல்லா
பெருத்தமலைவோலிருக்கிறசின்னே பெரியோனருளாலே
தீராபசியுமுனக்குத்தீர்ந்திடும் தவனமுந்தணியும்
பிஸ்மில்சொல்லிதின்றிடுமென்றார் பெரியநபியுல்லா
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்பெரியஜின்னு
சந்தோஷமாகத்தின்றதுரொட்டியே தன்கையாலெடுத்து
தீராப்பசியுந்தீர்ந்துபோச்சுது தேவர்சொல்லாலே
அடங்கா தாகமு மடங்கிப்போச்சுது அந்நேரவேளையிலே
இந்தப்புதுமையைக்கண்ணாரக்கண்டு விருந்துண்டபெரியஜின்னு
என்றன்பெயரென்தேசப்பெயரு மிராஜன்பெயரோடு
படிப்படியாகத்தங்கள்முன்பினில் தவறாமலடியேன்
சொல்லிவருகிறேன்கேளுநபியே சிந்தாமணிமுத்தே
மலைகள்போலவே அடுக்கடுக்காகியமாடகூடங்களும்
மறுகுகள்தோறும்மலரால்கட்டிய தோரணவீதிகளும்
கட்டிலடங்காகடைகளும்விற்கும் காவலர்வீதிகளும்
ஜேஜேயென்றுசேனைகள்நடக்கும் சிங்காரவீதிகளும்
சொல்லிடமுடியாமேன்மைகளுடைய செல்வமிகப்பொங்கும்
சீருஞ்செல்வமுமுள்ளமகரிபு செழித்தவளநாடு
அந்தத்தேசததுக்கதிபதியானேன் அதிகாரம்பெற்றேன்

இராசருக்கெல்லாமிராசனுய்வந்த மலுக்கு மகராசன்
பெரியதடம்போல்மகுடந்தரித்த பெரியவலியராசன்
எண்பதுபாரவாளினையுடையோ எங்கள்பெரியராசன்
நூறிபாரதெண்டாயுதத்தை நேராயெடுக்கும்ராசன்
அன்பதுபார அம்பினையெடுக்கும் துரிக்கொப்பானராசன்
அன்பதுபாரவிட்டியையெடுக்கும் அதிகவீரராசன்
அவனுக்கு நிகரா யொருவருமில்லை ஆங்காரராசன்
சொல்லிடமுடியாவாழ்வினைடைய சுத்தவீரராசன்
கணக்கிட்டோதமுடியாபடையுள கனத்தவீரராசன்
பூதப்படையும்பத்துலட்சமாம் பெரியராசனுக்கு
குதிரைப்படையுமெட்டுலட்சமாம் கொல்லும்ராசனுக்கு
ஏழுலட்சமாம்ஜின்னின்படை கனென்றன்ராசனுக்கு
என்பதுலட்சம்சங்கிலிப்படையா மெந்தன்ராசனுக்கு
நல்லநாமிப்பிடையுங்கொடியாம் நல்லராசனுக்கு
அருக்கிப்படையுநாலுலட்சமாம் சூராராசருக்கு
ஆணின்வேசங்கொண்டபெண்படை அனந்தங்கோடியுண்டு
அவனோடெதிர்க்கஒருவருமில்லை அதிகவீரராசன்
கெட்டிக்காரன்கேசரியானவன் கெர்வமிகக்கொண்டோன்
தேசங்களெல்லாங்கைவசமாக்கி தீரவலிமைபெற்றோன்
வணங்காராசர்களெல்லாம்பயந்து வந்தெதிரில்நிற்க
ஜேஜேயென்றுராசர்கள்சூழ்ந்திட சிம்மாசனமுடையோன்
கட்டியங்கூறிகவரிகள்வீசிட காரிகைமார்சூழ
வெண்சாமரமும்வீசிடவேதியர் வெற்றிவிருதுகூற
ஆணுவங்கொண்டோன் அஞ்சாவீரன் அடங்காமன்னவனும்
அவனைப்போலிவ்வுலகையாள்பவர் யாருமில்லைநபியே
எதிரிகள்நமக்குஉலகினில்யாரு மில்லைநம்மோடு
எதிர்ப்பருண்டோகெலிப்பவருண்டோ எதிராளிகளில்லை
நம்மையடக்கிடஒருவருமில்லை நாடுசீமையெல்லாம்
நடுங்கிடதன்னரசாக்கி ஆள்கிறான் நபியேகெட்டிக்காரன்
தாங்களிருக்கிறதேசியவனுக்கு தானேதெரியாது
உங்கள்பெருமைவலிமையவனுக்கு வொன்றுந்தெரியாது
தனியாசென்றவனுலகினையாள்கிறான் தனித்தசிங்கம்போல்
அவனையடக்கிடஉலகில்யாரு மில்லைனன்நபியே
ஒருநாளெங்கள்பட்டணம்விட்டு ஏழுபேர்கூடி
தேசங்களெல்லாம்பார்த்துவருகையில தெரிந்ததுவிக்கரம்
இந்தப்பட்டணந்தன்னைச்சுற்றி பின்பமாய்வருகையிலே
தங்கள்தோப்பைகண்ணாலேகண்டோம் பெரியநன்னபியே
உள்ளேபுகுந்துசுற்றிப்பார்த்திட உள்ளமகிழ்வாச்சு
இதற்குச்சரியாயுலகினிற்றோப்பு எங்குமில்லையென்ன

என்றனிளைப்புச்சலிப்புமாறினே னிறசூல்நயினாரே
களைகளுநீங்கிசந்தோஷமாயினேன் கவலைமறந்துபோச்சு
சொர்க்கப்பதியின்தோப்புமிதற்கச் சரியல்லவென்று
பழுத்ததிலிருந்தகனிகளைப்பறித்தேன் பசியையாற்றிக்கொண்டேன்
இப்படியாகநானுமாதமா யிறசூல்நயினாரே
இந்தத்தோப்புக்குவந்துநான்போகுவேன் இளைப்புஞ்சலிப்புமாறி
கனிகளையருந்துகசக்கிதின்று களைகள்தனைநீக்கி
என்னிடம்பட்டணம்போ யினிடையவே னிவிடமில்லாமல்
அப்படியிருக்கயின் றுடங்களுட அஸ்ஹாபுமார்கள்கூடி
அடியேன்றனைப்பிடித்துவந்தனர் அடக்கியொடுக்கிப்போட
தங்கள்முன்னாலென்னையும்பிடித்து தானேகொண்டுவந்தார்
சகலசேதிகளெல்லாமும்முன் சொல்லிவந்தேனபியே
என்றன்தேசம்போகவெனக்கு விடைதரவேணுமென்றான்
கொடியபாதகன்ஜின்னைப்பார்த்து கூறினார்நபியுல்லா
என்னிடதீனில்வந்துநீகலிமா யோதிடவேணுமென்றார்
உனக்குச்சுவர்க்கவாழ்வதுங்கிடைக்கு மோதிடுகலிமாவை
நரகவேதனையெல்லாம்நீங்கிடு மோதிடுகலிமாவை
நல்லநல்லசுகங்கள்கிடைத்திடு மோதிடுகலிமாவை
என்றுசொல்லிடஜின்னதுகேட்டு ஏங்கிக்கிடிகலங்கி
வல்லநபியேயென்னுடவார்த்தையை வாகாநீகேளும்
என்னுடராசனிந்தவிதங்களை யறிந்துவிடுவானாகில்
துண்டுதுண்டாய்வெட்டிப்போடுவா னென்னையாமுன்னையுமே
உயிரோடிருந்திடவைக்கானம்மை ஓரேவெட்டில்கொல்வான்
எல்லாச்சேதியுந்தாங்களுங்கேட்டு ஒன்றுமறியார்போல்
உங்கள்தீனில்வரவோசொல்கிறீர் எப்படிநான்வருவேன்
உங்கள்சேனைகளெல்லாங்கண்டேன் ஓதிடவினிகேளும்
சொல்லிடவெனக்குநாவும்வரவில்லை சோதிநன்னபியே
படையின்தலைவர்கள்ராசன்கைகீழ் பதாதிமிகுந்தமுண்டு
உங்கள்படையெலாமொருவன்கைக்குப் பற்றாதொருபோதும்
பஞ்சுபஞ்சாய்பறந்துபோகுவார் படைவீரர்முன்னாலே
அப்படியிருக்கவெப்படிக்கலிமா அஞ்சாமற்படிப்பேன்
அவனையடக்கிடவும்மாலாகுமோ அல்லாதிருத்தூதே
அப்படியவனைவெட்டிகெலித்திட ஆகுமோ ஆனாக்கால்
அஞ்சாமல்நான் கலிமாஓதுவேன் அண்ணல் நன்னபியே
பயமில்லாமல்நான் கலிமாஓதுவேன் பயகாம்பரானவரே
இப்படிஜின்னு சொல்லிடநபியு மிறையோனருளாலே
உன்னிடராசன் சேனையைவெட்டிடவுதவியெனக்குச்செய்வான்
அலியாரொருவரே போதுமெனக்கு அவனைவெற்றிபெற
அஞ்சாமல்நீ கலிமாஓதிடு அல்லாவுதவிசெய்வான்

சலியாமல்நீ கலிமாஜதிடு சஞ்சலந்தான்போக
என்று நபியுல்லாவுஞ் சொல்லிட வின்பமுறுதி கொண்டு
தடங்கலொன்றுஞ் சொல்லாமல்ஜின் சீக்கிரமாய்ப்போ
கலிமாவோதி யீமான்கொண்டது ஹபீபு சொற்படியே
கலிமாவோதிட நபியுல்லாவுங் கருணைமிகப் பொங்கி
சையதென்று பேரும்வைத்தனர் சிறந்த நபியுல்லா
உடுமானங்களு முடுத்திடக்கொடுத்தா ருத்தநபியுல்லா
வெகுமதியெல்லாம் ஜின்னது வாங்கி வீரியமிகப் பொங்கி
நாயனபியே நபியுல்லாவே நான்சொல்லக்கேளும்
தங்கள்பெருமைகளை ராஜன்முன்பினில் சற்றுமஞ்சாமல்
சொல்லிடவெனக்கும் துவாநீர்செய்யும் செல்வமுள்ளநபியே
பயமில்லாம லெல்லாஞ்சொல்ல வாக்குவெனக்குத் தாரும்
என்னுடனொருவரைக் கூட்டியனுப்பு மிறசூல்நன்னபியே
தயிரியமாகப்போவென்றது தனியோனபிமுன்னே
அந்தச்சொல்லைக் காதிலேகேட்டு அஹ்மது நபியுல்லா
சந்தோஷமாக ஜின்னைப்பார்த்து சற்றும்நீ யஞ்சாதே
அல்லாதஹ்மத் துனக்குசெய்வா னவன்முன்நீபேசு
என்றன் சங்கதி யெல்லாஞ் சொல்லி ஒன்றுக்குமஞ்சாமல்
என்னவுனக்கு வேண்டுமோ யிருக்கிறது என்னைக்கேளுமென்றார்
நபிகளுக்கெல்லாம் நாயகமாகிய நாயனபியேகேள்
எனக்கொருகுறைவு மினிமேலில்லை யெல்லாமெனக்குண்டு
உங்கள்துவா பர்கத்தாலே யொன்றுங்குறையில்லை
வேண்டியதெல்லாங் கிடைத்ததெனக்கு வேண்டியதொன்றில்லை
போகிடவெனக்கு விடைநீர்தாரும் போறேனென்றிக்கு
என்றுசொல்லி நபியுல்லாவும் இன்பமிகப்பொங்கி
துணையாய்ப்போகிட இபுறுஹீமைச் சீக்கிரமாயழைத்து
மன்னவராகிய இபுறுஹீமே மனதுமகிழ்வாக
ஜின்னுடன்கூட நீரும்போகும் சேதிசொல்லிடகேள்
மகரிபானுமிராசனாகிய மலுக்குமுலுக்கு முன்பில்
நம்மிடதீனின் சேதிகளெல்லாம் நாணுவிதமாய்ச்சொல்லும்
என்னயதற்கு அவன்சொல்வானோ அதனைக் கேட்டுக்கொள்ளும்
நீங்கில்லாமல்சீக்கிரமாக இவ்விடம்வந்துசேரும்
என்றநானு விதமாய்ச்சொல்லி யிறசூல்நபியுல்லா
மேகங்குடையிட நபியுல்லாவும் வேதப்பள்ளிவிட்டு
எழுந்துவீட்டிற்குப் போனாரப்போ நிறஜோல்வேதாம்பர்
அந்தவேளையில் ஜிபுரயீலு மன்பத்தாணிறங்கி
ஆகியின்றதே யஹ்மதுநபியே அல்லாசலமுஞ் சொன்னான்
உன்றனக்கிந்த சேதியைநாய னோதிடவேசொன்னான்
அந்தசேதியு மென்னவென்று தஹ்மது நன்னபியே

ஜின்னைப்பிடிக்க ஆகாதலவில் திரண்டமானிடற்கு
அதிகவல்லமை வீரமுமுண்டு அந்தஜின்களுக்கு
தங்களிடத்தில் விடும்படியாக தனியோன் திருத்தூதே
வந்தோர்மலக்கு பிடித்துக்கொடுத்தார் வல்லோன்திருத்தூதே
ஆமாறுமாதியுர் தங்களிடத்தினி லவனைப்பிடித்துவந்தார்
ஆகையாலிந்த சீமையில்பெரிய சண்டையுமாகிவிடும்
அதிகப்படையும் வலிமையுமுள்ளவன் அடங்காவீரராஜன்
அலியார்தனக்கும் பதினுள்மட்டும் அடிக்குங் குளிர்க்காய்ச்சல்
அவரும்வெளியே வரக்கூடாது அந்தகான்மட்டும்
குளிருங்காற்றும் படக்கூடாது கொற்றஅலியார்க்கு
என்ன சண்டைகளானபோதிலும் மவர்க்குச்சொல்ல லாகாது
இப்படிநாயன் சொன்னுனென்று இறசூல் திருமுன்பில்
சொல்லிஜிபுரையீல் போனூர்வானம் சிறகைவிரித்துப் பறந்து
இந்தச்சேதிகள் தன்னைக்கேட்டு இறசூல் நபியுல்லா
அதிகவெண்ணமா யிருந்தாரன்று அல்லாதனைநாடி

## மலுக்கு ராஜனுக்குச் சேதி சொல்லல்.

இபுருஹீம்சையது ஜின்னும் எழுந்து மக்கம்விட்டு
காடுமலைகள் தொலைந்துநடந்தார் கானயாறுந்தாண்டி
தோப்புவனங்களைத் தாண்டித்தாண்டியே சொருசாகத் தானடந்
யிப்படியிருவரு மாகவேநடந்து இன்பமோடு செல்ல [தார்
நற்பதியாகிய மகரிபுபட்டணம் நாட்டைகண்ணிற்கண்டார்
மலைபோலுயர்ந்த கோட்டைமதிலுமாம் வாசற்படிபெரிதாம்
இரும்புமூலைகளடித்தக்கதவுமா மிலங்குங் கோட்டைகதவு
பட்டணத்துள்ளே புகுந்து இபுருஹீம்பார்த்தார் வேடிக்கைகள்
தெருக்கள்தோறுந் தோரணங்கட்டிய சிறந்த வீதிகளும்
அணியணியாகிய குதிரைப்பந்தியும் யானையின்பந்திகளும்
கெட்டமலைபோ லொட்டையின்பந்தியும் நிறைந்துவிருக்கக்கண்டார்
பல்லக்கேறிப் போகும்வீரரும் படையின்வீரர்களும்
யானையின்மீதி லேறிடும்வீரரும் குதிரைவீரர்களும்
கூட்டங்கூட்டமா யெங்கெணும்நிறைந்து கூடியிருப்போம்
மலைகள்போல ஜின்கள்திரிவது மன்னர்கண்ணிற் கண்டார்
முத்துமணிகள் பதித்தகொலுமேல் மன்னமுலுக்கு ராஜன்
மந்திரிமார்கள் சூழ்ந்தவிருந்திட மாமலுக்குராஜன்
ஜின்னின் படையின் தலைவமார்களுஞ் சுற்றிலுஞ் சூழ்ந்திருக்க
பூதப்படையின் தலைவமார்களும் பூராய்ச் சூழ்ந்திருக்க
சங்கிலிப்படையின் தலைவமார்களும் சேவெனவிருக்க
அருக்கிப்படையின் தலைவமார்களும் சூழ்ந்துகுடியிருக்க
உறாமிப்படையின் தலைவமார்களும் முறைமையாயருகிருக்க
கத்திகட்டாரி யீட்டிகள்பிடித்து காவலர் சூழ்ந்திருக்க

பெரியமலைப்போல்மகுடந்தரித்து பூரித்துமகிழ்ந்து
சிம்மாதனத்தின் மீதிலிருந்தனன் சிங்காமலுக்குராஜன்
இந்தவிதமாமலுக்குராஜ னிருந்திடுங் கொலுமுன்னே
நபினார்விடுத்த வசதுஜின்றோடு இபுறுஹீமுமாய்
நீண்டராஜன் முன்பினிற்சென்றார் நெருங்கிய சபைமுன்னே
அரசனைக்கண்டு சைதுஜின்றானு அடியேதொழுதுநின்றார்
இபுறுஹீமெனும்பஸ்காவென்பவர் சும்மாவெதிரில்நின்றார்
சங்கைகளொன்றுஞ் செய்யாநின்றார் சமர்த்தரிபுறாஹீம்
பணியாநின்றிட ராசன்கண்டு பாரக்கண்சிவந்து
பல்லைநெறநெறவெனக் கடித்துப் பகர்வானந்நேரம்
இந்தமனிதனாரெப்படியுள்ளவ னிவ்விடமேன் வந்தான்
எந்தனைப்பணிந்திடா நின்றவனியா ரெனக்குச் சொல்லுமென்றான்
அந்தச்சொல்லைக் காதிலேகேட்டு அப்போதிபுறுஹீம்
கொஞ்சமும் பயமில்லாமலப்போ கொடியோன்றனைப்பார்த்து
என்றனையாரென்றனைக்கேட்ட ராஜாவேகேளும்
என்றன்பெயரும் சீமையின்பெயரும் யான்சொல்லக்கேளும்
உந்தனிடத்துக்கு இப்போநான்வந்த உற்றசேதியைக்கேள்

## மக்கத்தின் சிறப்பைச் சொல்லுதல்.

என்றன்பட்டணமக்கமெனும்பதி இறசூல்பட்டணமாம்
சந்திரசூரியர் விலகியோடிடுஞ் சிறந்த மக்கநாடு
பறவைகளொன்று மெதிரில்பறந்திடா பள்ளியுள்ளநாடு
படைத்தோன்றஹமத் தென்னேரமிறங்கும் பாங்கானநாடு
வரிசைகள்மிகுந்த வளம்பதியாகிய வாகுள்ளநாடு
தேசத்திலுள்ளோ ரெல்லாம்வந்திடு சிறப்பானநாடு
இந்தவுலகினி லதற்குச்சரியா யொருநாடுமில்லை

## நபியுல்லாவின் சிறப்பைச் சொல்லுதல்.

அந்தநகருக் கதிபதியானோர் அஹ்மது நபியுல்லா
மூந்தவொளியினி லுதித்துப்பிறந்தவர் முஹம்மது நபியுல்லா
சந்திரன்பூமியில் வந்திடச்செய்தவர் சறுதார்நபியுல்லா
மானுக்குப்பிணையா யிருந்திடவந்தவர் வல்லநபியுல்லா
அரசிலேறியே பேசிடவந்தவர் அண்ணல்நபியுல்லா
காட்டினில்நீரை யழைத்தநந்நபி காரணநபியுல்லா
கேட்டிடுங்காரணங் காட்டிடும்நம்பி சேள்வின நபியுல்லா
அடங்காராஜரை யடைக்கிடும்வேதர் அஹ்மதுநபியுல்லா
எதிர்த்திடும்ராஜரை வெட்டிப்பிளந்திடும் எங்கள்நபியுல்லா
பொல்லாக்குபுரைக்களைத் துகடந்த பெரியநபியுல்லா
கலிமாபபயிரை யுலகினில்விதைத்த ஹபீபுநபியுல்லா
அவரிடகாரண முழுதுஞ்சொல்லிட ஆகாதெவராலும்
சொல்லிடவே என்றாலுமுடியா தூயநபியுல்லா

## நால்யார்களு மற்றவர்களுடைய பெருமையைச் சொல்லுதல்.

இந்தவரிசைகள் கொண்டகபிக்கு பிருக்கிறார்நால்யார்கள்
ஒருவர்க்கொருவர் வலுமையிலுயர்ந்தோர் உலகில்யாருமில்லே
சண்டைகளத்தில் போவாராகில் சற்றும் அஞ்சார்கள்
துண்டுதுண்டாக மண்டைகளுருண்டிட வெட்டிகெலித்திடுவார்
அவர்களோடெதிர்த்திட வுலகினில்யாரு மில்லேயெதிராய்
சிங்கமும்புலிகளும் பயந்திடுங்கண்டால் தீரவலிமையுடையோர்
யாளிகள்தேவுக ளெல்லாமஞ்சிடும் யார்கள்நால்வரிலே

## அலியார் பெருமையைச் சொல்லுதல்.

ஒருவர் அலியாரென் றுயிருக்கிறு ராசாநீகேளு
புலியுமெதிர்த்திட அஞ்சிடுமவர்க்கு பெரியபெரும்புலியாம்
சிங்கமும்மெதிர்க்க அஞ்சிடுமவர்க்கு பெரியசிங்கமவர்
தேவுகள்பரிகள் ஜின்களுமெதிர்க்க தீராதெவராலு
தவிடுபொடிபோல் போகுவரல்லது தயிரியஞ் செய்யார்கள்
பூனேக்குயெலிகள் பதுங்கும்போல பதுங்கியொளிப்பாரெல்லாம்
ஆட்டுக்கூட்டத்திலுட் புலிபாய்வதுபோல் அரிபோல்பாய்ந்திடுவார்
பருந்துக்குஞ்சினே யெடுத்திடுவராய்ப் பாய்ந்துஎடுத்திடுவார்
குடல்வேராகத் தலேவேராகக் கூட்டிவெட்டிடுவார்
தயிரின்குடம்போல் மூளேகள்சிதறிடத் தண்டத்தாலடிப்பார்
ஆறுபோல்ரத்த மோடிடவெட்டுவா ராதிப்புலியுல்லா
அவரோடெதிர்க்க வாகுமோவுலகில் அல்லாபெரும்புலியாம்

## துல்துல் குதிரையின் பெருமையைச் சொல்லுதல்.

இப்படிப்பட்டவ ரேறிடுங்குதிரைபோ லுலகில்குதிரையில்லே
இந்தக்குதிரைகள் போலவல்ல இலங்குந்துல்துலது
காற்றைப்போல பறந்துபோகிடும் கண்ணுக்குத்தெரியாமல்
ஏழுகடலேயுஞ் சேராய்க்கலக்கிடும் ஒருநொடிக்குள்ளாக
ஒலித்திடுமாகில் வானிடிபோலவே யுலகெல்லாமசையும்
ஒருநொடிக்குள்ளே யுலகெலாஞ்சுற்றிடுந் துல்துல்குதிரையது
எதிரில்வருவோர் தங்களேப்பல்லால் கடித்துயுதறிப்போடும்
பின்புறம்வந்தால் காலாலுதைத்து உயிரைப்போக்கிவிடும்
மேகத்தைபோலவே காற்றாய்ப்பறக்கும் வெற்றிக்களத்தினிலே
மின்னலேப்போல குதித்துமேபாய்ந்திடும் வேகதுல்துலது
காலால்ராஜர்கள் தலேயைப்பந்துபோல் காணப்பறக்கடிக்கும்
சங்கைமிதிப்பது போலவேதலேகளேக் காலால்தான்மிதிக்கும்
கண்களபிதுங்கிட பல்கலுதிர்ந்திடக் காலால்தானமிதிக்கும்
அந்தக்குதிரையின் பெருமையைச்சொல்ல ஆகாதெவராலும்
அது இவ்வுலகின் குதிரையல்ல அல்லாவறிவான்காண்

### சுல்பக்காரின் பெருமையைச் சொல்லுதல்.

அவர்கைதன்னில்பிடிக்கும் கத்தியி னதிசயஞ்சொல்லிடகேள்
இரும்பால்செய்தகத்திபோலல்ல இலங்குஞ்சுல்பக்கார்
மலைகளைவெட்டினால்தூள் தூளாக மண்ணில்கலந்துபோகும்
மகுடமுடிகள்பதித்தராசாக்கள் மண்டைகள்தனைத் துணிக்கும்
குதிரையானைகள் தலைகளைவெட்டியே குடித்திடும்ரத்தமதை
கண்ணினொளிகள் மயங்கிடும்வாளின் கனத்தசோதியாலே
மின்னலும்வெட்கிடும்பிரகாசத்தால் வெற்றியின்வாளாலே
தகதகவென்ன பிரகாசித்திடும் தரணிசுல்பக்கார்

### கம்பருடைய பெருமையைச் சொல்லுதல்.

அலியின்சேவகனாகவொருவ ரிருக்கிறார்கம்பரென்று
அவருடனெதிர்ப்போருலகினிலில்லை ஆண்மையுள்ளகம்பர்
அதிகசேவகனவர்வீரிய அண்ணலானகம்பர்
வெட்டுக்கஞ்சார்குத்துக்கஞ்சார் வெற்றியுள்ளகம்பர்
பட்டாக்கத்தியைக்கையிலெடுத்தால் படையெல்லாநடுங்கும்
உயிருக்குத்துணிந்தவரா னாருக்குமஞ்சா ருற்றிடுஞ்சண்டையிலே
எதிர்த்தோருயிரைவாங்கத்திர்க்கேவு மூர்க்கமிகவுடையார்
இப்படியெல்லாமகாராஜன்முன்பில் இபுறாஹீம்சொன்னார்
மலுக்குராசனைஜின்னதுபார்த்து மன்னவனேகேளும்
அப்படிப்பட்டவீரரிலொருவ ரென்னைக்கண்டவுடனே
என்னுடனெதிர்த்துச்சண்டைகள்செய்து என்றன்வலியொடுங்க
பின்கட்டாகஎன்றனைக்கட்டிப் பிடித்தார்தன்கையால்
மன்னவர்க்கெல்லாமன்னவராகிய முஹம்மதுநபிகிட்டே
கொண்டுபோய்விட்டாரென்னைமுன்பில் கொஞ்சமுமஞ்சாமல்
அடியென்றனைக்கண்டனராகி அஹ்மதுநபியுல்லா
அதிகக்கிருபையுஞ்செய்தாரென்மேல் அஹ்மதுநபியுல்லா
அவருடதோப்பையழித்துப்போட்டே னதையும்பொறுத்துக்
வேறேயொருவரானாலென்னை வெட்டால்விடமாட்டார் [கொண்டார்
என்னிடமிருந்தகுறைகளைக்கண்டு இரக்கமிகவுஞ்செய்து
வெட்டவுமில்லைத்திட்டவுமில்லை வருத்தங்கொடுக்கவில்லை
என்றன்றுகப்பசியினைத்தீர்த்து என்னையனுப்பிவிட்டார்
அவருக்கிணையாயுலகில்ராச ராருமில்லைதுரையே

### மலுக்கு ராஜன் சொல்லுதல்.

இப்படிஸைபிதுஜின்னதுசொல்லிடக் கேட்டுமலுக்குராஜன்
கண்களிரண்டும்சிவந்துபோச்சுது கனத்தராசர்க்கு
உருட்டிமிரட்டிஜின்னதைப்பார்த்து ஓதினான்ராசன
இரண்டாயிரவருஷகாலமா யாண்டுவருகிறேன் நான்
என்னைப்போலவொருவருமுண்டோ இந்தவுலகையாள்வோர்
என்னோடெதிர்க்கும்மராசர்களுண்டோ இந்தவுலகுதன்னில்

என்னையல்லாவிராசர்களுண்டோ இந்தவுலகுதனில்
மக்கமென்றோருராதுமுண்டோ இந்தவையகத்தில்
முஹம்மதுவென்றொருராசனுமுண்டோ வெற்றிப்படையுடை
அஞ்சிடவெட்டும்வீரசூரனுமலியென்றமுண்டோ [யோன்
அவனோடெதிர்க்கவொருவருமிந்த வுலகில்தானில்லையோ
கத்திபிடித்திடுஞ்சேவகனாகிய கம்பர்தானுண்டோ
கண்டதுமில்லைநான்கேட்டதுமில்லை நான்கனவிலறிவேனாகில்
துண்டுதுண்டாய்வெட்டியெறிந்திடச் செய்வேனொருநொடியில்
பூதப்படையோர்தனக்குச்சொல்லினால் பொடிபடச்செய்திடுவார்
ஜின்னின்படையோர்தனக்குச்சொல்லினால் சேதப்படுத்திடுவார்
பரியின்தலைவர்மார்க்குச்சொல்லினால் பாழ்படுத்திடுவார்
சங்கிப்படையோர்தனக்குச்சொல்லினால் சாம்பலாக்கிவிடுவார்
துருக்கிப்படையோர்தனக்குச்சொல்லினால் தூள்படுத்திடுவார்
உஜாமிப்படையோர்தனக்குச்சொல்லினால் உருளவெட்டிடுவார்
அப்படியிருக்கவென்னைக்கெலிப்போ ரவனிதனிலுண்டோ
என்படைத்தலைவர்மார்க்குச்சொல்லினால் லொருவன்போதாதோ
இன்னமென்னிடகத்தினையெடுப்போரிந்தவுலகிலுண்டோ
எடுக்காவிடிலுமசைப்பவருண்டோ என்கையம்பதனை
தண்டாயுதத்தை பூமியைவிட்டுத் தானேயெடுப்பாருண்டோ
சக்கரந்தன்னைக்கையிற்பிடித்துச் சுழட்டுவார்களுண்டோ
தேவர்கூட்டங்களானபோதிலும் முன்னிலும்வருவரோ
கடலைக்கலக்குவேன்சேறாய்ப்போகிட என்றன்காலாலே
மலைகளைத்தூளாய்ப்பறக்கச்செய்குவேன் தண்டத்தடியாலே
பெரியநெருப்பினையவித்திடமுடியுமோ பனிநீர்தன்னாலே
வலியசிங்கத்தைநரிகள்கூடி வெருட்டமுடிந்திடுமா
கிரிப்பிள்ளையைக்கொன்றிடநாகமுங் கிட்டேபோகிடுமா
சிறியமீன்களெல்லாங்கூடி சுறாவைவென்றிடுமா
பாம்பினைத்தேரைகள்கடித்துக்கொன்றிடப் பாய்ந்துகெலித்திடுமா
புலியினையாடுகள்கூடிவெருட்டிப் புந்திதுணிந்திடுமா
ஏழுசான்மனிதனாலாகுமாவென்னைக் கெலித்துவெல்லப்படையால்
பஞ்சையாய்ப்பிறந்தமனிதனாலாகுமா என்னைகெலித்துவெல்ல
ஏழைமனிதனெதிர்த்திடலாகுமா என்னைகெலித்துவெல்ல
சிறியமனிதனெதிர்த்திடலாகுமா என்னைகெலித்துவெல்ல
கிலுகிலுவென்றுசிரித்தானையா ராசாமாமலுக்கு
மீசைமேல்கையைப்போட்டானையா ராசாமாமலுக்கு
நல்லதுநல்லது அறிவேனென்றான் ராசாமாமலுக்கு
பல்லைநெறநெறவென்றுகடித்தான ராசாமாமலுக்கு
என்னைக்கெலித்திட வருவோர்தனக்கு இரும்புமனதுவேணும்
ஆயிரங்கைகளுமாயிரங்கால்களு மாயிரமுடல்வேணும்

அப்படிப்பட்டவர்வந்தபோதிலும் நம்மால்மாண்டிடுவார்
ஏழுசாண்மனிதனாலென்னைவெல்லுமா னென்றுசொன்னாபடா
மக்கமென்றோதுமூரையும்பிடித்துக் கோட்டையுந்தானிடித்து
மண்ணோடுமண்ணாககலந்துபோடுவேன் மடையாயறியாயோ
அவ்வூரானாமுஹம்மதைவெட்டி அழித்துக்கெடுத்திடுவேன்
அலியென்போனைதுண்டாய்வெட்டி யறுப்பேன்வன்றலையை
சேவகனாகியவீரியமுள்ள கம்பர்தலையோடு
சின்னபின்னமாயங்குள்ளோரைச் சிறைநான்பிடித்திடுவேன்
இப்படிநானுஞ்செய்யாமற்போனால் என்பேர்மலுக்கல்ல
பேடிக்கெல்லாம்பேடியானவன் பெட்டைநானாயிடுவேன்
இப்படியந்தப்பாஷைகள்சொல்லியே யிடிப்போற்சத்தமிட்டு
தன்னருகிலிருக்கும்ராசரைப்பார்த்து சொல்வான்ராசாவும்
என்னிடசேவகமார்களேநீங்க ளெல்லாருங்கேளும்
காதுகொடுத்துக்கேட்டும்நீங்கள் கடுகவென்சொல்லை
எனக்குயெதிரிகளில்லையென் றிருந்தே னிந்தநாளைக்குப்பின்
எதிரியாய்முஹம்மதென்றொருவனுதித்தான் என்னைக்கெலிக்கவென்று
மக்கமாநகரையாள்கிறானென்று மகாகெட்டிக்காரன்
சேவகப்பாடியலியாரென்றும் ரூகன்கம்பரென்றும்
இப்படிப்பட்டவரிருக்கிறசேதியை யின்றுநான்கேட்டேன்
இனிமேல்சும்மாவிருப்பதெனக்கு ஆண்மைதனமல்ல
கேட்டிருப்பதுபேடிகள்வேலை பெண்டுதனத்தார்வேலை.
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால் முடிக்கவேணுஞ்சண்டை
சத்துவமுள்ள ஆண்பிள்ளையானால் சண்டைசெய்யவேணும்
மக்காநாட்டையுமுஹம்மதுதன்னையுமன்னரலிதனையும்
சேவகர்கம்பர் இவர்கள்தலையை சீக்கிரமாயறுத்து
நாட்டையுமழித்துபெண்டுபிள்ளைகளை நானினைத்தபடியே
சிறையாய்ப்பிடித்துவருபவரிதில்யார் சொல்லிடுமெனக்கேட்டான்

## இராஜனுக்கு மற்ற இராஜாக்கள் சொல்லுவது.

அந்தசொல்லைக்காதிலேகேட்டு அரசன்படைத்தலைவர்
கைகளைக்கட்டியெதிரினில்நின்று கனத்தராசாவே
எங்கள்சொல்லைக்காதுகொடுத்துநீ யின்பமாககேளும்
இராசருக்கெல்லாமிராசனாகிய ராசாமாமலுக்கே
எங்களையாண்டிடுவீராசூரா ராசாமாமலுக்கே
உன்னைக்கெலித்திடவுலகிலுண்டோ எங்கள்ராசாவே
தேவாதிதேவர்களானபோதிலும் திருமுன்வருவாரோ
முனிகள்கோடியாய்த்திரண்டபோதிலு முன்னில்வருவாரோ
பூதகுலத்தாருன்னைக்கண்டால் போக்கிடுவாருயிரை
ஜின்னின்குலத்தார்கண்டபோதிலும் திடுக்கிட்டுசாவார்
தேவுகூட்டங்கண்டபோதிலும் திகிலிட்டுச்சாவார்

அப்படியிருக்களவருன்னோடு எதிராளியாவார்
மலைகளும்பொடிப்பொடியாகுமே மகாராசாவே
கடல்களுஞ்சேறுப்பபோகுமுன்காலால் கனத்தராசாவே
எளியோர்நாங்களெத்தனைபேரோ யிருக்கிறோமுன்கிட்டே
எங்களைமாத்திரமேவிடுற்போதும் எதிராளிபேரில்
கோட்டைகள்தன்னையிடித்துப்போடுவோம் கொற்றராசாவே
நாட்டையிடித்துநாசமுஞ்செய்வோம் நல்லராசாவே
தலைகளையறுத்துக்கொண்டுநாம்வருவோம் தைரியராசாவே
மலைகளைப்பஞ்சாய்பறக்கச்செய்வோ மன்னராசாவே
இலைகளையுதிர்க்குபபோலவெட்டுவோ மெங்கள்ராசாவே
தங்கள்சொற்படிநடத்திநாங்கள் சிக்கிரஞ்செய்திடுவோம்
எங்களையனுப்பினால்போவோம்சண்டைக்கு எங்கள்ராசாவே
இப்படித்தாங்களசொல்வதுசரியா எங்கள்ராசாவே
நாங்களிருக்கநீர்போவதுஞாயமோ நாயகராசாவே
உத்தரவுவிந்தால்செய்துமுடிப்போ மொருநொடிக்குள்ளாக
அனுப்பிடுமென்றுசொன்னாரெல்லா மரசனமுழுக்குடனே
அந்தச்சொல்லைகாதிலேகேட்டு ராசாமாமலுக்கு
சந்தோஷமெனமேலாகப்பொங்கிற்று ராசர்க்கானாலும்
நல்லதுநல்லதுயென்றுசொன்னா னமற்றராசன்
அந்தம்வேளையில்பொழுதுபோச்சுது அப்போராசாவும்
எல்லாம்வீட்டுக்குப்போங்களிப்போ நாளைவாருமென்றான்
அந்தசொல்லைக்காதிலேகேட்டு அரசரெல்லாரும்
பாதம்பணிந்துஅவரவர்வீட்டுக்கு போனாரெல்லோரும்
இராசனெழுந்துஅரண்மனைபோனான் ராணுவர்தனைவிட்டு

## இராஜன்தேவி கனவுகாணல்.

அரண்மனைபுகுந்தானமலுக்குராசனு மந்நேரவேளையிலே
தாதிபெண்களெதிரில்வந்தார் தண்ணீர்தனைக்கொண்டு
பாதத்தைக்கழுவியோர்விருப்பின்னவிரித்துப் பாராசர்க்கு
விதவிதமானகறிகளும்வைத்தார் வேணவஸ்துவெல்லாம்
குடிக்கப்பனிநீர்கொண்டுவைத்தனர் கொற்றவன்முன்பாக
அப்போராசன்போசனமுண்டு ஆங்காரத்தோடு
முத்துகள்பதித்தபஞ்சணைமேலே முடிமன்னராசன்
குந்தயிருக்கையில்மனைவியும்வந்து கூடவுட்கார்ந்தாள்
இருவருமாகதாம்பூலந்தரித்து யிருந்தார்மகிழ்வாக
சந்தனமத்தர்சவ்வாதோடு தாங்கள பூசிக்கொண்டு
சந்தோஷமாகபடுத்துத்தூங்கினார் சகலமுந்தூங்கினது
அந்தம்வேளையில்ராசன்மனைவி யவளொருகனவுகண்டு
திடுக்கெனவெழுந்தாள்கலக்கமுங்கொண்டு ராசன்தேவியரும்
படபடவென நெஞ்சடித்திட எழுந்தார்தேவியரும்

குளறிக்குளறிதட்டியெழுப்பினள் ராசாவைக்கன்னி
என்னையெழுப்பியவயணமுமென்ன என்றன்தேவியரே
கண்ணின்மணியேகாமக்குயிலே கண்ணானபெண்ணாட்டியே
எனஅசொல்லவெழுப்பினயென்னைச் சொல்லென்றுகேட்டான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதேவியரும்
இராசனுக்கெல்லாமிராசாவாகிய ராசாவேகேளும்
இராத்திரிவேளையில் தூங்கிடும்போது நானோர்கனவுகண்டேன்
சேகவப்பாடியொருவன் குதிரைமேல் சிங்கம்போலேறி
உருவியகத்தியைக்கையிலேபிடித்து ஊருக்குள்ளேவந்தான்
ஆலமரத்தைஅவன்வெட்டிப்போட்டா னுங்காரங்கொண்டு
தழைத்தமரத்தையவன்வெட்டியேபோட்டான் தடையுமில்லாமல்
அம்மரநிழலிலிருந்தபேரெல்லா பழுதுமலையக்கண்டேன்
வேரோடுமரத்தையுபிடுங்கிஎறிந்திட விசனம்பெருகக்கண்டேன்
பரதேசிபோல்நாலுபக்கந்திடப் பதைத்துஅழவேகண்டேன்
நம்மிடதேசஜனங்களைவெட்டிட நானோர்கனவுகண்டேன்
தன்னினமாக்கிடக்கண்டேன்ராசனே சஞ்சலமிகவாக
இந்தவிதங்களைசொல்லிடுமெனக்கு இந்தவெண்ணம்நீங்க
கண்டகனவதுபொலலாக்கனவாய்க் காணுதுராசாவே
இன்னங்கைகால்நடுக்கமுந்திடுக்கமும் நிற்கிலேராசாவே
என்றுமனைவியாள்சொல்லிடக்கேட்டு எங்கிமலுக்குராசன்
சித்திரம்போலச்சும்மாவிருந்தான் சிலநேரமட்டும்
எந்தன்பிராணநாதாவேநீயென்ன மயக்கங்கொண்டாய்
சொன்னகனவிற்குப்பொருள்சொல்லாமல் சும்மாவிருக்கிறயே
ஏனோயெனக்கு அடிக்கடிவிசனம் வருகுதுராசாவே

## இராஜன் மனைவிக்குச் சொல்லுதல்.

என்னடிபெண்ணேயென்கண்மணியே யொன்றுக்குமஞ்சாதே
காமக்கூடேகாமத்தேனே கண்மணிநாயகியே
கிளிபால்கொஞ்சிப்பேசிடுமென்றன் கிஞ்சுகநாயகியே
அன்னம்போலேநடையினையுடைய அழகுநாயகமியே
முக்கனிதன்னைப்பழித்திடுஞ்சொல்லின் மோகினிநாயகியே
நீகண்டகனவதுநல்லகனவடி நரணநாயகியே
நம்மையெதிர்த்திடநாடியபேருக்கு நாளுமாகாது
கொடியவருத்தங்கள்பெறுவாரென்கையில் கூட்டங்கூட்டமாக
தவிடுபொடிபோலதுண்டுதுண்டாய் சேதமாய்மடிவார்
நமக்கொருதீங்குமிதனுலில்லை நடக்கும்சயமிகுதி
அஞ்சாதேயென றுதைரியஞ்சொன்னுன் ராசாமாமுலுக்கு

## இராஜன் விசனப்படுதல்.

மனைவியாள்கண்டகனவினைநினைத்து ராசாமாமுலுக்கு
கால்லொணுவிசனமாகினுன் ராசாமாமுலுக்கு

தலையைக்கவிழ்த்துச்சஞ்சலம்மாகினன் ராசாமாமலுக்கு
பலவிதமாயோசனைசெய்தான் ராசாமாமலுக்கு
வெறிகொண்டாற்போல்கலக்கமாகினன் ராசாமாமலுக்கு
சேதமும்நமக்குவந்ததென்றெண்ணித் திகைத்தான்மாமலுக்கு
நித்திரையற்றுப்போச்சுதுமென்மேல் நீளமுடிராசற்கு
நிலத்தினைக்கிறி யோசனைசெய்வார் நெஞ்சுகலக்கமாகி
பஞ்சணைமெத்தைதன்னையும்விட்டான் படுத்தான்திகிலாகி
என்னசெய்வோமாமேதுசெய்வோ என்றுமிகவாடி
தீயினிலிட்டமெழுகதுபோல திரேகமிகவுருகி
தயிரின்குடம்போல்வல்லமைசிந்திடத் தயிரியந்தனைவிட்டான்
மணலின்போட்டமீனதுபோல மனதுபதைபதைத்தது
தன்னிடசாமியையமனதில்நினைத்துத் தயிரியமுஞ்செய்வான்
இவ்விதமாகராசாமாமலுக்கு இருந்தான்சஞ்சலமாய்
இப்படியிருக்கையில்பொழுதுவிடிந்தது எழுந்தான்மாமலுக்கு
வாத்தியமுழங்கிடமேளங்களூதிட ராசாமாமலுக்கு

## படைத்தலைவர்கள் கொலுமுன் வருகுதல்.

பூதப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
சங்கிலிப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
துருக்கிப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
பயிரின்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
றாமிப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
யானைப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
குதிரைப்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
காலாட்படையின் தலைவமார்களும் வந்தார்கொலுமுன்னே
இப்படியாகராசர்களெல்லாம் இலங்குங்கொலுமுன்பில்
மகுடமணிந்துமலைபோலிருக்கு மலுக்குராசனைக்கண்டு
பாதம்பணிந்துதண்டமுஞ்செய்து பண்பாய்த்தான்போற்றி
அருகினிலிருந்தராசர்களெல்லாம் அஞ்சிநடுநடுங்கி
மந்திரிமார்களுஞ்சுற்றிலுமிருந்தார் மலுக்குராசர்க்கு
தந்திரிமார்களுஞ்சுற்றிலுமிருந்தார் மலுக்குராசர்க்கு
அந்தவேளையிலென்னவாச்சுது ராசாவுக்கானும்
ஒருவனுடனும்பேசிடவில்லை யுயர்பதிராசாவும்
சஞ்சலமேன்மேலாகப்பொங்குது சண்டாளராசர்க்கு
விசனமேன்மேலாகப்பொங்குது வேந்தன்ராசாவுக்கு
பொன்னையும்நினையான்பொருளையும்நினையான் பூமிதனையறியான்
பெண்ணையும்நினையான்பசுவையும்நினையான் பெரியவிசனத்தாலே
தேகமும்நினையானுசைநினையான் சீமைதனையுநினையான்
செம்பொன்மணியின்சிம்மாதனத்தைச் சிந்தையுளதானினையான்
அன்னையைநினையான் தந்தையைநினையா னுளும்புவியைநினையான்

நலத்தையுநினையான்குலத்தையுநினையான் தலத்தையுந்தாநினையான்
பெலத்தையுநினையான் சலத்தையுநினையான் பின்பெலவயுநினையான்
மக்கமுஹம்மதுயலியார்கம்பரை மனதில்தானினைப்பான்
எப்படியவர்களை கெலித்திடுவோமென இதுவேநினைப்பானும்
வாழ்வினைவிட்டு வலியினைவிட்டு வன்பதைத்தனைநினைத்து
தலைநோய்கொண்டாற்போலவே கையாற்றலையை பிடித்துக்கொண்டான்
இப்படிமலுக்குராசனிருக்கிற இடைஞ்சல்தனைக்கண்டு

## படைத்தலைவர்கள் சொல்லுதல்.

மற்றுமுண்டானராசர்களெல்லா மன்னன்றனைநோக்கி
பென்னையாளும்ராசாவேநீ யென்னவிதத்தாலே
இப்படிவிசனமாயிருக்கிறீர் எங்களுடன்சொல்லும்
என்னவேலைகளிருந்தபோதிலு மெங்களுடன்சொல்லும்
கண்ணொடிப்பொழுதியில்செய்துமுடிப்போம் கதிர்முடிமன்னவனே
நீ-காலால்காட்டினால் தடையில்லாமல் கையால்செய்திடுவோம்
மலைகளைத் தூளாயிடித்திடச்சொன்னால் மலைகளைத்தூள்செய்வோம்
நாட்டையழித்திடச்செலவுநீதந்தால் நொடியிலழித்திடுவோம்
கடலைக்கலக்கிடச்சொல்வாயாகில் காலால்கலக்கிடுவோம்
மலைகளைத்தூளாய்ப்பறந்திட கையால்வாரிப்பிசைந்திடுவோம்
உன்றன்சொல்லுக்குத்தடங்கலுமுண்டோ உனக்குஎதிரியுண்டோ
உறங்கினமுகமாயிருக்கிறகாரிய மெங்களுக்குச்சொல்லும்

## இராஜன் படைவீரருக்குச் சொல்லுதல்.

என்னிடபடையின்றலைவமார்களே யான்சொல்லக்கேளும்
என்னிடசேனையின்றலைவமார்களே யான்சொல்லக்கேளும்
காதுகொடுத்துச்சந்தோஷமாகக் கவனமாசக்கேளும்
நான்இரண்டாயிரவருஷகாலம் இராசனாயிருந்து
ராசர்க்கெல்லாம்ராசாதிபதியாய் ராச்சிநாளுண்டேன்
இதுநாள்வரைக்குஎனக்கெதிரிக ளில்லையென்றிருந்தேன்
இந்நாளையிலெனக்குப்பகைவனா யொருவன்தானுதித்தான்
தனியராசனாகநானாண்டுவருகையில் சதிகாரனுதித்தான்
மக்கமாநகரில்முஹம்மதென்றொருவ னிருக்கிறானவன்கூட
வாளலியென்றொருவீரனுமுண்டு வாசிபிடிக்கும்பயல்
பொல்லாப்பயலாங்கம்பரென்னும் பூசலில்வல்லவனும்
இவர்களைவெட்டிடஎண்ணமுஞ்சலிப்பு மிருக்குதுஎன்மனதில்
வேறொரெண்ணமுஞ்சலிப்புமில்லை வெட்டிப்போடுமட்டும்
அந்தப்பதியைப்பிடிக்கவேணு மக்கத்தைபிடிக்கவேணும்
மூவர்தலையுமனமஞ்சாமல் முடிகியறக்கவேணும்
அவர்கள்தலையையென்முன்பாக கொண்டுவந்திடவேணும்
அங்குள்ளசனங்களைச்சிறையாய்ப்பிடித்துக்கொண்டுவரவேணும்

இப்படிச்செய்தால்சலிப்புமில்லை யெண்ணமொன்றுமில்லை
இதனால்நாஞ்சலிப்பாயிருக்கிறேனென்றான் மாமலுக்கு

## பூதராஜன் சொல்லுதல்.

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
ஐயாகேளும்ராசனேகேளும் அடியேன்சொல்லுகிறேன்
அதிகப்படையிலையுள்ளராசாநீ அதிகாரமுள்ளோன்
எதிரியில்லாமல்நீயுலகிலை யாண்டா யித்தனைநாளாக
உன்னைகெலித்துடுவார்களுமுண்டோ இந்தவுலகுதனில்
எதிர்த்துக்கெலித்துடுவார்களுமுண்டோ இந்தவுலகுதனில்
கண்ணாலுன்னைக்காண்பாராகில் கலங்கிமடிந்துபோவார்
தயிரின்குடம்போலுடைவரல்லது சண்டைக்குவருவாரோ
நாடுதேசங்கள்தன்னையழித்திட நானொருவன்போதும்
மக்கமாநகரையிடிப்பேன்தூளாய் மண்ணாய்ப்போகச்செய்வேன்
மூஹம்மதென்பவன் தலையினைவெட்டி முன்னம்வைத்திடுவேன்
அலியின்தலையதுதுண்டாய்வீழ்ந்திட அறுத்துக்கொண்டுதருவேன்
கம்பர்தலைபைத்திரிகியறுத்துக் கையிலெடுத்துவிடுவேன்
பெண்டுபிள்ளைகளைச்சிறையாய்சேர்த்து பிடித்துவந்திடுவேன்
மலைகளைச்செந்தூளாகப்பறந்திட கொடியினுட்செய்திடுவேன்
அலைகடல்சேறாய்ப்போகச்செய்குவேன் அண்ணல்ராசாவே
காற்றாய்ப்பறந்திடும்பேர்களைநினைத்துக் கலக்கம்படலாமோ
பஞ்சாய்ப்பறந்திடும்பேர்களைநினைத்துக் சஞ்சலப்படலாமோ
ஏழைமனிதர்கள்தன்னைநினைத்து எண்ணப்படலாமோ
சிறியகுலத்தின்பேர்களைநினைத்துச் சிந்தனைப்படலாமோ

## மலுக்குராஜன் சொல்லுதல்.

இந்தபேச்சைக்காதிலேகேட்டு ஈனங்கெட்டராசன்
கட்டினிலடங்காச்சந்தோஷமாயினான் கனத்தராசாவும்
என்னிடபூதராசனேகேளும் இப்படிநீசெய்தால்
என்னிடதேசம்பாதிதருகுவேன் என்மகளுநினைப்பேன்
எனக்கதிபதியாயுன்னைவைத்துநா னென்னருகினில்வைப்பேன்
சீக்கிரமாகநீசொல்லியபடியே செய்துமுடித்துவாரும்
தீவிரமாகநீசொல்லியபடியே தீரமுடித்துவாரும்
தடையில்லாமலவ்விடம்போய்நீ தலைகளைக்கொண்டுவாராய்
இப்படிமலுக்குமன்னன்சொல்லிட எழுந்தான்பெரும்பூதம்
மலுக்குராசனை மென்மேல்போற்றி மன்னன் விடைவாங்கி

## பூதராஜன் மக்கம்வருதல்.

வீட்டுக்குப்போனால்கொடியபூதமும் வீறுமிகப்பேசி
கைகாலலம்பிப்போசனமுண்ணக் கொண்டுவரவேசொன்னான்
நூறுகலமாங்கோதுமையரிசியை நொடிக்குள்சமைத்தார்கள்
ஒட்டகமுப்பதுமறுத்துச்சமைத்தா ரொருநொடிக்குள்ளாக

எதிரில்கொண்டதைவைத்தார்பூதரும் எடுத்துப்பசியாறி
இருபதுபாரவாளினையெடுத்தான் பூதராசாவும்
இருபத்துநாலுபாரதண்டத்தை எடுத்துக்கையிற்பிடித்தான்
பத்துப்பாரஅம்பினையெடுத்துப் பிடித்தான்கைதனிலே
சக்கரஞ்சுருட்டிகத்தியையெடுத்துத் தடக்கையிற்பிடித்தான்
சந்தனமரைத்துமாரில்பூசினான் ஜவ்வாதுகூட்டி
நூற்றிப்பதினாறுமுழந்தனவாகிய நீண்டபூதராசன்
நெடுமலைபோலேராசன்முன்வந்து நின்றான்பெரும்பூதம்
பூதத்தைக்கண்டுராசாவுக்குப் பூரிப்புமாச்சு
பயமில்லாமலவர்களைவெட்டிப் பழியைவாங்கிடுவான்
ஐயமும்பெருவானச்சமுமில்லாமல் தத்துவமுள்ளபூதம்
என்றுபலபலவிதமாயெண்ணினான் இராசாமாமலுக்கு
மன்னனைப்போற்றிப்பூதராசனும் விடைதாருமென்றான்
அந்தச்சொல்லைகாதிலேகேட்டு அண்ணல்மாமலுக்கு
சந்தோஷமாகப்பூதத்தைப்பார்த்துச் சொல்லுவான்ராசன்
ஜின்னின்படைகளுடனேநீயும் போவெனவிடைகொடுத்தான்
மலுக்குராசன்சொல்லிடப்பூதம் மனதுமிகமகிழ்ந்து
வெங்கலத்தேரின்மேலேயேறினான் வீரியபூதராசன்
ஜின்னின்படைகள்சூழ்ந்திடப்பூதம் தேர்மேலேறினனே
ஆகாயமார்க்கமாகப்பறந்திட விட்டான்தன்தேரை
நானாவாத்தியந்தான்மேல்முழங்கிட நடத்தினான்தேரை
தாரைசின்னரிதிண்டமம்பம்பை தாரைகளூதிடவும்
சின்னம்பேரிகைதம்பட்டமோசைகள் செவிகளடைத்திடவே
செந்துளெழுந்துசூரியன்வெயிலைச் சேரமறைந்திடவே
கருந்துலெழுந்துபோனதுவானின் கதிரைமறைத்திடவே
ஜேஜேயென்னஜின்னின்படைகள் சேர்ந்துகூடவரவே
காடுமலைகளெல்லாந்தொலைந்துக் கடுகநடந்துபோனான்
வனமுதலருவிகள்பலதுங்கடந்து வழிகள்தொலைந்துபோனா
இப்படியாகநாலுநாள்மட்டும் மெல்லாமொன்றாய்க்கூடி
மக்கமாநகரையடுத்தான்பூத மகாசேனையோடு
முஹம்மதுநபியின்தோப்பிலிறங்கினான் வலியகொடியபூதம்
வெங்கலத்தேரையங்கேயிறக்கினான் வலியகொடியபூதம்
ஜின்னின்படைகளையிறக்கிடச்சொன்னான் [illegible]பூதராசன்
கூடாரங்களையடித்திடுமென்றான் வலியபூதராசன்
கடைவீதிகளுஞ்செய்திடசொன்னார் கனத்தபூதராசன்
வாத்தியம்பலதுஞ்செய்திடவைத்தான் வலியபூதராசன்
தோப்பிலுள்ளபூக்களைப்பறித்து மாலையாகக்கோர்த்து
கழுத்தினிலணிந்தான்கையிலணிந்தான் கமழ்வாசமது
கையையறுத்துத்தின்றதெல்லாம் காய்களில்லாமல்

7726

பழங்களையறுத்துதின்றாரெல்லாம் பசிகள்நீங்கிடவே
ஒன்றுமில்லாமல்தோப்பையழித்தனர் ஆடிப்பாடிகூடி
நாசமாக்கிப்போட்டார்தோப்பை நலங்கெட்டமடையர்
அந்தத்தோப்புக்குகாவலாயிருந்தவர் அமளிதனைக்கண்டு
கைகளெல்லாநடுக்கமெடுத்தது காவற்காரருக்கு
வாயிற்நீரும்வற்றிப்போச்சுது வல்லப்படையைக்காண
பிழைத்தால்போது மென்றவரெண்ணிப்பயந்துமிகநடுங்கி
தோப்பைவிட்டோடிவந்தனர் சிறந்தமக்கநகர்
கைகள்நடுங்கிடக்கால்கள்நடுங்கிடக் கனத்தவேர்வைசிந்த
நன்னபிமுஹம்மதுமுன்பினில்வந்தனர் நடுக்கமிகவாகி
ஆதியின்தூதேயஹ்மதுநபியே அதிசயஞ்சொல்லுகிறேன்
சோதியொளியேதூண்டாவிளக்கே சேதிசொல்லுகிறேன்
என்றன்கண்ணில்கண்டதேயில்லை யிந்தப்புதுமையைப்போல்
இத்தனைவயதுமெனக்குமாயிற்று இப்படிகண்டதில்லை
தங்கள்தோப்பினுள்வந்துஇறங்கினார் தண்டுபெரிதாக
ஒவ்வொருவர்பெரும்பனைமரம்போல்இறங்கினார்களெல்லாம்
அதிலொருவீரன்கருத்தமலைபோல் ஆங்காரத்தோடு
தேரின்மேலேறியேவந்திறங்கினா னீண்டமலைபோல
கடலினீரெல்லாங்குடிக்கினுகுடிப்பார் கனத்தபடையோர்கள்
எங்கள்நபியேயிறையோன்தூதே இதுசெய்தியென்றார்

## நபியுல்லா சொல்லுதல்.

அந்தவார்த்தையைகாதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
முன்னால்நம்மொடுசைதுஜின்னது சொல்லியமுறைப்படியே
மலுக்குராசநம்மோடுசண்டைக்கு விட்டபடையிதுவே
இதனால்பெரியசண்டைகளாகிடு மிறந்தவாறோட
ஆனாலாகட்டுமாதிஇருக்கிறா னறிவோநாம்சண்டை
ஆதிபுலிக்குஇந்தவேளையி வனல்போல்சுரமாச்சு
அவருக்குஞ்சுரமில்லாமற்போனால் அச்சமொன்றுமில்லை
அந்தவேளையில்நபியுல்லாவும் அஸ்ஹாபுமார்களையும்
சிங்கமதாகிநாலியார்களையுந் திருமுன்றனழைத்து
எந்தன்மார்களே அஸ்ஹாப்மார்களே யான்சொல்லக்கேளும்
தீனின்பெரும்புலியாகியபேர்களே சொல்லயினிக்கேளும்
இபுறாஹீமஸ்ஹாபுடன்ஜின்னும் அரசன்மலுக்கிடத்தில்
சேதிகள்சொல்லிக்கொடியவனகேட்டுத் திரளாய்ப்படைகூட்டி
சண்டைக்கனுப்பினனம்மைக்கெலித்திடச் சண்டாளிபாவி
ஜின்னின்கூடப்பூதராசனும் தேர்மேல்தானேறி
நம்மிடப்பட்டணம்வந்துஇறங்கினார் நாயன்முனிவானோர்
சிங்கவலிக்குஇந்நேரவேளையில் தீபோல்தானகாயும்
சொல்லிடமுடியாச்சுரமதுவீசும் சிறந்தஅலிப்புலிக்கு
பலபலபூதப்படைகளைக்கண்டு பயந்துவிருந்தாக்கால்

பூதமும்ஜின்களுநம்மிடப்பட்டண வந்துபுகுந்திடுவார்
ஆகையால்நாமும் மெதிர்த்திடவேணும் அவர்கள்பயந்தோட
அல்லாஹருமத்தும்நம்மேலுண்டு அனுவும்பிசகாது
வெற்றிநமக்குக்கொடுப்பானாயின் வேதநெறியோரே
அந்தபடைமூன்போரவர்வாரோ அறியச்சொல்லிடுவீர்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அபூபக்கர்சித்தீக்கு
வேதக்கடலேவேற்றியுள்ளோரே வள்ளல்முஹம்மதரே
அந்தப்படைக்கென்னையனுப்பிடும் அண்ணல்நயினாரே
வெற்றிபெற்றுநான்வருகிறேனென்று விளம்பிடவன்னேரம்
தெந்தரித்துஉமறுமெழுந்து கொடியோனன்னபியே
மேகங்குடையிடவாடைமணர்ந்திடும் வெற்றிநயினாரே
என்னையனுப்பிடும்படையைவென்றிட என்றுமொழிந்ததற்பின்
ஆதியாகினிறேறியேபேசியே அண்ணல்நபிநயினாரே
மான்பின்னாக ஆற்றகடந்த அஹ்மதுநன்னபியே
பூதபடைமேலென்னையனுப்பிடும் போரேன்சண்டைக்கு
பொடிபொடிசெய்துவருவேன் அவர்களைபெரியோன்றிருத்தூதே
இப்படியார்கள்மூவருஞ்சொல்லி யிடிபோல்சத்தமிட்டே
ஆதியின்றூதேமுஹம்மதுநபியே அண்ணல்நபிநயினாரே
பொல்லாப்பூதப்படைகளைவென்றிட பெரியோனுதவியோடு
தங்கள்துவாவின்வரிசையுமானால் ஐயதிறநூலே
எழுகடலைப்போலபடைகள்வந்தாலும் மெனக்குப்பெரியதல்ல
செந்தூளெழுந்துப்பறந்திடச்செய்வேன் சேனைகளனைத்தையும்
அடியேன்றனக்குவிடைநீர்தந்தால் அல்லாவருளாலே
வெற்றிபெற்றுநான்வருவேனென்றார் வீரியமூசாவும்

## மூசா பூதப்படை போகுதல்

அந்தப்பேச்சைக்காதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
சிந்தைமகிழ்ந்துமூசாவைப்பார்த்து சொன்னார்நபியுல்லா
பூதப்படைகளைவென்றிடவுனக்கு பெரியோன்கிருபைசெய்வான்
ஜின்னின்படைகளைவென்றிடவுனக்கு நாயோனுதவிசெய்வான்
ஆயிரம்அஸ்ஹாப்புமார்களைக்கூட்டி அரிபோல்சண்டைசெய்ய
போய்நீவாருமென்றுசொல்லினர் பெரியோனபியுல்லா
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அண்ணாறிமூசா
சந்தோஷமாய்வீட்டுக்குப்போனார் சந்திரமுகமூசா
சந்தனம்பன்னீர்சவ்வாதணிந்தார் சமத்தர்மதிமூசா
கத்தியையெடுத்துகையிற்பிடித்தார் கனத்தபுலிமூசா
அம்பையெடுத்துதோளில்போட்டார் ஆங்காரமூசா
ஈட்டியையெடுத்துகையில் பிடித்தார் எங்கள்திருமூசா
பலபலசண்டையினாயுதமெல்லாம் பூட்டினாரப்போது
சிங்கம்போலவேவெளியினில்வந்தார் சிறந்தபெருமூசா

குதிரையின்பேரிலேறினார்வெற்றிக் கொண்டிடவலிமூசா
மற்றஅஸ்ஹாப்புமார்களுந்தங்கள் மனையினிடம்புகுந்து
அன்னமருந்தி ஆயுதமணிந்து ஆங்காரங்கொண்டு
அவரவர்தங்கள்குதிரைகளேறி ஆணவமிகப்பேசி
மூசாவிடத்திற்குவந்தாரெல்லா மேன்மையுள்ளவீரர்
வந்தபேர்களைகண்ணுற்கண்டு வல்லபெருமூசா
சந்தோஷமாச்சுதுமூசாவிற்கு சண்டைக்குத்தான்போக
அந்தவேளையில்மூசாவோடு அஸ்ஹாப்புமார்கூடி
சந்திரன்பேசியநபியுல்லாமுன் தாங்கள்வந்துநின்றார்
வந்தபேர்களைநபியுங்கண்டு மனமகிழ்வாக
என்றன் அஸ்ஹாப்மார்களேகேளும் இறையோனருளாலே
வந்திடும்பூதங்களைவென்றிட வல்லபெரியநாயன்
உதவியுஞ்செய்வானுங்களுக்கொன்று உற்றதுவாச்செய்து
எல்லாஜெபமும்பெறுவீரென்று ரிறசூல்நபினாரும்
வெற்றியுங்களுக்காண்டவன் தருவான் வேதநெறியோரே
பூதப்படைகளைவென்றிடப்போங்கள் பெரியோனருளாலே
பலபலவிதமாநபியுல்லாவும் பகர்ந்துவிடைகொடுத்தார்
அந்தமொழியைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மார்களெல்லாம்
ஆதிநபியின்பாதம்பணிந்து அப்போகுதிரையேறி
மாடகூடங்கள்வீதியைவிட்டு வலியபுலிபோல
கலகலவென்று ஆயுதந்தாங்கிட கடினப்புரவியேறி
விட்டார்குதிரைகளெல்லாம்நடந்திட வேகமிகக்கொண்டு
வேடிக்கையாகநடந்தாரெல்லாம் வெள்ளக்கடல்போல
வீதிவீதியாய்த்தாண்டிபோயினார் வேதக்கடலானோர்
மக்கத்தைவிட்டுவெளியேவந்தார் வல்லமைமிகப்பேசி
செந்தூள்பறந்திடகுதிரையைநடத்தினார் சிங்கத்திரள்போல
கருந்தூள்பறந்திடகுதிரையைநடத்தினார் கனத்தபுலிபோல
ஆறுகுளங்களைதாண்டிநடந்தார் ஆணவமுள்ளவீரர்
ஏரிவனங்களைதாண்டிநடந்தார் இறையோனருளாலே
பலபலவாத்தியமேளமுழங்கிட பதாதிதானடத்தி
தோப்பினருகில்வந்தாரெல்லாம் துணிந்துமனங்கொண்டு
கருத்தமலைபோலிருந்திடக்கண்டார் கனத்தபூதங்களை
பெரியபெரியமலைப்போல்கண்டார் பெருந்தபூதங்களை
கண்ணுற்கண்டுஅஸ்ஹாப்மார்கள் கலக்கமிகவாகி
இப்படிபட்டபடைப்பானோர்களைக் கண்டோமில்லைநாமும்
என்றுபயந்துநடுங்கினாரெல்லாம் ஏக்கமிகவாகி
அந்தவேளையில்பூதப்படையோர் ஆங்காரங்கொண்டு
வந்த அஸ்ஹாப்மார்களைக்கண்டு வாரியெழுந்திடவும்
அப்போபூதராஜனவர்களை அதட்டிமிகமுனிந்து

சுகமாயிருங்களென்றுசொல்லினன் சிங்கபூதராஜன்
அந்தவேளைபூதராஜனும் ஆங்காரங்கொண்டு
அண்ணலதிபதிமூசாவென்னு மாசர்முகநோக்கி
புலிமுன்னாடுபோலென்முன்னாகப் போரிடவந்தீர்கள்
பூனைமுன்னேபோலென்முன்னாகப் போரிடவந்தீர்கள்
நல்லதுநல்லதுஉன்பேரென்ன நானறியச்சொல்லும்
சின்னமனிதர்குலத்திலுதித்த தீரனேசொல்லென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அண்ணல்புலிமூசா
மனமஞ்சாமல்பூதத்தைப்பார்த்து மன்னர்புலிமூசா
சொல்விடக்கேளுபூதராஜனே சேதிசொல்லுகிறேன்
உன்றனைவெட் டிநரகுக்கனுப்பிட உடையோனபியிறசூல்
என்னையனுப்பினார்என்றன்பெயரை யான்சொல்லக்கேளு
நானிலமஞ்சிடவெட்டுமலிப்புலி நானென்றுசொன்னார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
கலகலவென்றுசிரித்தானையா கனத்தபூதராசன்
கையைமூக்கின்மேல்வைத்துச்சிரித்தான் கனத்தபூதராசன்
குலுங்கிக்குலுங்கிச்சிரித்தானப்போ கொடிய பூதராசன்
என்னைக்கெலித்திடவுனாலாகுமோ வேழைகுலத்தானே
என்றுசொல்லிக்கேட்டப்போது அஸ்ஹாபுமாரெல்லாம்
அம்புகள்விட்டார்மேன்மேலாக அரியமழைபோல
அந்தவேளையிலென்னசெய்தான் பூதராசாவும்
கண்கள்சிவந்துபோச்சுதப்போது பூதராசனுக்கு
பல்லைநெறநெறவென்றுகடித்துப் பூதராசாவும்
தண்டாயுதத்தைக்கையிலெடுத்தான் சண்டாளிப்பூதம்
ஓங்கியோரடியடித்தானப்போ வானினிடிபோல
அந்தவடியினால்மாண்டுபோயினர் அன்பதுஅஸ்ஹாபுகள்
பின்னுமடித்திடதண்டாயுதத்தைப் பிடித்தான்கையினாலே
அந்தவேளையில்மூசாவென்பேர் அவன்முகத்தைப்பார்த்து
கிலுகிலுவென்றுசிரித்தாரப்போ கொஞ்சமுமஞ்சாமல்
சிரித்ததைக்கண்டுபூதராசாவும் செய்திதானறிய
அடித்திடவெடுத்ததண்டாயுதத்தை அப்போபூதராசன்
பூமியின்மேலேதண்டாயுதத்தைவைத்துப் பூதராசாவும்
மன்னர்மூசாதன்முகம்பார்த்து மகாக்கொடியபூதம்
சண்டைகளத்திலென்முன்னாக சற்றுநீயஞ்சாமல்
என்னவிதத்தால்சிரித்தாய்ச்சொல்லிவிடு ஏழைகுலத்தானே
ஒன்றுஞ்செய்யேனினிமேலுன்னை யென்னுடன்சொல்லென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அண்ணலலிமூசா
கேளடாபூதராசாவேநீ கொஞ்சமாச்சொல்லுகிறேன்
பஞ்சைகளென்றுஎங்களையின்று பாரதண்டத்தால்

அடித்தாயெங்களைநல்லதுநல்லது ஆனாலாகட்டும்
அதனாலெங்களுக்கொன்றுமில்லைகேள அடாபூதராசா
இன்றெங்களையெப்படியடித்தா யந்தப்பழிவாங்க
நாளையெங்கள் அலிபுலிவருவார் நானென்னசொல்வேன்
அலியார்வருவார்வந்தால்நீங்கள் அவருடையகையாலே
என்னபாடுகளாகுமோவென்று எண்ணிநான்சிரித்தேன்
தீங்குகளென்னசெய்வாரோவென்று எண்ணிநான்சிரித்தேன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
கிலுகிலுவென்றுசிரித்தானப்போ பூதராசன்
அண்ணல்மூசாமுகத்தைப்பார்த்து அப்போபூதராசன்
நீ அலியென்றுசொன்னாளனக்குநீ அலிபுலியல்லவடா
உன்னையல்லாமல்வேறேயொருவ ரிருக்கிறாரலியாரும்
அவரைவெட்டிடவந்தேனல்லது உன்னைவெட்டமாட்டேன்
தலையையறுக்கவந்தேனல்லது சண்டைகளமூன்னால்
உங்களையினிமேலொன்றுஞ்செய்யேன் என்றான்ராசாவும்
எனக்கும்பகையன் அலியல்லாமல் வேறேயாருமில்லை
அவனோடெதிர்த்துவெட்டிகெலித்து அவனைக்கொன்றிடுவேன்
அதன்பின்னுங்களைவெட்டிமடிப்பேன் ஆவிதான்பறக்க
ஆனாலாகட்டுமினிமேலுங்களை அடிப்பதில்லையென்றான்
மிஞ்சியஅஸ்ஹாப்புமார்களை யெல்லாம வீறுப்பெரும்பூதம்
காலுக்குவிலங்குகள்போட்டான்சேர்த்துக் கனத்தகொடியபூதம்
அஞ்சிடயெல்லார்தம்மையுஞ்சேர்த்தா னண்ணல்பெரும்பூதம்
நம்மைகெலிப்போரில்லையெனவெண்ணி நரகாளும்பூதம்
பூதப்படைகளெல்லாஞ்சேர்த்து பெரியகொடியபூதம்
என்படைவீரசூரரேயின்று யான்சொல்லக்கேளும்
இனிமேலிவ்விட மிருந்திடில்நமக்கு எதிரியாருமில்லை
இவ்விடம்விட்டுநாம்போவோமென்றான் இராசபெருபூதம்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு பூதப்படையோர்கள்
ஐயாவுன்றனிஷ்டப்படியே ஆகட்டுமென்றார்கள்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
தேர்மேலேறினான் சீக்கிரமாக சேனைப்படைசூழ
அந்தத்தோப்பைவிட்டுவெழுந்து அஸ்ஹாபுமாரோடு
காலில்போட்டவிலங்குடன்சேர்த்துக் கடல்போற்றனெழுந்து
வல்லபமாகத்தாவின்தோப்பிலுள் வந்துயிறங்கினார்கள்

## நபிநாயகத்துக்குத் தூதுவிடுதல்.

அந்தத்தோப்பிலுள்வந்ததின்பின்பு என்னநடக்குதுபார்
விலங்குகள்போட்ட அஸ்ஹாபுமார்களி லொருவர்தனையழைத்து
காலில்போட்டவிலங்கையொடித்தான் கனத்தபூதராசன்
எதிரிலவரைநிறுத்திவைத்தான் என்னசொல்லுகிறான்பார்

கோடையிடிபோல்பேசினானையா கொடியராஜபூதம்
கிடுகிடுவென்றாடுங்கிடப்பேசினான் கெட்டபூதராசன்
சின்னமனிதனேநானொருசேதி சொல்லுகிறேன்கேளு
பஞ்சைமனிதனேநானொருசேதி பகர்வேன்நீகேளு
கெட்டிக்காரர்களாகவிருந்தால் எதிரில்வரச்சொல்லு
சிப்பாய்மாரனாகவிருந்தால் திருமுன்வரச்சொல்லு
சேவகப்பாடியாகவிருந்தால் சண்டைக்குவரச்சொல்லு
மீசைமுளைத்தஆணாவிருந்தால் முன்னேவரச்சொல்லு
பேடியைப்போலவிருப்பானாகில் பேசாதிருக்கச்சொல்லு
உயிருக்குஅஞ்சிடும்பேடியேயானால் ஓடிப்பிழைக்கச்சொல்லு
சத்துவமுள்ளவீரனேயாகில் சண்டைக்குவரச்சொல்லு
அப்படிசண்டைக்குவராமற்போனால் அங்கேநான்வருவேன்
கோட்டைகளெல்லாந்தூளாய்ப்பறக்க இடித்துப்போடுவேன்காண்
நாட்டைப்பிடித்துநாசம்பண்ணுவேன் நன்றாய்நீசொல்லு
கொஞ்சமுமஞ்சேனுங்களைவெட்டிடக் கோட்டைதனையிடிப்பேன்
பெண்டுபிள்ளைகளைச்சிறையாய்ப்பிடிப்பேன் போருக்குவரச்சொல்லு
சண்டைசெய்திட அலியார்தன்னைச் சீக்கிரம்வரச்சொல்லு
வாயால்வந்தபடியெல்லாஞ்சொன்னான் வன்னிபுகும்பூதம்
தனக்குவருவதையறியாப்பூதம் சண்டைக்குவரச்சொன்னான்
சீக்கிரமாய்நீபோய்ச்சொல்லென்று சொன்னான்பெரும்பூதம்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அவ்ஹாபுவப்போது
புலியாய்மீண்டஆடதுபோலப் பொருளைவிட்டுவந்தார்
நரியாய்மீண்டகோழியைப்போலத் தோப்பைநீங்கிவந்தார்
பாம்பிடமீண்டதேரையைப்போல பாடுபட்டுவந்தார்
ஓரேயோட்டமாமக்கத்தைநாடி ஓடியேவந்தார்
பள்ளம்விழுங்கும்நீரதுபோலப் பதறியேஓடிவந்தார்
விட்டிடுமம்புபோலப்பறந்து வீழ்ந்துஓடிவந்தார்
பறவையைப்போலவேகமெடுத்துப் பறந்தோடிவந்தார்
முத்துப்போலவேர்வைகள்சிந்திட முழுகியோடிவந்தார்
மக்கம்புகுந்துபள்ளியணுகி முஹம்மதுதர்தனைப்பார்த்து
ஆதியொளிவேஅஹ்மதுநபியே அல்லாதிருத்தூதே
வேதக்கடலேநாறுகனிக்கே வேதாம்பர்நபியே
என்னசொல்வேனேதுசொல்லவே னிறசூல்நயினாரே
சொல்லிடவெனக்குநாவும்வரவில்லை தூயநாயகமே
வாயுங்குளறுதுவல்லையேயெச்சல் வல்லோன்றிருத்தூதே
கண்டால்தெரிந்திடுமவர்களின்படைப்பை காசிமுஹம்மதுவே
இருண்டமலைபோலிருக்கிறாரெல்லாம் இறசூல்நன்னபியே
கறுத்தமலைபோலிருக்கிறாரெல்லாம் கல்விக்கடலாரே
பூதப்படைகளெல்லாம்ஜின்படை பெரியோன்திருவொளிவே

அவர்களைவென்றிடகம்மாலாகுமா அல்லாதிருத்தாதே
மனிதராலவர்களைவெல்லமுடியுமா மாறுய்ப்பேசொளிவே
எளியமனிதராயெதிரியாகுவார் எங்கள்கயிஞரே
தங்கள்சொற்படிமூசாவுடனே கண்டுபெரிதாக
தோப்பின்கிட்டேபோய்நாம்பார்த்தோம் தேரோடுபூதங்களை
கண்டவுடனேகைகாலெல்லாம் நடுங்கிக்கலக்கமாச்சு
தயிரியஞ்செய்துதோப்பினுள்புகுந்தோம் தடையொன்றில்லாமல்
அங்கேபோய்ப்பின்பார்த்தோமங்கே ராங்காரப்பூதம்
பூதத்துக்கெல்லாம்ராசபூதனு யிருந்தானொருபூதம்
எங்களைப்பார்த்தவுடனேயவனு மெழுந்தான்கலைபோல
எழுபதுபாரதண்டாயுதத்தை யெடுத்தான்கைதனிலே
அந்தவேளையில்நாங்களெல்லோரும் அம்பைக்கையிலெடுத்து
மழைபெய்வதுபோல்போட்டோமவன்மேல் மட்டிடமுடியாமல்
அந்தவேளையில்பூதராசனு மூசாதனைப்பார்த்து
ஆணவமாகவென்முன்வந்தா யார்நீசொல்லென்றான்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அம்புபோலலிமூசா
உன்றனைவெட்டிக்கெலித்திடவந்த உற்றபுலியலிநான்
நாருக்குன்னையனுப்பிடவந்த நார்புலியலியென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்பூதராசன்
தண்டாயுதத்தைகையிலெடுத்தான் சமர்த்தியமாக
கண்களிரண்டுசிவந்துபோச்சுது கனத்தராசர்க்கு
மீசைபடபடவென்றுதுடித்தது பூதராசர்க்கு
பல்லைநெறநெறவெனகடித்தான் பூதராசாவும்
தண்டாயுதத்தாலடித்தானோடி சண்டைகள்முன்னால்
அந்தஅடியினாலென்பதுஅஸ்ஹாப் மார்கள்மாண்டுபோனார்
பின்னும்மடித்திடத்தண்டாயுதத்தை யெடுத்தான்பெரும்பூதம்
அந்தவேளையில்மூசாவென்போர் அவனுடையமுகம்பார்த்து
இலுஇலுவென்றுசிரித்தாரந்த பூதராசன்முன்னாலே
அந்தவேளைபூதராசனு மடுத்திடுதண்டமதை
சேரவேவிட்டான்பூமிமேலே சிங்கம்பெரும்பூதம்
என்னவிதத்தால்சிரித்தீரென்றான் மூசாமுகம்பார்த்து
சண்டைகளத்தில்சிரித்தவிதத்தை சீக்கிரமாய்ச்சொல்லு
இனிமேலுங்களையடிக்கேன்சொல்லிடு வென்றான்பெரும்பூதம்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போபுலிமூசா
கொடியராசபூதத்தைப்பார்த்துக் கொஞ்சமுமஞ்சாமல்
நாளையலியார்வருவாருன்னிடன் என்னநீபடுவாயோ
அந்தவிதங்களையெண்ணிநான்சிரித்தே னடாபாவியென்றார்.
அந்தச்சேதியைகாதிலேகேட்டு அப்போபெரும்பூதம்
எங்கள்காலுக்குவிலங்குகள்போட்டான் ஒன்றுஞ்செய்யாமல்

## அபூபக்கர் சித்திக்குத் தோப்புவிட்டுவருதல்.

அபூபக்கர்சித்திக்குத்தோப்பினைவிட்டு அன்றபெரும்பூதம்
பூதப்படைகள்தங்களைச்சேர்த்துப் பெரியமலைபோல
எங்களைச்சிறையிலடைத்துவிட்டான் இறசூல்நபினாரே
வெங்கலத்தேர்மேலேறியபூதம் வெள்ளைப்படையோடு
தோப்பைவிட்டுஉமர்கத்தாபின் தோப்புக்குள்வந்தார்கள்
அந்தத்தோப்பினுள்ளென்றனையழைத்து அப்போபூதராசன்
காலில்போட்டவிலங்கையொடித்தான கனத்தபூதராசன்
சேதிகளெல்லாஞ்சொல்லிவனுப்பினான் சிங்கபூதராசன்
அலியார்தன்னைவந்திடச்சொன்னான் அரியசண்டைசெய்ய
சகலசேதிகளெல்லாஞ்சொன்னார் சர்தார்நபிமுன்னே

## நபிநாயக மூறுதிசொல்லுதல்.

சொன்னசேதிகளெல்லாங்கேட்டு தூயநபியுல்லா
அன்றனஸ்ஹாபுமார்களேகேளும் இப்போதானதெல்லாம்
ஆண்டவனிட்டகட்டளைப்படியே ஆகிடும்பூமியிலே
நம்மாலொன்றுமாகாதென்றார் முஹம்மதுநபியுல்லா
அந்தச்சேதியைகாதிலேகேட்டு அஸ்ஹாப்மார்களெல்லாம்
இறந்துபோனபேர்களைநினைத்து எண்ணமிகவானார்
மாண்டுபோனபேர்களைநினைத்து சஞ்சலமிகவானார்
முகங்கள்வாடிபோச்சுதெல்லோர்க்கும் விசனம்பெரிதானார்
அந்தவேளையில்பொழுதுபோச்சுது அப்போநபியுல்லா
மகரிபுயிஷாத்தொழுகையைத்தொழுதார் வல்லநபியுல்லா
அஸ்ஹாப்மார்களெல்லாங்கூடி அன்றுதொழுதுகொண்டார்
அஸ்ஹாப்மார்கள்முகத்தைப்பார்த்து அப்போநபியுல்லா
என்றனஸ்ஹாப்மார்களேகேளும் எல்லாரும்நீங்கள்
பொழுதுவிடிந்தவுடனேவாங்கள் போங்கள்மனைக்கென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
பாதம்பணிந்துபோனாரெல்லாம் அவரவர்தன்வீடு
மேகங்குடையிடநபியுல்லாவும் போனார்தன்வீடு
வாடைமணக்கநபியுல்லாவும் வந்தார்தன்வீடு
உண்டுகுடித்துதூங்கினாரெல்லாம் உலகமுறங்கிப்போச்சு
சகலபடைப்புகளும்நித்திரையாயின சந்தடியில்லாமல்
அந்தவேளையில்நபியுல்லாவும் நித்திரையானார்கள்
அப்போஜிபுறயீலிறங்கியேவந்தார் முஹம்மதுநபியிடத்தில்
நபிகளுக்கெல்லாம்நபியாவந்த நாயகன்நன்னபியே
ஆதிசலாமுமக்குச்சென்னான் அஹ்மதுநன்னபியே
சோதியொளிவிலுதித்தநபியே சேதிசொல்லக்கேளும்
பூதப்படையினில்மாண்டபேர்களைப் போற்றிமிகவாழ்த்தி
நாங்கள்தொழுதுஅடக்கமுஞ்செய்தோம் நல்லநபினாரே

அவர்களைநினைத்துசஞ்சலமொன்றும் அகத்தில்செய்யவேண்டாம்
அவர்களெல்லாஞ்சுவர்க்கம்புகுந்தார் அழகுமதிபோல
இன்னம்பெரியசண்டைகளாகிடும் இறசூல்நபியினாரே
பெரியசண்டைகளாகிமுடிந்திடும் பெரியோன்திருத்தூதே
என்றுஜிபுறையீல்சொல்லிப்போயினர் இறசூல்நபிதமக்கு
அந்தவேளையில்பஜறுவேளையும் ஆச்சுதப்போது
நாயனைவணங்கநபியுல்லாவும் நடந்தார்பள்ளிக்கு
அஸ்ஹாப்மார்களெல்லாம்வந்தார் அஹ்மதுநபியிட்டே
மூன்றுயார்களும்வந்துகூடினர் முஹம்மதுநபியிட்டே
எல்லாங்கூடிதொழுதுமுடிந்து இறையோன்றன்வணக்கம்
துவாவுப்பாத்திஹாவுமோதி தொழுதுமுடித்தார்கள்
அந்தவேளையில்நபியுல்லாவும் அஸ்ஹாப்மார்களையும்
பார்த்தொருசேதிசொல்லிடக்கேளும் பாங்கானபேரே
நல்லசேதிநான்சொல்லிடக்கேளும் நாயனருளாலே
சந்தோஷமானசேதியைச்சொல்லுகிறேன் சதுரின்முன்பாக
என்னிடமாகஜிபுரையீல்வந்தா ருறங்கும்வேளையிலே
சலாமுஞ்சொல்லிசேதிகளெல்லாம் சொன்னாரென்னோடு
ஆகையாலுலகினிலுள்ளோரெல்லாம் அழிந்துமடிந்துபோவார்
உலகினில்மவுத்தில்லாதபேர்களும் ஒருவருந்தானில்லை
இன்றைக்கிருப்பவர்நாளைக்கிருப்பது நாயனறிவான்காண்
எத்தனைப்பேர்களோமாண்டுபோவ ரிந்நிலத்தைவிட்டு
நமக்குபூமிசதமேயில்லை நாமும்போகவேணும்
சஞ்சலமனதில்வைத்திடவேண்டாம் சலாமத்துள்ளோரே
இப்படிநானாவிதமாநசியத்து இறசூல்நபிசொல்லி
இப்போபடைக்குப்போறவர்யாரோ யெனக்குச்சொல்லுமென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மார்களிலே
தீரனுஞ்சூரனுமிருந்தவராகிய ஷம்ஷுத்தீனென்போர்
ஆதிஅரசின்மேலேறிப்பின்வந்த அஹ்மதுநபியினாரே
நபிகளுக்கெல்லாம் பாதுஷாவாகிய நாயகநவமணியே
அடியேன்சண்டைக்குபோகிறேனென்னை யிப்போதனுப்பிடுவீர்
வெட்டிகெலித்துநான்வருகிறேனென்றார் வேந்தர்ஷம்ஷுத்தீன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போநபியுல்லா
சண்டைக்குப்போகவுந்தன்கூட நாலாயிரம்பேரை
கூட்டிப்போகும்பூதப்படையை கொன்றுகெலித்திடவே
வீட்டுக்குப்போயெல்லோரும்வாவென விடையும்நபிகொடுத்தார்

## ஷம்ஷுத்தீன் பூதப்படைபோகுதல்.

அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போதெல்லோரும்
சந்தோஷமாகவீட்டுக்குபோயினர் சண்டைக்குதான்போக
போசனமுண்டுதண்ணீர்குடித்து பூரித்தெல்லோரும்

சந்தனம்பன்னீர்வாடைகள்பூசிச் சவ்வாதுதானணிந்து
புஷ்பமாலைகள்தோள்களிலிட்டு பூரிப்பாயெல்லோரும்
கத்திகளெடுத்துகைகளில்பிடித்தார் லபுலிபேகனத்தார்
ஈட்டிகளெடுத்துகைகளில்பிடித்தார் எங்கும்நடுநடுங்க
பட்டாகத்திகளெடுத்தாரெல்லாம் பளபளவெனமின்ன
தண்டாயுதங்களெடுத்தாரெல்லாம் சண்டைகளம்போக
குதிரைமேலேறிவந்தாரெல்லாம் இடுகிடுவென்றசைய
நபியுல்லாமுன்வந்துநின்றார்கள் வயல்புலிபோல
வந்திடும்பேர்களைகண்ணுற்கண்டு வல்லநபியுல்லா
அல்லாஅனவிற்பாரஞ்சாட்டினார் அஹ்மதுநபியுல்லா
என்றனஸ்ஹாப்மார்களேநீங்க ளின்றுபூதப்படை
வெற்றிபெற்றுவாருங்களென்று வாழ்த்திவிடைகொடுத்தார்
போயெல்லோரும்வாருங்களென்று போற்றிவிடைகொடுத்தார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
சிந்தைமகிழ்ந்துநபியுல்லாமுன் தீன்தீனெனப்போற்றி
பாதம்பணிந்துபூதப்படைமேல் போனாரெல்லோரும்
வீதிகளெல்லாம்விட்டுநடந்தார் வேங்கைப்புலிபோல
மாடங்களெல்லாம்விட்டுநடந்தார் வலியபுலிபோல
மக்கத்தைவிட்டுவெளியேவந்தனர் மண்டூள்தானெழும்ப
ஈத்தமடலிகளெல்லாம்நடந்தார் ஏகப்படையாக
பொழுதைமறைத்துமண்டூள்சூழ்ந்தது புரவிகள்காலோதி
கலகலவென்றாயுதமெல்லாம் கனத்தஓசையிட
தடதடவென்றுநடந்துகுதிரைகள் தடங்கலில்லாமல்
உமர்கத்தாபின்தோப்பின்கிட்டே போனாரெல்லோரும்
பூதப்படைகளைகண்ணுற்கண்டனர் பெரியமலைபோல
மனிதர்படைகளைவந்திடக்கண்டனர் வலியபூதங்கள்
அந்தவேளையில்பூதராஜனும் ஆணவமிகப்பேசி
வந்தபடைகளைகண்ணுற்கண்டு பூதராஜனப்போ
வாரிபோலெழுந்தபூதப்படைகளை வாகாய்தான்பார்த்து
சண்டைகள்செய்திடவேண்டாம்நீங்கள் சும்மாதானிருங்கள்
கொஞ்சப்பேச்சுகள்பேசிடவேணும் கொடியபூதங்களே
என்றுசொல்லினான்பூதராஜனும் ஒன்றுக்குமஞ்சாமல்
வீரஷம்ஷுதீன்சூரரைநோக்கி வாணினிடிபோல
சண்டைக்குவந்தநீயார் சொல்லுசமார்த்தியமாக
என்னைகெலித்திடவந்தவர்நீயாருன்பேர்தனைச்சொல்லு
அந்தச்சொல்லைகாதினில்கேட்டு அப்போசம்ஷுதீன்
உன்னையுமுன்றன்பூதப்படைகளை ஒருவெட்டாய்மாய்க்க
வந்தஅலிபுலிகாணென்றுசொன்னார் வல்லஷம்ஷுதீன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபூதராஜன்

நல்லதுநல்லது ஆகட்டுமென்று நகைத்தானிடிபோல
முன்னையொருத்தன் அலியென வந்தான் மூர்க்கமிகப்பேசி
பின்னுமலியென வந்தானிவனும் பெரிய சண்டை செய்ய
வந்தானென்று மனதிலெண்ணி வலியகொடியபூதம்
கிலுகிலுவென்று சிறித்தானப்போ கொடியராசபூதம்
அண்ணல்ஷம்ஷுதீன் தன்முகம்பார்த்து அப்போராசபூதம்
என்னுடனெ திர்க்கவந்தவனுநீ என்னைவணங்கிக்கென்றான்
பூனையெலிகள்கெலிக்குமாசொல்லடா பயித்தியக்காராநீ
இப்படிசொல்லிசிரித்தானையா பூதராசாவும்
அந்தவேளையில்ஷம்ஷுதீனுக்கு ஆங்காரமுண்டு
பூதபடைமேல்விட்டாரம்புகள் பெரியமழைபோல
மண்ணும்விண்ணுந்தெரியாமற்போச்சுது விட்ட அம்பாலே
அந்தவேளையில் கோபமுண்டாது பூதராசர்க்கு
கண்கள்ரெண்டும்சிவந்துபோச்சுது கனத்தராசர்க்கு
பல்லைநெறநெறவென்றுகடித்தான் பூதராசாவும்
எழுபதுபாரதண்டமெடுத்தான் பூதராசாவும்
ஆங்காரங்கொண்டுஓங்கிபடிந்தான் பூதராசாவும்
வீரியமாகபத்தடியடித்தான் பூதராசாவும்
அந்தஅடியாலாயிரம்பேர்கள் அல்லாபுறஞ்சேர்ந்தார்
சம்ஷுதீன்கூடி ஆயிரம்பேர்கள் ஷஹீதாய்மாண்டார்கள்
பின்னுமடித்திட தண்டாயுதத்தை யெடுத்தான்கைதனிலே
அந்தவேளையிலதிலோர் அவ்ஹாப் கிலுகிலுவென சிறித்தார்
சிரித்ததைக்கண்டுபூதராசனும் திகைத்துநின்றுவிட்டான்
கையிலெடுத்ததண்டாயுதத்தை கீழேபோட்டுவிட்டு
என்னவிதத்தால்சிரித்தாயென்று ஏழைமனிதனேநீ
சண்டைகளத்தின்சிரித்தவிதத்தை சொல்லிடுஎந்தனக்கு
சூரர்கள்போலவந்தவரேநீ சொல்லிடுயிவ்வேளை
என்னகாரணத்தாலேசிரித்தா யிப்போதுசொல்லு
இனிமேலுங்களையடிக்கிறதில்லை என்னுடன்சொல்லென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதவ்ஹாபு
காருக்கிறையால்புகுந்திடுங்கொடிய பூதராசாவே
சொல்லிடக்கேளுவென்றன்மொழியை பூதராசாவே
கல்லுங்கரைந்திடுமெல்லாங்கடுங்கிடும் பூதராசாவே
எங்களையின்றுவல்லமையோடு அடித்தாய்வலிபேசி
ஆயிரம்பேர்கள்மாண்டிடவடித்தா யாங்காரங்கொண்டு
கெட்டிக்காரனானென்றுநீயெண்ணினாய் கேடுகெட்டவனே
எங்களையடித்தபழியைவாங்கிட எங்கள்புலியாரும்
நாளைப்படையில்வருவாரிங்கே நனென்னசொல்வேன்
வருவாராகிலுன்னுடகெதியு மெப்படியாகிடுமோ

பாடுகளென்னபடுவாயோநீ பாதகராசாவே
ஆணவமெல்லாமெங்கேபோகுமோ அழிந்துபோவாயோ
அதுகளைநினைத்துச்சிரித்தேனென்றார் அஞ்சுதலில்லாமல்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு பூதராசாவும்
முன்னாலொருவன் அலியெனவந்தான பேருதனைச்சொல்லி
இப்படியெத்தனை அலிகளிருக்கிறார் ஏழைகுலத்தானே
புத்தியில்லையோகொஞ்சமும் அலிக்கு பயித்தியக்காராகேள்
சண்டைக்குவாராதிருப்பனாசரியா சமயம்வருமானால்
எதிராளியோடெதிர்த்திடவேண்டும் என்றான பெரும்பூதம்
அந்தமொழிதனைகாதிலேகேட்டு அஸ்ஹாபமப்போது
மலையெனபெயருமெடுத்தால்மண்மலை கல்மலையாகிடுமோ
புலியெனவீண்பெயரெடுத்தமிருகங்கள் புலிபோலாகிடுமோ
வலிமைகளுள்ளவரென்போரெல்லாம் வலியோராவாரோ
அலியெனபேர்களெடுத்தமானிடர் அலிப்புலியாவாரோ
எங்களலிப்புலிவருவாராகில் எவருமெதிர்க்கார்கள்
நீயுமுன்னுடபூதப்படைகளும் நிற்குமோநிற்காதோ
உன்படையெல்லாமவருடவாட்கிரை ஆகுமோஆகாதோ
பூதப்படையெல்லாமவருடகைக்குப் பொதுமோபோததோ
என்றுசொல்லிடக்கேட்டான்பூதம் இருகண்நெருப்பாகி
இனிமேலுங்களையடிப்பதில்லை அலியார்வாரமட்டும்
அவருடவல்லமையறியநான்வேணும் ஆனாலாகட்டும்
என்றுசொல்லிகாலிற்போட்டான் எல்லார்க்கும்விலங்கு
முன்னால்வைத்தஅஸ்ஹாப்மாருடன் கூடிகொண்டுவைத்தான்

## உதுமானார் தோப்பிற்கு வருதல்

அந்ததோப்பிலுள்பூதராசனு மாணவமிகப்பேசி
கொடியபூதம்ஜின்னுடபடைகளை கூட்டமாய்ச்சேர்த்து
காலில்போட்டவிலங்குடன்அஸ்ஹாப் மார்கள்தனைக்கூட்டி
வெங்கலத்தேர்மேலேறினானப்போ பூதராசாவும்
சந்தோஷமாகத்தோப்பைவிட்டுச் சேனைபடையோடு
சாரதித்தேரினைநடத்திவந்தான் நீசமுடிராசன்
உதுமானாருடதோப்பிற்குவந்து இறங்கினானப்போது
அந்தவேளையிலென்னசெய்தான் பூதராசாவும்
விலங்குபோட்ட அஸ்ஹாப்தனிலோர் அஸ்ஹாப்தனையழைத்து
காலின்விலங்கையொடித்திடச்சொன்னான் கனத்தபூதராசன்
எதிரிலழைத்தவனுக்கொருசேதி யிப்போதுசொல்லுவன்
அந்தப்படிபோய்ச்சொல்லிடுவென்றா னொன்றுந்தப்பாமல்
அலியும்வரவில்லைகம்பரும்வரவில்லை என்னுடன்சண்டையிட
ஆகையாலவர்களைச்சண்டைகள்செய்திட அகத்தியம்வரச்சொல்லு
பேடிகள்போலஒளித்திருப்பது பேடிகள்வேலையது

சேவகப்பாடியாயிருந்தாலென்முன் சண்டைக்குவரச்சொல்லு
மீசைகள்முளைத்தஆண்பிள்ளையானால் முன்னேவரச்சொல்லு
என்னைக்கெலித்திடும்பேர்களாயிருந்தால் லெதிரில்வாச்சொல்லு
பெண்ணாய்ப்பிறந்தஆண்பிள்ளையானா லோடிப்போகச்சொல்லு
சண்டைசெய்யவாராமர்போனால் சண்டைக்குநான்வருவேன்
செந்துள்பறந்திடக்கோட்டையிடிப்பேன் சிறைகளுநான்பிடிப்பேன்
சீக்கிரமாகவரச்சொல்லென்று சொல்லியனுப்பிவைத்தான்
புத்திகள்சொல்லியழைத்துவாவென்று போவென்றுசொன்னான்
அந்தசொல்லைக்காதிலேகேட்டு அப்போதஸ்ஹாபு
புலிவாய்மீண்டஆடதுபோல பெரியவஸ்ஹாபு
கையுநடுங்கிடகாலும்நடுங்கிட கனத்தஅஸ்ஹாபு
ஓரேவோட்டமாய்யோடியேவந்தார் உடலில்வேர்வைவிட
மக்கத்தைநாடியேயோடிவந்து மன்னரஸ்ஹாபு
பள்ளியின்நன்னபிதம்மைக்கண்டு பாதந்தான்பணிந்து
அல்லாதூதேஅஹ்மதுநபியே அண்ணல்நயினாரே

## நபிநாயகத்துகுச் சேதிசொல்லுதல்.

வீரியமாகப்போனோம்நாங்களும் விருதுமிகப்பேசி
தடவையினருகினில்போனோமெல்லாரும் தூயநயினாரே
அந்தப்பூதப்படையினைப்பார்த்தோம் அண்ணல்நயினாரே
ஒவ்வொருமலைபோலிருக்கிறாரெல்லா மோதிடமுடியாது
அந்தக்கூட்டத்தாரெங்களைக்கண்டு அலறியெழுந்தார்கள்
நாங்களுமவர்களைக்கண்டிடவுடலில் நடுக்கமிகவாச்சு
அந்தவேளையில்பூதராசனும் அவர்களைத்தானமர்த்தி
ஷம்ஷூதீன்வரப்பார்த்தொருசேதி கேட்டானப்போது
நானலியென்றுசொன்னாரவனுக்கு நடுக்கமுமில்லாமல்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
ஏழுபாரதண்டாயுதத்தை எடுத்தான்கைதனிலே
ஓங்கியோங்கிப்பத்தடியடித்தா னுற்றராசபூதம்
அந்தயடியினாலாயிரம்பேர்கள் அல்லாபுறஞ்சேர்ந்தார்
அந்தவேளையில்கிலுகிலுவென்றார் அஸ்ஹாப்தான்சிரித்தார்
சிரித்ததைக்கண்டுபூதராசனும் தண்டாயுதத்தன்னை
எடுத்ததைக்கீழேசோரவேவிட்டு இருண்டபெரும்பூதம்
என்னகாரணமேதுகாரண மென்னைநீபார்த்து
சிரித்தவயணத்தைச்சீக்கிரமாகவே சொல்லென்றுகேட்டான்
அந்தச்சொல்லைகாதிலேகேட்டு அப்போதஸ்ஹாபு
எங்களையின்றுநீயிப்படிசெய்தா யிப்பழிதான்வாங்க
ஆண்டவன்புலியார்வருவார்நாளை அவருடையகையாலே
என்னபாடுகள்பட்டிடுவாயோ எப்படிமுளிப்பாயோ
என்றுநினைத்துநான்சிரித்தேனென்றார் இறசூல்நன்நபியே

அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அந்தப்பூதராசன்
இனிமேலுங்களை அடிப்பதேயில்லை யென்றுவிலங்குபோட்டு
அலியைவரச்சொல்லென்றவன்சொல்லி அனுப்பினனென்னை
அவர்களைவென்றிடமனிதராலாகுமோ அவர்கள்மலைபோலாம்
சின்னமனிதரால்வெல்லமுடியும் திரண்டபெருமலையை
கொஞ்சமனிதரால்வெல்லமுடியுமா கோமான்திருந்தூதே
இப்படிச்சொல்லநபியுல்லாவும் எண்ணம்பெரிதாகி
மற்றப்பேர்களுஞ்சஞ்சலமாகினர் வாயைத்திறக்காமல்
மாண்டவர்பேரால்எண்ணங்கள்கொண்டு வலிகள்குறைத்தார்கள்
கொடியபூதப்படைகளைவெல்ல முடியாதென்றெண்ணி
சஞ்சலம்பெரிதாய்ப்போனாரெல்லாஞ் சண்டைக்குத்தானஞ்சி
அந்தவேளையில்பொழுதும்போச்சுது அவனியிருளாச்சு
அப்போதொழுதனர்மகரீபேஷா ஆதிதனைநினைத்து
தொழுதுதுவாவுமோதிமுடித்தார் தூயநபியுல்லா
அஸ்ஹாப்மார்களெல்லாந்தொழுதனா அஹ்மதுபின்னாலே
நிலைவைப்பகுந்தநபியுல்லாவும் கெடியோன்றனைப்போற்றி
பொழுதுவிடிந்தபின்னென்னிடம்வாங்கள் போங்களிப்போது
உண்டுவுறங்கிப்பின்னெழுந்தினிவாங்க ளுங்கள்மனையேகி
என்றுபலர்க்கும்விடையினிகொடுத்தா ரிசூல்வேதாம்பர்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
பாதம்பணிந்துஅவரவர்வீடு போனாரெல்லாரும்
அந்தவேளையில்நபியுல்லாவும் ஆயாசத்தோடு
தங்கள்திருமனைப்புகுந்தார்வேத சர்தார்நபியுல்லா
உலகினிலுள்ளபடைப்புகளெல்லா முறக்கமாகிப்போச்சு
அந்தக்காலையில்நபியுல்லாவும் அறிவுநினைவோடு
நித்திரைபோயினர்அந்தக்கனவில் கெடியஜிபுரீலும்
ஆகிசலாமும்நபிக்குச்சொல்லி அல்லாநபியேகேள்
சஞ்சலம்நீங்கள்செய்திடவேண்டாம் ஸல்லல்லாநபியே
ஷஹீதாய்ப்போனவீரரையெல்லாம் செல்வமிகப்பொங்க
தொழுதுயடக்கினோம்நாங்கள்கூடி சொர்க்கவாதியானார்
அவர்களைநினைத்துவிசனங்கள்வேண்டாம் அஹ்மதுநன்னபியே
என்றுசேதிகள்பலதுஞ்சொல்லி இறசூல்நபிதமக்கு
வானினிடமாய்ப்போயினர்ஜிபுரீல் வரிசைநபியைவிட்டு
சேவல்கள்கூவும்வேளையுமாச்சுது சேவல்கள்கூவினது
பசறுவேளையுமாச்சுதுவப்போ பயகாம்பர்நபியுல்லா
பள்ளிக்குப்போயினர்தொழுதிடவென்று படைத்தோன்புறமாக
அந்தவேளையில்யாவர்களும்வந்தார் அஸ்ஹாப்மார்களும்வந்தார்
எல்லாருங்கூடித்தொழுதுக்கொண்டனர் இறையோன்றனக்கஞ்சி
பொழுதும்விடிந்ததுவெளிச்சமானது பொழுதுந்தான்முளைத்த

## அஸ்ஹாப்மார்களுக்கு உறுதிகூறுதல்.

என்றன் அஸ்ஹாப்மார்களேநீங்கள் யான்சொல்லக்கேளும்
சந்தோஷமானசேதிகள்சொல்லினர் ஜிபுரீல்தான்வந்து
சஞ்சலம்நீங்கள்படவேவேண்டாம் ஷஹீதாய்ப்போனோரை
தொழுதுயடக்கினோம்நாங்களென்று சொன்னாரென்றனுக்கு
ஆகையாலிந்தப்பூமியிலுள்ளோ ரெல்லாமழியவேணும்
நீர்மேல்குமிழியாம்நம்மிடவாழ்வு நிலையில்லாதசடலம்
விதியின்படியேயுலகினிலவரவர் விட்டுப்பிரியவேணும்
விதியைவிலக்கிடலாகுமோ ஆகாதொருபோதும்
கடலிலிறந்திடக்கட்டளையுள்ளவர் கரையிற்சாவாரோ
நோயாலிறந்திடக்கட்டளையுள்ளவர் நோயாற்சாவாரோ
தாய்கள்பிரிந்திடப்பிள்ளைகள்சாவார் சஞ்சலமிகவாக
பிள்ளைகள்பிரிந்திடத் தாய்கள்சாகுவார் புத்திமிகநோக
நல்லவர்பொல்லாரெல்லாஞ்சாகுவோர் நாமும்செத்திடுவோம்
நாயனொருவனேயழிவில்லாதவன் நாளுமிருப்பவனும்
இப்படிநானுவிதமாய்ச்சொல்லிட எல்லாருமனமொத்து
சந்தோஷமானாரந்தவேளையில் சர்தார்நபியுல்லா
என்றனஹாப்மார்களேகேளு மின்பமோடெல்லாம்
வந்திடும்பூதப்படைமேற்போகிற வல்லவராரென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்துல்அசிசென்போர்
துள்ளியெழுந்தார்பெரும்புலிபோலத் தூதர்முன்னாக
பாய்ந்திடுஞ்சிங்கம்போலேவெழுந்தார் பயகாம்பர்முன்னாக
இராசர்கள்தலையைப்பந்துபோலவெட்டிடுவார் இராசமுடிமன்னர்
அதிகவல்லமையுள்ளவரான அப்துல்அசீசன்று
நபியுல்லாவின்பாதம்பணிந்து நபியேநாயகமே
ஒட்டகைதாளில்நீரதையழைத்த உம்பர்புகழ்நபியே
நானொருயடியேனிருக்கிறேன்சண்டைக்கு நான்போய்வென்றிடுவேன்
தங்கள்துவாவின்வரிசையுமானால்•சண்டைக்குநான்போறேன்
ஆதிபின்கிருபையிருக்குமேயானா லவர்களைவென்றிடுவேன்
அடியேன்றனக்குவிடைநீர்தந்தால் அறுத்துக்கெலித்துவாரேன்
இப்போதெனக்குவிடைநீர்தாரும் யாரொருத்தன்போதும்
என்றுஅப்துல்அசீசுசொல்லிட இறசூல்நபிகேட்டு
சந்தோஷங்கொண்டார்அப்துல்அசிசின் சத்துவமொழிகேட்டு
நல்லதுநல்லதுவுந்தன்கூட நயமும்பயமுமாக
சண்டைக்குப்போகபத்தாயிரம்பேர் தம்மையனுப்புகிறேன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
பாதம்பணிந்துபோனார்வீட்டுக்குப் பெரியோனருளாலே
உண்டுகுடித்துமகிழ்வுகள்செய்தார் உற்றபடைபோல
சந்தனம்பன்னீர்வாரிபூசினர் சவ்வாதொடுவாடை

மகமகவென்றுவீசிடப்பூசினர் கடவுள்போலே
சண்டைக்குப்போகஆயுதமணிந்தனர் சற்றுமஞ்சாமல்
பளபளவென்னமின்னிடுங்கத்திகள் எடுத்தார்கைதனிலே
தவிடுபொடிபோற்றலைகளையுடைத்திடத் தண்டாயுதமெடுத்தார்
சற்றுகத்திகள்பட்டாகத்திகள் சுருளுகத்தியெடுத்தார்
ஈட்டிகளெடுத்துக்கைகளில்பிடித்தார் இடையில்கட்டாரி
அம்பும்வில்லுந்தோளிலணிந்தார் ஆங்காரங்கொண்டு
பலபலசண்டை ஆயுதமணிந்தார் பாரோர்தானடுங்க
குதிரைகளேறிவந்தனரெல்லாங் கொற்றவர்கபிமுன்னே
வந்தபடைகளைக்கண்ணுற்கண்டு வல்லநபியுல்லா
வாழ்த்திவரமுங்கொடுத்துநபியுல்லா போகவிடைகொடுத்தார்

## அப்துல்அசீசு பூதப்படை போகுதல்

நபியுல்லாவின்பாதம்பணிந்து நடந்தார்படைபோக
வீதிகளெல்லாம்விட்டுநடந்தார் வேந்தர்படைவீரர்
மாடங்களெல்லாம்விட்டுநடந்தார் வல்லபடைவீரர்
ஆறுகள்தோப்புகளெல்லாங்கடந்தார் அரசர்படைவீரர்
தோப்பின்கிட்டேபோனாரெல்லாம் சிங்கப்புலிபோல
படைகள்வந்ததைக்கண்டாரந்தப் பூதப்படையானோர்
அனுமதித்தெழுந்தார்பூதங்களெல்லாம் ஆங்காரங்கொண்டு
எழுந்ததைக்கண்டுபூதராசனும் சும்மாயிருமென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அந்தப்படையோர்கள்
எல்லாருமேசும்மாயிருக்கார் அந்நேரவேளையிலே
ஏழைகுலத்திலுதித்தமனிதனே யெங்கேவந்தீர்கள்
சின்னகுலத்திலாகியபேர்களே சண்டைக்குவந்தீரோ
பஞ்சகுலத்திலாகியபேர்களே படையாய்வந்தீர்களோ
எலிகள்பூனையைக்கெலித்திடலாகுமோ ஏழைமானிடரே
மான்கள்புலியையிரட்டும்வாறாய் வந்தீரென்முன்னே
ஆனாலாகட்டும்நல்லதுநல்லது அறிவில்லாப்பேரே
உன்பேரென்னசொல்லிடுவெனக்கு என்றான்பெரும்பூதம்
அந்தசொல்லைக்காதிலேகேட்டு அப்துல்அசீசென்பேர்
என்குலபேர்களைவெட்டியபழியை வாங்கவந்தேனென்றார்
உன்னையுமுன்படையோர்களையெல்லாம் ஒருவெட்டாய்வெட்டி
சிங்கஅலிப்புலிநானென்னச்சொன்னார் சற்றுமஞ்சாமல்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ஆங்காரபூதம்
கிலுகிலுவென்றுசிரித்தானப்போ கையைமூக்கில்வைத்து
இப்படியெத்தனை அலியாருண்டு இந்தப்படைக்குள்ளே
வருவோரெல்லாம்நானலிநானலி யென்றுவாறார்கள்
ஆனாலாகட்டும்இவனிடவலியை அறிவோநாமென்று
கண்கள்சிவக்கவிருந்தானப்போ பூதராசாவும்

அந்தவேளையில் அப்துல் அசீசும் அஸ்ஹாப்மாரெல்லாம்
கைகளிலம்புகள் தன்னையெடுத்தார் கனத்தகோபமுடன்
பூதப்படைகள்மேல்விட்டாரம்புகள் பெரியமழைபோல
கனத்தசடைமேல்விட்டாரம்புகள் காரிடிதான்போல
மழைபொழிவதுபோல்பொழிந்தாரம்புகள் மண்விண்தெரியாமல்
அந்தவேளையில்கோபமூண்டது பூதராசாவுக்கு
சிவந்துபோச்சுதுகண்களிரண்டும் தீயினிறம்போல
எட்டிபழம்போற்சிவந்துபோச்சுது பூதராசாவுக்கு
அந்தவேளையிலென்னசெய்தான் அறிவில்லாதபாவி
எழுபதுபாரதண்டாயுதத்தை எடுத்தான்கைதனிலே
வானிடிபோலேதூக்கியடித்தான் வலுவுதனைக்கொண்டு
அந்தஅடியினால்மாண்டுமலிந்தார் ஐம்பதுபேர்மட்டும்
இறக்கமுநாணமுமில்லாதேோஷீ எடுத்தான் தண்டமதை
பின்னுமோங்கியோரடி அடித்தான் பெலமெல்லாங்கூட்டி
அந்தஅடியினால் ஆயிரம்பேர்கள் அடியோடமாண்டார்கள்
கொஞ்சமும்பாதகனச்சமும்மில்லாமல் கோபமிகக்கொண்டு
பின்னுமடித்திடத்தண்டாயுதத்தைப் பெலமாகக்கையிலெடுத்தான்
அந்தவேளையில் அஸ்ஹாபொருவர் அவனுடமுகம்பார்த்து
இலுஇலுவென்றுசிரித்தார் நின்று கொஞ்சமும்மஞ்சாமல்
சிரித்ததைப்பூதராசனுங்கண்டு எடுத்ததண்டமதை
சோரவேவிட்டான்மண்ணின்மேலே சிங்கப்பூதராஜன்
என்னவயணத்தால்நீசிரித்தா யென்முன்னேநின்று
சண்டைக்களத்திலஞ்சாமல்நீசிரித்த வகையதனைச்சொல்லு
என்றுகேட்டான்பூதராசனும் ஒன்றுக்குமஞ்சாமல்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போதஸ்ஹாபு
அறிவில்லாதபூதராசனே அடாவனந்தவனே
சிரித்தவயணத்தையென்னைக்கேட்கிறாய் சொல்கிறேனீகேளு
எங்களையிப்படிநீயுமடித்தா யீனமில்லாப்பாவி
கானபதினத்தில் அலிப்புலிவருவார் நாயன்புலியானோர்
அவருடகையிலென்னபடுவாயோ அதைநீயறிந்திடுவாய்
வெட்டிடுவாரோகுத்திடுவாரோ வருத்தங்கொடுப்பாரோ
கட்டிடுவாரோதட்டிடுவாரோ சத்துவந்தானொடுங்க
என்னபாடுபடுத்திடுவாரோ எனக்குத்தெரியாது
அதைநானினைத்துச்சிரித்தேனென்றார் அண்ணலஸ்ஹாபு
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போராசபூதம்
விரலைவைத்தான்மூக்கின்மேலே வல்லராசபூதம்
என்னசொன்னாய்யேதுநீசொன்னாய் ஏழைக்குலத்தானே
அலியாரென்றனத்தனைபேர் களிருக்கிறார்களின்னும்
உன்னுடன்கூட்டிஅலியாரென்று மூன்றுபோராச்சு

இன்னமும் அலியாருண்டோசொல்லிடு என்றான்பெரும்பூதம்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதஸ்ஹாபு
அலியாரென்றுநான்பெயர்களைச்சொன்னால் அலியாராவாரோ
நாளைக்குளெங்கள் அலிபுலிவருவார் நல்லசண்டைச்செய்ய
அவரைக்கெலித்திட ஆகாதென்னால் அதிகவல்லவர்காண்
இந்தவுலகினில்சரியாயவர்க்கு யாருமில்லையென்றார்
அந்தவார்த்தையைக்கேட்டுபூத ராசாவப்போது
அஸ்ஹாபுமார்கள்காலுக்குவிலங்குகள் போட்டானப்போது
முன்னால்வைத்த அஸ்ஹாபுமாருடன் கொண்டுபோய்வைத்தான்
தன்னுடைபூதப்படைகளைநோக்கி சீக்கிரமாநீங்கள்
தயாராகிடும்போவோமென்றான் பூதராசாவும்
வெங்கலத்தேர்மேலேறினான்ராசன் வீரியமிகப்பேசி
சேனைப்படைகள்சுற்றிவந்திடத் தோப்புதனைவிட்டு
வல்லஅலிப்புலிதோப்பினித்துள்ளே வந்துயிறங்கினார்கள்

## அலியாருடைய தோப்பிற்குவருதல்

அந்ததோப்பினுள் இறங்கியபின்பு அப்போபூதராசன்
விலங்குபோட்ட அஸ்ஹாபிமார்களில் ஒருவர்தனையழைக்க
காலில்போட்டவிலங்கையொடித்தார் கனத்தராசபூதம்
கிட்டேயழைத்துசேதிகளைசொல்கிறேன் கேளென்றுசொன்னான்
உங்களலிப்புலிதனக்குப்புத்தியும் கொஞ்சமுந்தானில்லை
சண்டைகள்செய்திடஎதிரில்வராமல் தலையைமறைத்துக்கொண்டு
வல்லமையில்லாப்பேர்களையனுப்பி மானவைக்கிறார்பார்
வல்லமையுல்லவரானாலென்றுமுன் வந்துநிற்கவேணும்
சண்டைசெய்திடவல்லமையிருந்தால் சமர்த்தைப்பார்க்கவேணும்
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால் முன்னில்வரவேணும்
வல்லமையில்லாப்பேடியாயிருந்தால் ஓடிப்போகவேணும்
அலியார்வருவார்வருவாரென்று இருந்தேனிதுவரைக்கும்
அலியேன்வரவில்லைசண்டைகள்செய்திட அகத்தியம்வரச்சொல்லு
அப்படியலியார்வராமற்போனால் இனிமேல்நானஞ்சேன்
அந்தப்பதிக்குள்வந்து புகுதுவேன் அட்டியொன்றில்லாமல்
வருவேனாகில்வெட்டிடஅஞ்சேன் குத்திடநான்அஞ்சேன்
பெண்டுபிள்ளைகள்சிறையும்பிடிப்பேன் பெரியவருத்தஞ்செய்வேன்
இந்தச்சேதியுங்களலிக்கு இப்போநீபோய்ச்சொல்லு
என்றுபோகவிடையுங்கொடுத்தான் இருண்டபூதராசன்

## மக்கத்திற்குச் சேதிசொல்லவருதல்

அந்தவார்த்தையைகாதிலேகேட்டு அப்போதஸ்ஹாபு
புலிவாய்மீண்டமானதுபோல பொழிலதைத்தான்விட்டு
கைகால்நடுங்கிடஓரோட்டமாக கடுகதானோடி
மக்கமாநகரம்வந்துபுகுந்தார் வல்லஅஸ்ஹாபு

பள்ளியடுத்துநபியுல்லாவின் பாதந்தனைப்போற்றி
என்னசொல்வேனேதுசொல்லவே னிறசூல்நன்நபியே
கண்ணால்கண்டவதைசொல்லிடக்கேளும் காரணநன்நபியே
வழிகள்நடந்துபோனோமெல்லாம் வல்லமைமிகபேசி
தோப்பின்கிட்டேபோனோமெல்லாம் சேனைப்படையாக
கருமலைபோலபூதங்களிருக்கக் கண்டோமெல்லோரும்
எங்களைக்கண்டவுடனேபூதங்கள் எல்லாமெழுந்தனுகள்
அந்தவேளையில்பூதராசனு மவர்களைத்தானிறுத்தி
வந்தவர்நீங்கள்யாரென்றுகேட்டான் வல்லராசபூதம்
அந்தசொல்லைக்காதிலேகேட்டு அப்துல்அசீசவரும்
நானலியென்றுபூதருன்னுக சொன்னாரஞ்சாமல்
அலியாரென்றிடகோபங்கொண்டான ஆங்காரபூதம்
தண்டாயுதத்தாலிரண்டடியடித்தான் ஒன்றுக்குமஞ்சாமல்
ஓங்கிஓங்கியிரண்டடியடித்தான் ஒன்றுக்குமஞ்சாமல்
அந்தஅடியினால்ஐபாயிரம்பேர் அடியோடேமாண்டார்
அதிலோர்அஸ்ஹாப்கிளுவென்று சிரித்தவன்முன்னே
எடுத்ததண்டாயுதத்தைவிட்டு எதிராளிப்பூதம்
என்னவிதத்தால்சிரித்தாய் நீயும்எனக்குச்சொல்லென்றான்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போபூதராசன்
மிஞ்சியபேர்க்குபோட்டான்விலங்கு மனமஞ்சாப்பாவி
தேருடன்தானும்அலியார்தோப்பில் வந்துயிறங்கிவிட்டான்
என்கால்விலங்குதன்னையொடித்து என்னையனுப்பிவைத்தான்
சண்டைக்குஅலியைசீக்கிரமாகத் தான்வரச்சொல்லென்றான்
கம்பர்தன்னையும்சண்டைக்குயென்றான் வந்திடச்சொல்லென்றான்
அவனைவென்றிடமனிதராலாகுமா அஹ்மதுநன்நபியே
கொஞ்சமனிதரால்வெல்லமுடியுமா கோமான்றிருத்தூதே
சின்னமனிதரால்வெல்லமுடியுமா தீனின்நன்நபியே
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
அப்போசிவதுநசியத்துச்சொன்னார் அஸ்ஹாப்மார்களுக்கு
சேதிகள்கேட்டுப்பயந்தாரெல்லாம் சண்டைக்குத்தானபோக
பூதப்படைகள்தன்னைநினைத்துப் பயந்தாரெல்லாரும்
அந்தவேளையில்நபியுல்லாவும் அறிவுமிகச்சொன்னார்
பொழுதுபோச்சுதுஇருளுமானது பூலோகமெங்கும்
ஆதியைத்தொழுதாரெல்லாருங்கூடி அன்பாய்துவாவோதி
தொழுகையுமுடிந்தது அந்தவேளையில் சொன்னார்நபியுல்லா
வீட்டுக்குப்போய்வுண்டுகுடித்து விடிந்துவாருமென்றார்
அந்தவார்த்தையைக்கேட்டெல்லோரு மரசர்தான்பணிந்து
நபியுல்லாவுந்தங்கள்வீட்டுக்குத் தானும்போனார்கள்
உலகினில்படைப்புகளெல்லா மூறக்கமாகிபோச்சு

நபியுல்லாவுமந்தவேளையில் நித்திரையானார்கள்
அந்தவேளையில்ஜிபுறாயீலும் வந்தார்நபிகிட்டே
ஆதிசலாமுப்சொல்லியனுப்பினன் அப்போஜிபுறாயீல்
வல்லோன்தூதேவரிசையுள்ளோரே மதிவடிவானாரோ
மடிந்தபேர்களைத்தொழுதுயடக்கினோம் வருந்திடவேண்டாம்நீர்
சொர்க்கவாதிகளானாரெல்லாம் தூயநபிமணியே
இப்படிசொல்லிஜிபுரீல்போனா ரிறசூல்தனைவிட்டு
பஜறுவேளையுமாச்சுதுவப்போ தூயநபியுல்லா
பள்ளிக்குப்போனாரந்தவேளையில் வந்தாரெல்லாரும்

## நசியத்துச் சொல்லுதல்.

அந்தவேளையில்தொழுதாரெல்லாம் அல்லாதனைநாடி
பஜறுத்தொழுகையும்தொழுதுமுடித்தார் பாரநபியுல்லா
என்னுடையஅஸ்ஹாப்மார்களேநீங்க ளெல்லோருங்கேளும்
முன்னால்விதித்தவிதியின்படியே மூடுந்திடுமிவ்வுலகில்
நம்முடநாட்ட மூடியாதென்றும் நாயனருட்படியாம்
மடிந்தோர்தங்களைநீங்கள்நினைத்து வருந்திடலாகாது
இறப்பும்பிறப்புமில்லாதிருப்போனேகனொருவன்றான்
மற்றவையல்லாமழியுமல்லது மண்மேல்நிலையில்லை
ஷஹீதாய்மாண்டவர்கியாமத்துநாளில் சிறப்புமிகப்பெறுவார்
அவர்களதிகபெருமைகள்பெற்றோர் அல்லாஇடந்தனிலே
சங்கையுமேன்மையுங்குன்றாப்பேர்கள் சுவர்க்கவதியானோர்
என்றுபலவாறாகவேயெல்லாரும் மகிழ்வானார்
விசனங்களெல்லாம்நீங்கியேபோச்சு மகிழ்வுமிகவாச்சு
அந்தவேளையில்நபியுல்லாவும் அவர்கள்தனைநோக்கி
இன்றுபூதப்படைமேல்போகிறவர் யாரென்றுகேட்டார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போஉமர்மஹதி
சந்தோஷமாகச்சபைமுன்னெழுந்து சருதார்களைப்பார்த்து
எங்கள்நபியேயிறையோன்றூதே எங்களுயிர்க்குயிரே
காட்டில்குடிக்கநீரையழைத்த ஹபீபுநன்னபியே
மானுக்குப்பிணையாய்நின்றவரேயருள் வள்ளல்நயினாரே
அடியேனொருவனிருக்கிறேனென்னை நலமாயனுப்பிடுவீர்
சண்டைகள்செய்துகெலித்துநான்வாரேன சருதார்நாயகமே
பூதப்படைகளைவெட்டிக்கெலிக்கிறேன் போகவிடைதாரும்
என்றுஉமறுமஹதியுஞ்சொன்னா ரிறசூல்நபிமுன்னம்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அஹ்மதுநபியுல்லா
அலியார்சண்டைக்குபோவாராகி லவனுமிருப்பானா
அலியார்போவாராகில்சண்டையவனுஞ்செய்வானா
அலியாரில்லாப்படியால்பூமி அலையும்படியாச்சு
அலியார்பெரியவர்வல்லமைதன்னில் அல்லாப்புலியவராம்

அலியார்சரத்தாலிருக்கிறபடியால் அவனும்வரலாச்சு
ஆகையால்நீரும்பூதப்படைமேல் அல்லாவுதவியினால்
சண்டைக்குப்போகுமிரண்டாயிரம்பேர் தன்னையுடன்கூட்டி
தனியாப்போவதுசரியல்லவென்று சொன்னார்நபியுல்லா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போஉமர்மஹதி
ஆதியினொளிவேறாருவிளக்கே அரசர்க்கரசேகேள்
அல்லாவொருவன்கிருபையினுதவி யானாலதுபோதும்
தங்கள்துவாவின்வரிசையினாலே சஞ்சலமில்லாமல்
சண்டைசெய்துநான்கெலித்தினிவருவேன் தங்கள்முன்னாக
துணையும்வேண்டாம்படையும்வேண்டாம் தூயநபியாரே
ஒருவனேபோதுமப்படைவெல்ல உம்பர்புகழ்நபியே
என்றுபுகழ்ந்திடஅந்தவேளையில் இறசூல்நபியுல்லா
நல்லதுதனியாபோகநீவேண்டாம் நல்லதுணையாக
கூட்டிநீர்போகும்பூதப்படைமேல் கேசரியானவரே
நீங்கள்வீட்டுக்குப்போயினிவாரும் கெடியவீரர்களே
என்றசொல்லைக்காதிலேகேட்டு எழுந்தார்வீட்டுக்கு

## உமர்மஹதி பூதப்படைபோகுதல்.

வீட்டுக்குப்போயினர்போசனமுண்டனர் வீரர்சூரரெல்லாம்
சந்தனம்பன்னீர்பூசினர்மேலில் சவ்வாதொடுவாசம்
மாலைகளெடுத்துக்கழுத்திலணிந்தனர் மனதுமகிழ்வோடு
தண்டாயுதத்தையெடுத்தனரெல்லாம் சண்டைக்குத்தான்போக
கத்தியையெடுத்துகையில்பிடித்தனர் காட்டாரியிடையில்
அம்புகளெடுத்துத்தோளில்போட்டனர் ஆங்காரத்தோடு
பட்டாகத்தியையெடுத்தனரெல்லாம் பாரசண்டைசெய்ய
சுறுனாக்கத்தியையெடுத்துக்கட்டினர் சூரவீரரெல்லாம்
ஆயுதமெடுத்துயேறினார்குதிரை அவரவர்வழியாக
ஏகமாகநடந்துவந்தனரெல்லாம் மிறசூல்நபிமுன்னம்
வந்தபேர்களைகண்ணுற்கண்ட வல்லநபியுல்லா
பூதப்படைமேல்போங்கள்நீரென்று போற்றிவிடைகொடுத்தார்
வெற்றிகள்பெற்றுவருவீரென்று வாழ்த்திவிடைகொடுத்தார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஸ்ஹாப்மாரெல்லாம்
பாதம்பணிந்துபூதப்படைமேல் போகத்துணிந்தார்கள்
குதிரைகள்மேலேயேறினாரெல்லாம் பூதப்படைபோக
வீதிகள்தன்னைவிட்டுநடந்தனர் வீரியமிகவாக
தூசியெழுந்திடகுதிரைகள்நடந்தது தோப்பினிடமாக
உமறுமஹதியார்வருவதைகண்டான் இரண்டுபெரும்பூதம்
உயர்ந்தவாராகவருவதைக்கண்டு பூதராசாவும்
இவர்தானலியாரென்றுமனதினி லெண்ணிப்பெரும்பூதம்
இத்தனைநாளாகிப்பின்பலிவந்தா ரென்றுபெரும்பூதம்

எழுபதுபாரந்தண்டாயுதத்தை எடுத்துக்கைபிடித்து
உமருமஹதிபின்கிட்டேவந்து வானிடிபோல
இத்தனைநாளாநீயேன்வரவில்லை என்றான்தானடா
சண்டைக்குவராதிருந்ததுசரியா சரத்தையுன்றனக்கு
அலியெனவுன்றன்பேர்களைச்சொல்லி யாட்களனுப்பிவைத்தாய்
எப்போவருவாயென்றுநானிருந்தேன் இன்றுநீவந்தாய்
ஆனாலாகட்டுமென்னோடுசண்டை அலியேசெய்யென்றான்
உன்னுடவலியையென்றான்காட்டிடு நானறியவேணும்
கெட்டிக்காரனுமலிப்புலியென்று கேள்வியும்நான்பட்டேன்
போட்டிடுசண்டையென்னுடனென்று பெரியமலைபோல
பூதராசனுஞ்சொல்லிட அப்போ பெரியோருமர்மஹதி
மலையுமலையுமெதிர்த்தாப்போல வல்லசண்டைசெய்தார்
புலியும்புலியுமெதிர்த்தாப்போல பெரியசண்டைசெய்தார்
சிங்கமும்சிங்கமுமெதிர்த்தாப்போல சின்னசண்டைசெய்தார்
கல்லுங்கல்லுமெதிர்த்தாப்போல கடினசண்டைசெய்தார்
இடியுமிடியுமெதிர்த்தாப்போல இருவரும்சண்டைசெய்தார்
அந்தவேளையில்பூதராசனை அடித்தாருமர்மஹதி
காயமும்பட்டுஇரத்தமும்வந்தது பூதராசர்க்கு
கோபமுண்டுகண்கள்சிவந்தது பூதராசர்க்கு
மீசைபடபடவென்றுதுடித்தது பூதராசர்க்கு
எழுபதுபாரந்தண்டாயுதத்தை எடுத்தான்கைதனிலே
ஆங்காரங்கொண்டுஓடியடித்தான் அஞ்சுதலில்லாமல்
அந்தஅடியதுபட்டதுஉமரு மஹதின்தலைமேலே
தலையுமொடிந்துஇரத்தமும்மோடின சித்திரம்போல்நின்றார்
பின்னுமோரடியோங்கியடித்தான் பெரியபூதராசன்
அந்தஅடியினால்கீழேசுழன்று விழுந்தாருமர்மஹதி
அந்தவேளையில்பூதராசனு மாங்காரங்கொண்டு
தண்டாயுதத்தைபூமிமேல்வைத்து சமர்த்தாய்மார்மேலே
காலால்மிதித்துக்கத்தியைவாங்கிக் கழுத்தையறுக்கப்போனான்
அந்தவேளையிலுமருமஹதியும் அவனுடமுகம்பார்த்து
கிலுகிலுவென்றுசிரித்தாரப்போ கொஞ்சமுமஞ்சாமல்
சிரித்ததைக்கண்டுபூதராசனும் சீக்கிரமாஎழுந்து
கெட்டிக்காரனுமென்றான்வந்து அலியேகேளு
கழுத்தையறுத்திடுஞ்சமயந்தனிலே கிலுகிலுகிலுவென்று
என்னவிதத்தால்சிரித்தாய்நீசொல் லென்றான்பெரும்பூதம்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போஉமர்மஹதி
என்னைவதைத்திடஇன்றுநினைத்தா யெங்கோனலிகையால்
நீயுமுன்குலராசனும்பலபேர் நிலத்திலுள்ளவரும்

நானேயவர்கையில்நீபடும்பாட்டை. யெண்ணிநான்சிரித்தேன்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ராசபெரும்பூதம்
உன்னைக்கண்டுநான் அலியென்றிருந்தேன் உமறுமஹதியாரே
நீதான்அலிப்புலியென்றுநினைத்தேன் நீயலியல்லவோடா
வேறேயுமின்னமலியாருண்டோ வெறிகொண்டபேரே
ஆனாலாகட்டுமலியாரென்பார் அதிககெட்டிக்காரரோ
அவரைக்கெலித்திட ஆகாதோவென்றால் அந்தவகையைச்சொல்லு
என்றகேட்டான்பூதராசனும் உமர்மஹதியைப்பார்த்து
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போஉமர்மஹதி
அலியார்வல்லமைகொஞ்சஞ்சொல்லுகிறேன் அடாபாவிகேளு
எங்கள்மூஹம்மதுநபியின்மருமகர் ஏகன்பெரும்புலியாம்
ஏழுவானமும்பூமியுமஞ்சிடும் எங்களலியார்க்கு
தேவரெவர்களும்பயந்துநடுங்குவார் எங்களலியார்க்கு
ஜின்களும்பூதமும்நடுங்கியொடுங்குவா ரெங்களலியார்க்கு
அவருடவல்லமையிவ்வளவென்று எவருமறியார்கள்
சத்துவந்தன்னில்கொஞ்சஞ்சொல்லிட ஆகாதென்னாலே
என்னைப்போலஅதிகவீரர்கள் அளவிடமுடியாப்பேர்
எத்தனைபேரோகைகீழிருக்கிறார் எங்களலிப்புலிக்கு
அந்தயடிமையினால்நானொருவடிமை அதிகவெளியவனான்
அவர்களென்னிலும்வலிகளுள்ளவர் ஆங்காரமுள்ளோர்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போராசபூதம்
அசந்துஎண்ணமூங்கொண்டான்பின்னும் உமர்மஹதியைப்பார்த்து
மக்கத்தைநாடிப்போகிறேனிப்போ வல்லசண்டைசெய்ய
இனிமேலிங்குவிருந்திடமாட்டேன் இப்போதேபோவேன்
அலிப்புலிதன்னைவெட்டிக்கெலிப்பேன் னறுப்பேனவன்தலையை
என்றுநானுவிதமாய்பந்தயம் பூதராசன்சொல்ல
அந்தச்சேதியைக்காதிலேகேட்டு அப்போதுமர்மஹதி
பூதத்துக்கெல்லாம்ராசனுவந்த பூதராசாவே
சேவகப்பாடியாயிருந்தால்நீயும் போகத்துணியவேண்டாம்
சிப்பாய்மகனுயிருந்தால்நீயும் போகத்துணியவேண்டாம்
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால் போகத்துணியவேண்டாம்
நானேக்குஎங்களலிப்புலிவருவார் நடுங்கச்சண்டைசெய்ய
உங்களிருபேர்வல்லமைதன்னை நாங்கள்பார்க்கவேணும்
ஊருக்குள்போவதுராசர்களுக்கு உற்றஞாயமல்ல
சண்டைகள்கெலித்தபின்போவது சரியென்றுசொன்னார்
உமறுமஹதியின்சொற்களைக்கேட்டு உயர்ந்தபெரும்பூதம்
நல்லதுநல்லதுஉன்சொற்படியே நீங்களறிந்துகொள்ளும்

உன்னையலிகானென்றுயிருந்தேன் நீயுமலியல்ல
உங்களலியையென்னுடன் சண்டைக்கு யிங்கேவரச்சொல்லு
கெட்டிக்கார அலியாயிருந்தால் கிட்டேவரச்சொல்லு
சத்துவமுள்ள அலியாயிருந்தால் சீக்கிரம்வரச்சொல்லு
இப்படிச்சொல்லியெல்லார்தமக்கும் போட்டான்கால்விலங்கு
அதிலேயொருவர்தன்னையழைத்து மக்கமனுப்பிவிட்டான்

## அஸ்ஹாபுமக்கம்.போய்ச் சேதிசொல்லுதல்.

புலிவாய்மீண்டமானதுபோலப் புறப்பட்டாரப்போ
நரிவாய்மீண்டகோழியைப்போல நடந்தார்களப்போ
தோப்பைவிட்டுவெளியேவந்து திரும்பித்தான்பார்த்து
ஓட்டமெடுத்தாரொரேயோட்டமாயேரடி மக்கம்வந்து
பள்ளிக்குப்போந்துநபியுல்லாவின் பாதந்தன்னைப்போற்றி
கையுங்காலும்நடுங்கிநின்றார் ஹபீபுநபிமுன்னே
எங்கள்நபியே ஆதியின்தூதே யான்சொல்லக்கேளும்
போனோம்நாங்களுமுமறுமஹதியும் பொழிலினிடமாக
எங்கள்வரவைக்கண்டானந்தப் பூதராசாவும்
எழுந்தான்பெரியமலையதுபோல யிருண்டபூதராஜன்
உமறுமஹதியைக்கண்ணுற்கண்டு இவர்தானலியென்று
தண்டாயுதத்தைக்கையிலேபிடித்து வந்தானவர்கிட்டே
நீ அலியானுலென்முன்னக நின்றுசண்டைசெய்யும்
வல்லமையுல்ல அலியானல் மல்லமர்செய்யென்றான்
அந்தவார்த்தையைகாதிலேகேட்டு அப்போதுமர்மஹதி
பூதராஜன்கூடவேசண்டை செய்தாரந்நேரம்
தண்டாயுதத்தால்பூதத்தையடித்தார் சத்துவங்குன்றாமல்
அந்த அடியால்இரத்தமும்வந்தது அவன்மேல்தானிருந்து
அப்போபூதராஜன்றனக்கு ஆங்காரம்பொங்கி
தண்டாயுதத்தாலோரடியடித்தான் தலையுமுடைந்துபோச்சு
பின்னும்மடித்தான்கீழேவிழுந்தார் பெரியஉமர்மஹதி
கத்தியையெடுத்தான்கழுத்தையறுத்திடக் கனத்தமுடிராஜன்
அந்தவேளையில்கிலுகிலுவென்று சிரித்தாருமர்மஹதி
சிரித்தவண்ணத்தைச்சொல்லென்றுகேட்டான் பூதராஜாவும்
அப்போதுமறுமஹதியுஞ்சொன்னார் பூதராஜர்க்கு
அலிப்புலிகையில்படுவதைநினைத்து சிரித்தேன்ராஜாவே
என்றுசொல்லிடப்பூதராஜாவு மென்னையனுப்பிவித்தான்

சேதிகள்சொல்லிடு அலியார்கென்று சொல்லியனுப்பிவித்தான்
அவனுடன்சண்டைகள்செய்திடவிங்கு ஆகாதெவராலும்
பொல்லாக்கொடியபூதராஜன் பெரியமலைபோல
நாளைக்கிங்கேவருகிறேனென்றார் நபிகள்நாயகமே
வந்தாலென்னகெடுதிகளாகுமோ வல்லோன்றிருத்தூதே
சின்னமனிதரால்வெல்லமுடியுமோ தீனின்நன்னபியே
இப்படிநானாவிதமாகச்சொன்னா ரிறசூல்முன்னாக
அந்தச்சேதிகள்முழுதுங்கேட்டு அஹ்மதுநபியுல்லா
அஸ்ஹாப்மார்களெல்லாங்கேட்டு அச்சமிகவானார்
பூதப்படையின்சேதிகள்கேட்டு பயங்கள்பெரிதானார்
அந்தசைகைநபியுல்லாவு மறிந்துகொண்டனர்காண்
அந்தவேளைபொழுதுபோச்சுது அன்பாய்த்தொழுதுக் கொண்
அஸ்ஹாப்மார்களேயவரவர்வீட்டுக்கு அனுப்பினவேதாம்பர் [டார்
தாங்களும்தங்கள்வீட்டுக்குப்போயினர் தனியோனபியுல்லா

## ஊரார் வலசைபோகுதல்.

உலகிலுள்ளவுயிருகள்பலது முறக்கமாகிப்போச்சு
சகலஜனங்களுமுறக்கமாயினர் சகத்திலுள்ளோர்கள்
நபியுல்லாவுமுறக்கமாயினர் நாடுமுறங்கிப்போச்சு
சந்திரனுலவினன் தாரகையோடு சகமுழுதும்விளக்கி
சேவல்கள்கூவினகிழக்கும்வெளுத்தது தினகரன்றுனுதிக்க
பொழுதுவிடிந்தவுடனேஜனங்கள் போகநாடினார்கள்
பூதப்படையைநினைத்துச்ஜனங்கள் வலசைவாங்கினார்கள்
ஜின்னின்படைகளைநினைத்துச்ஜனங்கள் வலசைவாங்கினார்கள்
அலியாரில்லையென்றுஜனங்கள் வலசைவாங்கினார்கள்
பெண்டுபிள்ளைகள்தங்களைகூட்டி வலசைவாங்கினார்கள்
உயிர்கள்பிழைத்தால்போதுமென்றெண்ணி வலசைவாங்கினார்கள்
வீடுகள்போனால்போகுதென்று வலசைவாங்கினார்கள்
மாடங்கள்போனால்போகுதென்று வலசைவாங்கினார்கள்
பணங்கள்போனால்போகட்டுமென்று வலசைவாங்கினார்கள்
பட்டணம்போனால்போகுதென்று ஓடிப்போனார்கள்
நகர்கள்போனால்போகுதென்று நடந்துஓடிப்போனார்
சீமைகள்போனால்போகுதென்று சிதறிஓடிப்போனார்
நாலுதிக்கிலுஞ்சிதறிப்போயினர் அஸ்ஹாப்மாரெல்லாம்
மக்கத்தைவிட்டுஓடிப்போயினர் அஸ்ஹாப்மாரெல்லாம்

இந்தசேதியைநபியுல்லாவுக்கு எல்லாந்தான்சொல்ல
அல்லாஹுதர்நபியின்கிட்டே அபூபக்கரும்வந்தார்
கத்தநபியுல்லாவின்கிட்டே கனத்தவுமறும்வந்தார்
ஒட்டகைபேசியநபியின்கிட்டே உஸ்மானும்வந்தார்
அந்தவேளையில் அஸ்ஹாப்மார்சிலர் அவர்களுந்தான்வந்தார்
அரசினிலேறியநபியுல்லாவே ஆதித்திருத்தூதே
ஆதியினிடத்தில்பேசிப்பின்வந்த அரசர்கவமணியே
பூதப்படையின்கலகத்தாலே பெரியோர்சிறியோரும்
வீடுகள்தன்னைவிட்டெல்லோரு மிரண்டோடிப்போனார்
காடுகாடாகச்சிதறியெல்லாருங் கலங்கியோடிப்போனார்
வேதக்கடலேவெற்றியுள்ளோரே விள்ளுமறிவோரே
என்றுகாணுவிதமாய்வாழ்த்திப் போற்றினார்களெல்லாம்

## நபிநாயகம் பூதப்படைமேல் போகுதல்.

ஆதியொளிலே நூருவிளக்கே அஹ்மதுநன்னபியே
இதற்குயோசனையென்னசொல்லும் இறசூலானவரே
பூதப்படையால்கலக்கமானது பெரியோர்சிறியோரும்
ஓடிப்போயினர்வூரதைவிட்டு ஒருவரும்மில்லாமல்
என்னசெய்வோமேஇனிசெய்வோம் எங்கள்நபினாரே
என்றசொல்லைகாதிலேகேட்டு இறசூல்நபியுல்லா
ஒருவருமினிமேல்போகிடமாட்டார் உயர்ந்தபடைமேலே
பயந்துஓடினர்பூதங்கள்தனக்குப் பிள்ளைகள்பெண்டோடு
இனிமேல்சும்மாவிருப்பதுசரியல்ல நாமும்போகவேணும்
என்றுசொல்லிடமூன் றுயார்களும் அஸ்ஹாப்மார்களுமாய்
சண்டைக்குப்போகஆயுதம்பூட்டினர் சர்தார்நபியோடு
பூதத்தைவென்றிடஆயுதம்பூட்டினர் பூரிப்பாயெல்லாம்
தங்கள்தங்கள்குதிரைமேலேறி சர்தார்நபிமுன்னே
வந்தனரெல்லாம்ஆயுதம்பூட்டி வல்லநபிமுன்னம்
வந்தபேர்களைக்கண்ணுற்கண்டு வல்லநபியுல்லா
சண்டைக்குப்போகத்தயாராகினர் சர்தார்நபியுல்லா
பூதப்படைகளைநாசப்படுத்திட பெரியநபியுல்லா
வீட்டைவிட்டினிவெளியேவந்தார் வேதநபியுல்லா
மதியைப்பிளந்தநபியுல்லாவும் வந்தார்படைபோக

எண்ணிக்கையில்லாமலக்குகள்வந்து என்னையனுப்பென்ன
கூட்டங்கூட்டமாமலக்குவந்து எம்மையனுப்பென்ன
சொர்க்கப்பெண்கள்பூமாரிபொழிய தூயநபியுல்லா
ஜேஜேயென்னசுற்றிலுமலக்குகள் சூழ்ந்துதான்வரவும்
வலதுபக்கமாகிசித்தீக்குமறுக்கத்தாப்வரவும்
இடதுபக்கமாயுதுமானுரு மொருவர்தான்வரவும்
சுற்றிலும்அஸ்ஹாப்மார்கள்சூழ்ந்து சுற்றித்தான்வரவும்
பூதப்படைமேல்புறப்பட்டார்திருப் பெரியவநபியுல்லா
என்னசொல்வேனேது சொல்வேன் அன்றுநடந்தவிதம்
மக்கத்தைவிட்டுநபியுல்லாவும் போனார்பூதப்படை
மேகக்குடையிட்டிடநடந்தார் வேதர்நபியுல்லா
கஸ்தூரிவாடைவீசிடநடந்தார் ஹபீபுநபியுல்லா

## பிள்ளைகள் தகப்பனுக்குப்போய்ச் சொல்லுதல்.

இப்படிநபியுல்லாவும்சண்டைக்குப் போனதைத்தானறிந்து
வள்ளல்அசைனுமுசைனுமாக வாகாயோடிவந்து
தன்னுடதகப்பனாரலியார்கிட்டே தாங்களோடிவந்து
எங்களைப்பெற்றுஇனிதாயுகந்த எங்கள்தந்தையரே
நபியின்கூடநல்லமுதுண்ட எங்கள்தந்தையரே
புலியாம்மோதிரங்கொண்டினிவந்த எங்கள்தந்தையரே
நபியின்மருகாய்ப்புலியினில்வந்த நாயகத்தந்தையரே
நாடுகள்தேசங்கள்நடுங்கிடவெட்டிடும் நல்லத்தந்தையரே
மண்டலமெல்லாமெச்சிடவெட்டிடும் மன்னர்தந்தையரே
என்றநானாவிதமாய்ப்புகழ்ந்து இருந்தாரலிகிட்டே
சரங்கொண்டலியாரிருப்பதினாலே சொன்னார்மெதுவாக
அன்றுவருத்தமும்சுரமாவிருந்த ஆதிப்புலியாரின்
காதில்விழுந்துமத்தெனப்பிள்ளைகள் சொல்லியதிருமொழிகள்
பிள்ளைகளசொல்லைக்கேட்டாரப்போ பெரியோனலியுல்லா
பதினாலாநாட்சுரமலியாருக்குப் படைத்தோன்விட்டதுவாம்
அதிலேயெட்டுநாட்சுரமும்போச்சுது ஆதிபுலியாற்கு
இன்னமுமெட்டுநாட்சுரமுமிருக்கு ஏகனபுலியாற்கு
எப்படிபட்டசுரமேயானால் இயம்பிடநீர்கேளும்
கல்லுக்கடித்தால்கடல்நீரெல்லாங் காய்ந்துவற்றிப்போகும்
மலைமேலடித்தால்மலைகளும்வெந்து சாம்பலாகிப்போகும்
மற்றவையொன்றுமந்தச்சுரத்தை பொருந்திடமாட்டாது
வல்லரலியாரானபடியினால் பொறுத்தார்வெஞ்சுரத்தை

அப்படிபட்டசுரமாயிருந்தும் ஆதிபுலியாற்கு
தன்னுடமக்களின்பேரில்கிருபை சற்றும்போகவில்லை
என்றன்கண் மணியானமக்களே என்னசேதிசொல்லும்
நபியுல்லாவின்கல்பினெளிவே யென்னசேதிசொல்லும்
என்னகாரணம்வந்துமுடிர்ந்தது என்றன்கண்மணியே
இன்றுமறைந்திடவேண்டாம்சொல்லுங்க ளுயிரின்கண்மணியே
என்று அலியார்சொல்லிடவப்போ திரண்டுபிள்ளைகளும்
எங்களைப்பெற்றபாவாவேகேளும் எங்கள்சொல்லுவளை
மகரிபுபட்டணம்மிருந்துபூதம் படைகள்வந்ததுவும்
அபூபக்கர்சித்திக்குதோப்பினுளிறங்கி யதனையழித்ததுவும்
உமர்கத்தாபின்கோப்பினுள்வந்து அதனையழித்ததுவும்
உசமானுருடதோப்பினுள்வந்து அதனையழித்ததுவும்
அலிப்புலியாருடதோப்பினுள்வந்து அதனையழித்ததுவும்
சண்டைக்குப்போகயஸ்ஹாப்மார்கள் தான்ஷகிதானதுவும்
உமறுமஹதியின்தலையுமொடிந்திடபூதமடித்திடவும்
மக்கத்திலுள்ளஜனங்களெல்லாம் வலசைகளோடினதும்
நபியுல்லாமூன்றுயார்களும் சண்டைக்குபோனதுவும்
சுரத்தால்அலிபுலிவருத்தமேலாகியத் துயரம்பெரிதாகி
பெலமுங்குறைந்துபோச்சுதுவினிமேல் பூதப்படையாலே
பிழைத்திடமாட்டோமென்றெல்லோரும் பேசியோடிப்போனூர்
இப்படிப்பாலகர்சொல்லக்கேட்டு வேங்கைப்புலியலியார்
கோபங்கொண்டோசத்தமிட்டெழுந்தார் கொற்றஅலியாரும்
போட்டசத்தத்தாற்அலிபுலியார் படுத்திருந்தபாயும்
பஞ்சுபஞ்சாய்பறந்துபோச்சுது பாரப்பெருஞ்சுரமும்
வோடிப்போச்சுதுவுடலதைவிட்டு ஒருநொடிக்குள்ளாக
அப்போதலியார்மக்களைப்பார்த்துக் கண்மணியானவரே
நீங்கள்சொன்னதால்பொறுத்துநான்கொண்டேன் நீங்களல்லாமல்
மற்றவரெனக்குப்பெலமில்லையென்று சொல்லிடுவாராகில்
வாளுக்கிரையாயின்னேரங்கொடுப்பேன் வரிசையென்மக்களா

அலிறலியல்லாஹு நபிஸல்லல்லாஹு
அலிஹிவஸல்லத்தைக் காணப்போகுதல்

அந்தவேளையிலாதிப்புலியார் ஆங்காரமிகவாகி
கிக்கிரமாகக்கம்பளையெழுத்தார் சிங்கப்புலியாலி

அழைத்தசேதியைக்காதிலேகேட்டு அப்போதுகம்பர்
மாண்டவுடலுக்குயிர்வந்தாற்போல் வலிமையுள்ளகம்பர்
சீக்கிரமாகவோடியேவந்தார் தீனின்புலிமுன்னே
கம்பரைபார்தொருசேதியுஞ்சொன்னார் கர்த்தனலிபுலியார்
நபியுல்லாவைக்காணநான்போறேன் நல்லகம்பரேகேள்
சீக்கிரமாகத்துல்துல்குதிரையைச் சிங்காரித்துக்கொண்டு
என்னுடகத்திதுல்பக்காரை எடுத்துதீவிரமாய்
பின்னால்வந்திடுநபியின்பாதங் காணநான்போறேன்
என்றுசொல்லிவேங்கையலிப்புலி யெழுந்துசீக்கிரமாய்
வல்லோன்நபியைக்கண்டிடநாடி வாகாதானடந்தார்
சீக்கிரமாகத்தேடியேவந்தார் திருநபிமுன்னாக
ஆத்திரமாகநடந்தினிவந்தார் அஹ்மதர்பின்னாக
வேதர்மிகவாய்நடந்தினிவந்தார் உடையோன்புலியலி
ஓட்டமாயோடியேநடந்தினிவந்தார் உடையோன்புலியாலி
அலியார்வருவதைகண்டாரப்போ அஹ்மதுநபியுல்லா
இந்தச்சேதியையலியார்தனக்கு யார்போய்ச்சொன்னாரோ
வருகிறவிதத்தையார்போய்ச் சொன்னார்வல்லயலியார்க்கு
இப்படிநபியுல்லாநானாவிதமா யெண்ணிடுங்காலையிலே
வல்லஅலிப்புலிசீக்கிரமாக வந்தார்நபிகிட்டே
சிங்கஅலிபுலிநபியின்கிட்டே சீக்கிமாய்வந்தார்
பாரப்புலியார்நபியுல்லாவின் பாதந்தனைப்போற்றி
படைத்தன்றாதாய்ப்புவியினில்வந்த பயகாம்பர்நபியே
நபிமார்க்கெல்லாம்நாயகமாகிய நபியேநமவணியே
சந்திரன்பேசியசருதார்நபியே சாற்றிடவினிக்கேளும்
என்னவிதத்தால்சொல்லிடவில்லை யிந்தச்சேதியெல்லாம்
அடியேனிருக்கையில் தாங்கள்போவது அழகாநன்னபியே
பாதநொந்திடநடந்திடவேண்டாம் பாரநயினாரே
நின்றிடும்நின்றிடும்நடந்திடவேண்டாம் நாயன்திருவொளியே
என்றுசொல்லிநபியுல்லாவு மலியார்முகம்பார்த்து
சேகனுனக்குச்சொல்லிடவேண்டாம் தூயோன்திருமொழியாம்
அதனாலுனக்குச்சொல்லநானில்லை அலியாரேயென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதலிப்புலியார்
பூதப்படைமேலென்னைவனுப்பிடும் போறேனெனச்சொன்னார்
சொன்னதைக்கேட்டுநபியுல்லாவும் சிந்தைமகிழ்வாகி

சேனைப்படையாய்சிலரைக்கூட்டி செல்லும்படைக்கென்றார்
அந்தவார்த்தையைஅலியார்கேட்டு அல்லாதிருத்தூதே
அடியேன்றனக்குப்படைகளும்வேண்டாம் ஆள்களும்வேண்டாம்
சகலமுமாளுமிறையோன்கிருபையும் தங்கள்துவாப்பேரும்
இருந்தாற்போதும்எனக்கொன்றுவேண்டாம் இறசூல்நன்னபியே
ஆகையால்சண்டைக்குப்பூதப்படைமேல் என்னையனுப்புமென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போநபியுல்லா
அல்லாபுரமாய்பாரமுஞ்சாட்டி அனுப்பினார்படைமேல்
வெற்றியுமல்லாகொடுப்பானென்று வாழ்த்தியனுப்பினார்கள்

## அலியார் பூதப்படைமேல் போகுதல்.

அந்தவேளையில்கம்பருவம்வந்தார் அலியார்சொற்படிக்கு
கத்தியுங்குதிரையுங்கொண்டினிவந்தார் கத்தாபுலிமுன்னே
வாளதைவாங்கிகையிற்பிடித்தார் வல்ல அலியுல்லா
துல்துல்குதிரைமேலேறினாரப்போ சூரா அலியுல்லா
கம்பரும்படியேயமுக்கிடஏறினர் கத்தாபுலியுல்லா
கடிவாளத்தைபிடித்தார்கையில் கத்தாபு அலியுல்லா
நடனமாடிடவிட்டார்குதிரையை நாயன்புலியுல்லா
இன்று அலியார்குதிரைமேலேறினர் ஏகன்பெரும்புலியார்
என்னசெய்திடநாடிடுவாரோ வென்றுவப்போது
ஏழுவானமுங்கிடுகிடுவென்று எங்குமதிர்ந்துபோச்சு
ஏழுபூமியுங்கிடுகிடுவென்று எங்குமதிர்ந்துபோச்சு
மலைகளெல்லாங்கிடுகிடுவென்று எங்குமதிர்ந்துபோச்சு
ஏழுகடல்களுங்கிடுகிடுவென்று எங்குமதிர்ந்துபோச்சு
புலிகளுநடுங்கினநரிகளுநடுங்கின பூமிதனிலுள்ள
சிங்கமுநடுங்கினயாளியுநடுங்கின தேவுநடுங்கினவாம்
விட்டார்குதிரையைபூதப்படைமேல் வேங்கையலிபுலியார்
பூமியதிர்ந்திடநடந்தது துல்துல் வேகமிகவாகி
காற்றுப்போலபறந்துநடந்தது துல்துல்மிகச்சீறி
செந்தூளெழுந்துபறந்துபோச்சுது துல்துல்காலாலே
கருந்தூளெழுந்துபறந்துபோச்சுது துல்துல்காலாலே
எங்குந்தெரியதூசிமூடின துல்துல்காலாலே
வானமுந்தெரியாமற்போச்சுது தூசியின் துல்துல்காலாலே
பொழுதேதெரியாமறைந்துகொண்டது தூசிதானெழுந்து
விண்ணுமண்ணுந்தெரியாமற்போச்சுது தூசிதானெழுந்து

வேகமாய்த்துல்துல்பறந்துவந்தது வேகமிகமீறி
மேகம்போலபறந்ததுதுல்துல் வேகமிகமீறி
வாய்வுபோலபறந்ததுதுல்துல் வேகமிகமீறி
வெற்றிகம்பனுங்கூடவேவந்தனர் வேங்கைப்புலியோடு
தோப்பின்கிட்டேவந்தனர்அலியார் துல்துல்பரியேறி
தங்கள்வயசுக்கும்மதிகவயசுபேர் தோப்பிலிருப்பதாலே
குதிரையின்மேலேயேறிப்போவது குற்றமென்றெண்ணி
குதிரையைவிட்டுக்கீழேயிறங்கினர் கேசரியலியுல்லா
கம்பருந்தானுமாய்த்தோப்பிலுள்புகுந்தனர் காரண அலியுல்லா
சேனைப்படைகளொன்றுமில்லாமல் போனாரலியுல்லா
அலியார்வருவதைக்கண்டார்தோப்பில் அஸ்ஹாப்மாரெல்லாம்
மாண்டவுடலுக்குஉயிர்வந்தாப்போல் மகிழ்வுபெரிதானார்
செத்தவுடலுக்குஉயிர்வந்தாப்போல் செழிப்புமிகவானார்
செத்தபிணம்போலிருந்தவர்களுக்கு செழிப்புமிகவாச்சு
என்னசெய்வோமென்றுகனைத்த எண்ணம்ஓடிபோச்சு
அலியார்வந்தாரென்றெல்லோருக்கும் ஆனந்தமிகவாச்சு
இனிமேல்நமக்குபயமுமில்லையென்றுமகிழ்ந்தார்கள்
கண்ணுங்குளிர்ந்ததுமனமுங்குளிர்ந்தது அஸ்ஹாப்மார்களுக்கு
கட்டிலடங்காசந்தோஷமானார் அஸ்ஹாப்மாரெல்லாம்
ஆதிப்புலியார்வருவதைக்கண்டு எழுந்தாரெல்லோரும்
சலாமுஞ்செய்தார்அலியார்தனக்கு அஸ்ஹாப்மாரெல்லாம்
சங்கைகள்செய்தார்அலியார்தனக்கு அஸ்ஹாப்மாரெல்லாம்

## பூதராஜனைக் கொல்லுதல்.

எழுந்தபேர்களையுட்காருமென்று ஏகன்புலியாலி
கையால்சைகையுஞ்செய்தாரப்போ கத்தாபுலியாலி
அந்தசைகையைக்கண்ணுற்கண்டு பூதராசாவும்
இவர்களுக்கெல்லாங்குருவாமென்று எண்ணினான்பூதம்
தங்கள்குலத்தாரிங்குயிருப்பதால் பிச்சைதான்கேட்க
வந்தவராக்குமென்றெண்ணினான் வலியபூதராசன்
பிச்சைகேட்டிடவந்தாவென்று இருந்தான்பூதராசன்
ஐயமெடுத்திடவந்தாவென்று இருந்தான்பூதராசன்
சண்டைக்குவந்தவலியாரென்று சற்றுமறியாமற்போனான்
உயிரைவாங்கவந்தவரென்று ஒன்றுமறியாமற்போனான்
நரகுக்கனுப்பிடவந்தவரென்று நாடியறியாமற்போனான்

பிச்சைக்காரனிவரென்றெண்ணினான் பெரியாசபூதம்
நம்மிடத்தில்சிக்கினாரெல்லாம் நலிதல்மெலிவாக
கையைவிரித்தாரிந்தவேளையி லொன்றுமில்லையென்று
ஆனபடியினால்பிச்சைகொடுப்போம் ஏழைமனிதனுக்கு
என்றுமனதினிலெண்ணினனப்போ இருண்டபூதராஜன்
அலியார்தன்னைக்கண்ணுற்கண்டு அப்போராஜபூதம்
அடாபிச்சைகாரா இங்கே என்னிடம்வாவென்றான்
பிச்சைகேட்கவந்தமனிதனே யென்னிடம்வாவென்றான்
ஐயமெடுத்திடவந்தமனிதனே என்னிடம்வாவென்றான்
தருமந்தருகிறேனுங்களுக்கிப்போ சீக்கிரம்வாவென்றான்
பூதராஜனழைத்ததைக்கண்டு பெரியோனலிப்புலியார்
என்னவிதத்தால்நம்மையழைக்கிறா னிருண்டபெரும்பூதம்
என்னசொல்லிடநம்மையழைக்கிறா னிருண்டபெரும்பூதம்
என்னகேட்டிடநம்மையழைக்கிறா னிருண்டபெரும்பூதம்
கம்பரைப்பார்த்து ஆதிப்புலியார் கருத்தபூதராஜன்
என்னவிதத்தாலழைக்கிறானம்மை நீபோய்கேளென்றார்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போதுகம்பர்
பூதராஜன்கிட்டப்போயினர் புண்ணியகம்பருமே
தென்னங்காய்போல்பொன்னின்கட்டியை தேடியேகொடுத்தானும்
அந்தக்கட்டியைகையிலேவாங்கி கம்பர்தான்திரும்பி
பொன்னின்கட்டியைஅலிப்புலிகையில் கொண்டுவந்துகொடுத்தார்
அந்தக்கட்டியைக்கையிலேவாங்கி அல்லாப்புலியாரும்
அவனிடவெங்கலத்தேர்மேல்போட்டார் வேங்கையாதிபுலி
மெள்ளவெங்கலத்தேர்மேல்போட்டார் வேங்கையாதிபுலி
மலைபோலுயர்ந்ததேர்மேல்போட்டார் மன்னராதிபுலி
பொன்னின்கட்டிதேர்மேல்விழவும் பொடிபொடியாய்த்தேரு
துண்டுதுண்டாய்முறிந்தது வுயர்ந்தவெங்கலத்தேரு
மடமடவென்றுமுறிந்துவிழுந்தது வெங்கலத்தேரு
கடகடவென்றுமுறிந்துவிழுந்தது வெங்கலத்தேரு
பத்துவிருபதுதுண்டாய்விழுந்தது பாரப்பெருந்தேரு
கும்பலாகவிழுந்துபோச்சுது கொடியவெங்கலத்தேரு
தேருமுறிந்துவிழுந்திடக்கண்டு திகைத்துப்பூதராஜன்
என்னபுதுமையிருக்குதுவென்று இருண்டபூதராஜன்
கையைத்துடைமேலடித்துக்கொண்டான் கருத்தபூதராஜன்
மூக்கில்விரலையெடுத்தினிவைத்தான் முரட்டுபூதராஜன்

மூன்பின்னிவனையாரினியறிவார் மூறிந்துபோச்சதேரு
கண்கள்சிவந்துபோச்சுதுவப்போ பூதராஜனுக்கு
எட்டிபழம்போற்சிவந்ததுகண்கள் பூதராஜர்க்கு
மாதளம்பூப்போல்சிவந்ததுகண்கள் பூதராஜர்க்கு
மீசைபடபடவென் றுதுடித்தது பூதராஜர்க்கு
இனியில்லாதகோபம்பிறந்தது பூதராஜர்க்கு
உருட்டிமிரட்டிப்பார்த்தானப்போ பூதராஜாவும்
செறசெறவென் றுபல்லைக்கடித்தான் பூதராஜாவும்
மீசைமேல்கையைபோட்டானப்போ பூதராஜாவும்
மண்டிக்கால்போட்டுக்குந்தினனப்போ பூதராஜாவும்
ஓரேஅடியினுல்அடிப்பேனென்ருன் பூதராஜாவும்
தருமஞ்செய்யவந்ததுகருமம் என்ருன் பூதராஜாவும்
பிச்சைநாம்கொடுத்தபலனுமென்ருன் பூதராஜாவும்
எழுபதுபாரதண்டாயுதத்தை எடுத்தான்கைதனிலே
ஆணுவம்பேசிப்பல்லைக்கடித்து ஆங்காரங்கொண்டு
செட்டைமலைப்போல்கிட்டவடுத்தான் நீண்டமுடிராஜன்
ஆங்காரங்கொண்டுஓங்கியடித்தான் அல்லாபுலிமேலே
தயிரியங்கொண்டுஓங்கியடித்தான் அலியார்தலைமேலே
வீரியமாகஓங்கிஅடித்தான் அலியார்தலைமேலே
வானிடிபோலேதூக்கிஅடித்தான் அலியார்தலைமேலே
தன்னிடபெலமெல்லாங்கூட்டியடித்தான் அலியார்தலைமேலே
அந்தஅடியினை தாங்கினுரலியா ரிடதுகையாலே
ஓங்கியஅடியேதாங்கினுரலியா ரிடதுகையாலே
தண்டாயுதத்தைப்பிடித்துவளைத்தார் சூரப்புலியலியார்
அவனுடகழுத்தினில்மாட்டினுரப்போ அல்லாப்புலியலியார்
மெள்ளவிழுத்தனர்பூதராஜனை வேங்கைப்புலியலியார்
பெரியமலைபோல்வளைந்தானப்போ பெரியராஜபூதம்
மூங்கில்போல்வளைந்தானப்போ மூரட்டுராஜபூதம்
வில்லைப்போலவளைந்தானப்போ வெருண்டராஜபூதம்
ஓரேகுத்தாகுத்தினுரலியார் உயர்ந்தபூதமதை
அந்தக்குத்தினுல்பூதராஜன் அசந்துமடிந்துபோனுன்
உடலினிலுள்ளஎலும்புகளெல்லாம் நொருங்கிப்போச்சுதப்போ
செறசெறவென் றுஎலும்பில்லாமல் நிலத்தில்மோதிவீழ்ந்தான்
துண்டுதுண்டாய்முறிந்தான்பூத துரோகிராஜாவும்
கண்டகண்டமாகக்கூழண்டான் கருத்தபூதராஜாவும்

ஓரேகுப்பலாக்குவிந்துமடிந்தான் பூதராசாவும்
அலியார்குத்தியசத்தத்தாலே அந்நேரவேளையிலே
எழுபுலிகளுங்கிடுகிடுவென்ன எல்லாமலைசந்துபோச்சு
எழுவானமுங்கிடுகிடுவென்ன எல்லாமலைசந்துபோச்சு
மலைகளெல்லாமடமடவென்று மரங்களசைந்துபோச்சு
தேருஓடிந்ததுபூதமிறந்ததும் கண்டாரெல்லாரும்
மற்றுமுள்ளபூதமும்ஜின்களும் கண்டதுகண்ணாலே
கிடுகிடுவென்றுநடுங்கிபோச்சுது கால்கைவராமல்
வறண்டுபோச்சுதுநீரில்லாமல் வாய்கள்தான்குளறி
அந்தவேளையில்புகுந்தாரலியார் தோப்பிற்குள்ளாக
கத்தியையுருவிகையிற்பிடித்தார் கத்தாயலியுல்லா
துண்டுதுண்டாய்வெட்டினாரப்போ பூதச்சேனைகளை
கண்டகண்டமாகஅறுத்தார் கனத்தபூதங்களை
கரும்பைநறுக்குவதுபோலேநறுக்கினார் ஜின்னின்படையோரை
வெள்ளிரிக்காயைப்போலறுத்தாரப்போ வேங்கைபுலியுல்லா
வெட்டிவெட்டிவெளியேஎறிந்தார் வெள்ளரிக்காயைப்போல்
பெரியமலைபோல்குவித்துப்போட்டார் பெரியோனலியுல்லா
கலைகள்பிடுங்கியெறியும்வாறாய் கிளையோடுமாய்த்தார்
ஒருபூதத்தைவெட்டாமல்விட்டா ருடையோனலியுல்லா
மற்றவையெல்லாமொன்றில்லாமல் மாய்த்துப்போட்டாரலியார்
அஸ்ஹாப்மார்களின்காலில்போட்ட விலங்கையொடித்துப்போட்டார்
எல்லாப்பேரையுமொன்றாய்ச்சேர்த்தன ரிறையோன்புலியுல்லா
மட்டில்லாதசந்தோஷமானார் அஸ்ஹாப்மாரெல்லாம்
சொல்லிடமுடியாச்சந்தோஷமானார் அஸ்ஹாப்மாரெல்லாம்

## அலிறலியல்லாஹு அன்ஹு
## மலுக்குராசனுக்கு சேதிசொல்லி அனுப்புதல்.

வண்டுகள்பூவைச்சூழ்ந்தாற்போல வந்துசூழ்ந்துக்கொண்டார்
அஸ்ஹாப்மார்கள்தங்களையலியார் ஆதரித்துக்கொண்டார்
கொல்லாமல்விட்டபூதமொன்றுங் கிடுகிடுவெனநடுங்கி
காலுங்கையுமதிர்ந்திடப்பூதங் கண்கள்தான்பிதுங்க
மூட்டிமோதிஅலிப்புலிகாலில் மோதித்தான்வீழ்ந்து
அண்ணனுமில்லைதம்பியுமில்லை ஆலிப்புலியலியே
தாயுமில்லைதகப்பனுமில்லைச் சருதார்புலியலியே
அக்காளில்லைத்தங்கச்சியில்லை அரசர்புலியலியே

ஆருமற்றபரதேசிநான் அண்ணல்புலியலியே
உன்னுடவல்லமைநானறியாமல் கூடவேோடிவந்தேன்
வெட்டாமலென்னைவிட்டுநீர்விட்டால் வெகுபலனுமக்குண்டு
புண்ணியமெத்தக்கிடைக்குமுமக்கு பெரியபுலியாரே
நன்மையுமெத்தக்கிடைக்குமுமக்கு நல்ல அலியாரே
இப்படிநானுவிதமாய்க்கெஞ்சி அழுதனுபெருபூதம்
பூதமழுகிறஅழுகையைக்கண்டு பெரியோனலிபுலிக்கு
மனமுமிரங்கிப்பூதத்தைப்பார்த்து மகாபூதமேகேள்
என்னுடசொற்படிநடப்பாயாகி லுனக்குப்பதவியுண்டு
உயிரோடுலகிலின்னஞ்சிலநாள் பிழைத்துநீயிருப்பாய்
இல்லாமற்போனுலொருவெட்டாலே யுன்னைவெட்டிடுவேன்
உயிரோடிருக்கமாட்டாய்நீயு முருண்டுமெழிந்துபோவாய்
என்றசொல்லைக்காதிலேகேட்டு இருண்டபெருபூதம்
தங்கள்சொற்படிகேட்டுநடப்பேன் தயவுள்ளநன்னபியே
என்னபுத்திசொல்லிடுமையா என்றதுபெருபூதம்
அந்தவார்த்தையைஅலியார்கேட்டு அடாபூதமேகேள்
உன்னுடராசனமுன்னுற்சென்று நீயாதொன்றக்குமஞ்சாமல்
உங்களிராசனையெங்கள்நீனி லுறுதிபாய்வரச்சொல்லு
அப்படிவந்திடமாட்டேனென்றால் சண்டைக்குவரச்சொல்லு
அதற்குவராமற்போனுல்நானும் அங்கேவந்திடுவேன்
வருவேனுகில்வானுக்கிரையாய் எல்லாரையுங்கொடுப்பேன்
இரத்தவாறுகளோடிடச்செய்வேன் இந்தச்சேதிகளை
அலியார்சொல்லினுரென்றுநீசொல்லிடு கொஞ்சமுமஞ்சாமல்
என்றசொல்லைகாதிலேகேட்டு இருண்டபெருபூதம்
வேங்கைப்புலியேவல்லமைக்கடலே வெற்றிமன்னவரே
உங்கள்பெருமையைராசன்முன்னே யெல்லாஞ்சொல்லிடுவேன்
தங்கள்வல்லமைசங்கதிமுழுதும் தவருமற்சொல்வேன்
என்றுபாதத்தில்மோதிவிழ்ந்தது இருண்டபூதம்
அப்போதலியார்விடையுங்கொடுத்தார் அந்தபூதத்துக்கு
அல்லுறைப்மார்கள்தங்களைச்சேர்த்து அப்போதலியாரும்
சந்தோஷமாகத்தோப்பதைவிட்டு சகலபேரோடும்
மக்கமாநகர்நாடியேவந்தார் மகாசிங்கம்போலே
பள்ளியில்வந்துநன்னபிபாதத்தைப் பணிந்தாரலியாரும்

அந்தவேளையில்பொழுதும்போச்சுது அப்போநபியுல்லா
சந்தோஷமாகத்தொழுதுமுடித்தார் நாயகநபியுல்லா
அவரவர்வீட்டுக்குப்போனாரெல்லாம் அதிகமகிழ்வாக

### மலுக்குராசனுக்கு பூதம்போய்ச் சொல்லுதல்.

அலியாரனுப்பியபூதம்தானது அழுதுமிகவாடி
ஆபாசமென்மேல்போங்கிடசலித்து அதிகமெலிவாகி
தன்கிளையோர்யாவரையுமழைத்து தனியாய்த்தான்தனித்து
சஞ்சலத்தோடுமலைகளாறுகள் தனைத்தாண்டி தாண்டி
இப்படிச்சிலநாள்வரைக்கும்நடந்தது சிந்தைமிகவாடி
சொல்லமுடியாமகரிபுபட்டணம் சேரத்தான்நடந்து
மலைபோலுயர்ந்தசுற்றுமதிலையும் வாகாத்தான்கடந்து
நீண்டவீதியுள்புகுந்துநடந்தது விசனமிகப்பொங்க
மாடகூடங்களெல்லாம்தாண்டி மனதுசலிப்பாகி
மூன்றுமாமுழம்ராசனிருக்கு மாணிக்கக்கொலுமுன்னே
தோரணங்கட்டியேஇடங்களுந்தாண்டி சிம்மாதனமுன்பாய்
மலைபோல்கொலுமேல்குந்தியிருக்கிறான் மாமலுக்குமகாராசன்
பூதப்படைகளும்சுற்றியிருந்தது கொலுவின்முன்னாக
ஜின்னின்படைகளும்சுற்றியிருந்தது கொலுவின்முன்பாக
நாமிப்படைகளுமசுற்றியிருந்தன ராசன்கொலுமுன்னே
சங்கிப்படைகளுமசுற்றியிருந்தன ராசன்கொலுமுன்னே
துருக்கிப்படைகளுஞ்சூழ்ந்துவிருந்தன ராசன்கொலுமுன்னே
மந்திரிமார்களுமருகினிலிருக்க மலுக்குமகாராசன்
தந்திரிமார்களுமருகினிலிருக்க மலுக்குமகாராசன்
சந்தோஷமாகச்சிம்மாதனத்தில் சகலபடைசூழ
அந்தசமயத்தில்அலியாரனுப்பிய பூதமிகவாடி
கொலுமுன்னாகராசனைக்கண்டு பாதம்பணியாமல்
வெட்டியமரம்போல்முன்பினிலநின்று விம்மிவிம்மியழுது
கண்ணீர்விட்டழுதுநின்றது கனத்தபெருபூதம்
குலுங்கிகுலுங்கியழுதுநின்றது கொடியபெரும்பூதம்
வந்தழுகிறபூததனைப்பார்த்து மாமலுக்குராசன்
என்னவிதத்தால்தனியாவந்தது ஏனழுகிறான்பூதம்
என்னகாரணமேதுகாரண மறிவோமென்றெண்ணி
கோடையிடிபோல்பூதத்தைப்பார்த்து கொடியமலுக்குராசன்
பெரியகடல்போல்சேனைகளோடு போனாய்ப்பூதமேநீ
அத்தனைபூதப்படைகளைவிட்டு அழுகிறவிதமென்ன
தனியாய்வந்தகாரணமென்ன சொல்லென்றுகேட்டான்

அந்தச்சொல்லைப்பூதமுங்கேட்டு அலியைத்தானினைந்து
கிடுகிடுவென் றுபயந்துபோனது கொடியபெரும்பூதம்
எங்களையாளும்ராசாவேநான் எல்லாஞ்சொல்லுகிறேன்
சொல்லிடநாவும்வரவேயில்லை துலங்குமுடிமன்னு
என்னவிதமாய்ச்சொல்வேனுனக்கு என்றான்பெரும்பூதம்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போமலுக்குராசன்
ஆனாலாகட்டுஞ்சொல்லிடுவென்றான் அப்போபூதஞ்சொல்லும்
ராசருக்கெல்லாம்ராசாவாகிய ராசாவேகேளும்
நாங்களுமக்காமாநகரஞ்சேர்ந்தோம் ராசாதிராசாவே
வந்தார்சண்டைக்குஆயிரம்பேர்கள் வல்லமைமிகப்பேசி
அவர்களையடித்துவிலங்குகள்போட்டான் அதன்பின்சண்டைக்கு
நாலாயிரம்பேர்வந்தவர்களை நறுக்கினான்மீந்தோர்க்கு
காலுக்குவிலங்குபோட்டனதன்பின் கனத்தப்படையாக
பத்தாயிரம்பேர்வந்தாரவர்களை பாரயடியாலே
பகுதியைவதைத்துமீந்தபேருக்குப் போட்டோம்கால்விலங்கு
நாலாந்திரமுமிரண்டாயிரம்பேர் வந்தார்சண்டைக்கு
அதிலொருவீரியனிருந்தானவனை யடித்தான்தலையொடிய
அவர்கள்காலுக்குவிலங்குகள்போட்டு அடைத்தான்சிறைக்குள்ளே
நாலுதரமுமிப்படிசண்டை நடந்ததுராசாவே
அலியார்சண்டைக்குத்தான்வராம லனுப்பிவித்தபடையாம்
அஞ்சாமுறையில்சண்டைகள்செய்திட அலியார்தான்வந்தார்
அவரலியாரென்றறியாமற்போனான் பூதராசாவும்
பிச்சைக்காரன்போலவேவந்தார் ஜபரிபலியாரும்
சும்மாவேளையில்அலியார்வலிமை சூராதியர்கள்
சண்டைகளத்தில்அலியின்வலுமையைச்சிப்பாய்மாரரிவார்
வெட்டிடும்போது அலியார்வலுமையை வீரரறிவார்கள்
செத்திடமாண்டிடும்போதுவலுமையைச் சேவகமாரறிவார்
உலகினிலவருடவலுமையறிவோரொருவருந்தானில்லை
உலகமுழுதுமதிர்ந்திடும்சண்டையில் கிடுகிடுவென்ன
ஆங்காரமுள்ளவர்வல்லமையுள்ளவர் அல்லாபுலியலியாம்
அவர்குட்டையுமல்லநெட்டையுமல்ல குணமுமுள்ளவர்காண்
பருத்தவரல்லர்பெருத்தவரல்லர் பஞ்சைபோலவராம்
சேனைப்படையோடு வரவேயில்லைத் தனியாய்வந்தார்காண்
யானைகுதிரையின்படைகளும்மில்லை யான்சொல்லக்கேளு
வீரியம்பேசிவந்தவரல்லர் வேங்கைப்புலியலியார்

குதிரைமேலேறியும்வந்திடவில்லை கொற்றபுலியாலி
கத்தியைக்கையில்பிடித்தவரல்லர் கனத்தபுலியாலி
கூடவொருஆள் தன்னையழைத்தவர் கூட்டிகடந்துவந்தார்
காங்களிறங்கியிருக்கிறவிடத்துக்கு நல்லோர்போல்வந்தார்
வந்தவர்தன்னைக்கண்டான்பூத வல்லராசாவும்
பிச்சைக்கேட்கவந்தவனென்று புத்திமிகவிறங்கி
கட்டிப்பொன்னைக்கையில்கொடுத்தான் கனத்தபூதராசன்
அந்தக்கட்டியைக்கையிலேவாங்கி யடித்தார்தேர்மேலே
மெத்தனப்பெரியவெங்கலத்தேரு முறிந்தது துண்டாக
குப்பலாகக்குவிந்துபோச்சுது கொடியவெங்கலத்தேரு
பத்துவிருபது ஆயிரந்துண்டாய்ப் பொடியாய்த்தான்போச்சுது
தேருமுறிந்திடபூதராசர்க்கு சிவந்துபோச்சுதுக்கண்கள்
கோபங்கொண்டுதண்டாயுதத்தைக் கொண்டான்கைதனிலே
தூக்கியடித்தான் அலியார்தலைமேல் சுமந்தபோடியாய்
அந்தஅடியைக்கையிலேபிடித்து ஆதிப்புலியலியார்
வளையம்போலத்தண்டைநவளைத்து மாட்டினார்அவன்கழுத்தில்
இழுத்துவளைத்தொருகுத்துகுத்தின ரெலும்புகள்தானொறுங்க
அந்தக்குத்தால்செத்தான்பூத ராசாவானவனும்
செத்தபின்தோப்பினுள்புகுந்தார் சீறியபுலிபோல
ஆட்டுக்குலத்தினுள்புலிபுகுந்தாற்போல் புகுந்தாரலிப்புலியார்
கொக்குக்குலத்தினுள்ராசாளிப்போல் புகுந்தாரலிப்புலியார்
துண்டுதுண்டாவெட்டியெறிந்தார் பூதசேனைகளை
என்னைமாத்திரம்வெட்டாமல்விட்டா ரேனோயானறியேன்
என்னைப்பார்த்தொருசேதியுஞ்சொன்னா ரேசன்புலியலியார்
என்னுடசேதிகள்முழுதுஞ்சொல்லிடு ஒன்றுக்குமஞ்சாமல்
எங்கள்தீனில்ராசனைவரச்சொல் வாராமற்போனால்நான்
வந்துகொல்வேனென்றுசொல்லிடு வார்த்தைபிசகாமல்
அப்படிநீயும்சொல்லாமற்போனா லறுப்பேன்தலையையென்றார்
என்னையாளும்ராசகெம்பீரா ராசாவேகேளும்
அலியாரிங்கேவருவாராகி லவரைவெல்லமாட்டோம்
அல்லாதவரோடெதிர்ப்பவர்யாரு மில்லையிவ்வுலகில்
சொல்லியபடியேசெய்வாரல்லது தோற்றுப்போகமாட்டார்
சேதிகளெல்லாமுமக்குச்சொல்லினேன் ராசாமாமனுக்கே

## மலுக்குராஜன் சொல்லுதல்.

பயித்தியங்கொண்டபூதமேகேளு பயந்துவந்தவனே
அளவில்லாதபடையோடுசென்று அடிபட்டவெறியா
மட்டில்லாதபடையுடன்சென்று கட்டுபட்டமடையா
சின்னமனிதன்கைவாட்கிரையான சீருகெட்டவனே
பஞ்சைமனிதனைவல்லவனென்று பகர்ந்தாயென்முன்னே
எளியோர்நாங்கள்வல்லமையில்லா ரெதிர்க்கமாட்டோரென்றும்
சூரன்தீரன்வீரனவனென சொன்னாயஞ்சாமல்
வாயாலூதினால்பஞ்சாய்பறப்பான் வலிமைசாலியென்றாய்
என்கைவில்லினைஎடுத்துவாரா யென்னைக்கெலிப்பாரா
தண்டாயுதத்தைபூமியைவிட்டு எடுப்பவர்தானுமுண்டோ
இப்படிநானாவிதமாய்ப்பேசி ராசாமாமலுக்கு
கிலுகிலுவென்றுசிரித்தானையா ராசாமாமலுக்கு
பளபளவென்றுசிரித்தானையா ராசாமாமலுக்கு
மந்திரிமார்கள்தங்களைப்பார்த்து யோசனைகேட்டானும்
தந்திரிமார்கள்தங்களைப்பார்த்து தயிரியங்கேட்டானும்
என்னயோசனைசொல்லுங்களென்றான் ராசாமாமலுக்கு
சூட்சமிதற்குச்சொல்லுங்களென்றான் ராசாமாமலுக்கு
சண்டைக்குப்போகிறவரின்னாரென்று சொல்லுங்களென்றுக்கேட்டான்
அலியின்தலையையறுத்துவருபவர் யாரென்றுகேட்டான்
புலியின்தலையைக்கொண்டுவந்திட போரவர்யாரென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அதிலேயொருவீரன்
சங்கிப்படைக்குத்தலைவனாகிய சங்கிராசாவும்
இருநூற்றுமுப்பதுமுழத்தாள்சங்கி எழுந்தானப்போது
மன்னர்க்கெல்லாமன்னவனாகிய ராசாமாமலுக்கை
அளவில்லாதபடையினையுடைய ராசாமாமலுக்கை
எண்ணிக்கையில்லாபடையினையுடைய ராசாமாமலுக்கை
ஈதொருபெரியவேலையாய்நினைத்தாய் ராசாமாமலுக்கே
ஒருநொடிப்பொழுதினிலழித்துநான்வருவேன் ராசாமாமலுக்கே
கண்ணையுருட்டிப்பார்ப்பேனாகில் கர்ப்பங்கலங்கிப்போகும்
உருட்டிமிரட்டிபார்ப்பேனாகி லுலகமிரண்டுபோகும்
அந்தப்படியிருக்கபூதப்படைகளை அறுத்துப்போட்டானும்
அத்தனை ஆனுவமுள்ளவனாமலி ஆனாலாகட்டும்
அவனையொருகைநான்பார்த்திடுவே னையாராசாவே
அலியின்தலையைஅறுத்துநான்வருவே னையாராசாவே
பெண்டுபிள்ளைகளைச்சிறையாய்பிடிப்பே னையாராசாவே
மக்கத்தைபிடித்துக்கைவசமாக்குவே னையாராசாவே

கோட்டையைபிடித்துத்தூளாய்ச்செய்வே னையாராசாவே
இப்படிநானுவிதமாபந்தய மிசைத்தான்ராசர்க்கு
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு ராசாமாமனுக்கே
சந்தோஷம்பொங்கிப்பூரிப்பாச்சுது ராசாக்காளுனும்
மட்டிலடங்காமகிழ்ச்சியாச்சுது ராசாக்காளுனும்
சங்கிபடைக்குத்தலைவனுகிய சங்கிராசனேகேள்
சொல்லியபடிநீசெய்வாயாகில் சங்கிராசனேகேள்
சீமையில்பாதிதருவேனுனக்கு திரவியமுந்தருவேன்
யானைப்படையுந்தருவேனுனக்கு அடாசங்கிராசா
குதிரைப்படையுந்தருவேனுனக்கு கொண்டுவருவாயானால்
காலாட்படையுந்தருவேனுனக்கு கணக்குகளில்லாமல்
அளவில்லாதபணமுந்தருவேன் அலியைக்கொண்டுவந்தால்
வேண்டியதெல்லாமுனக்குதருவேன் வெற்றிபெற்றுக்கால்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போசங்கிராசன்
என்னையாளும்ராசாவேகேள் மனுக்குராசாவேகேள்
இத்தனைதூரம்நீசொல்லிடவேண்டாம் ராசாமாமனுக்கே
இவ்வளவரைக்குஞ்சொல்லநீவேண்டாம் ராசாமாமனுக்கே
உன்னுடஅடியனுஇருக்கிறேனுனும் ராசாமாமனுக்கே
உன்னிடசொல்படிநானுயிரைக்கொடுப்பேன் ராசாமாமனுக்கே
சண்டைக்குப்போய்நான்வந்தபின்பு ராசாமாமனுக்கே
வேண்டியதெல்லாங்கொடுப்பாயெனக்கு ராசாமாமனுக்கே
இப்போதொன்றும்நான்பேசிடமாட்டேன் ராசாமாமனுக்கே
கேட்டவையெல்லாம்வந்துகேட்கிறேன் ராசாமாமனுக்கே
கெலித்துவருவேனுகில்பேசுவேன் ராசாமாமனுக்கே
என்றசொல்லைக்காதிலேகேட்டு ராசாமாமனுக்கு
நல்லதுநல்லதுசங்கிராசனே நான்சொல்லக்கேளு
சீக்கிரமாகநீவீட்டுக்குப்போய்வா சங்கிராசாவே
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போகொடியசங்கி
தெண்டஞ்செய்துவீட்டுக்குப்போனான் சங்கிராசாவும்

## சங்கிராசன் மக்கம்போகுதல்.

இருநூறுமுப்பதுமுழந்தான் எழுந்தான்மலைப்போல
வீட்டுக்குப்போனன் போசனமுண்ண விரும்பிசங்கிராசன்
அரிசிகலம்நூறுக்கிடச்சொன்னு னுடுவறுபதுவாம்
ஓட்டகைநாற்பதும்சமைத்திடச்சொன்ன ன்னெருவேளைதின்ன

அந்தப்படியேசமையலுமாச்சது அரைநொடிக்குள்ளாக
சமைத்தவையெல்லாமுண்டானையா சங்கிராசாவும்
சந்தனம்பன்னீர்வாரிப்பூசினான் சண்டாளன்மார்மேலே
எழுபாரமாலையைக்கழுத்தி லிட்டானப்போது
எழுபதுபாரந்தண்டாயுதத்தை யெடுத்தான்கைதனிலே
முப்பதுபாரகத்தியையெடுத்து இடுப்பில்கட்டினானே
நாற்பதுபாரவில்லினையெடுத்துப் போட்டான்தோள்மேலே
மற்றவாயுதமெல்லாமெடுத்தான் மகாசங்கிராசன்
வீட்டைவிட்டுவெளியேவந்தான் பெரியமலைபோல
மலுக்குராசன்முன்னில்நின்றான் மலைபோலசங்கி
சங்கிவந்ததைராசனுங்கண்டு சந்தோஷமானான்
சங்கிப்படையோர்தன்னையழைத்து சொன்னான்மாமலுக்கு
கணக்கில்லாதசங்கிப்படைகளைக் கொடுத்தான்மாமலுக்கு
அளவில்லாதசங்கிபடைகளை யழைத்தான்மாமலுக்கு
சங்கிப்படைகளேநீங்களுங்கூட சீக்கிரமாய்ப்போங்கள்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு சங்கிப்படையோர்கள்
ஆயுதமெல்லாமெடுத்துப்பூட்டி ஆரம்பித்தாரெல்லாம்
கத்திகளெடுத்தார்தண்டமெடுத்தார் கனத்தசண்டைக்கு
ஈட்டிகளெடுத்தார்ச்சக்கரமெடுத்தா ரெல்லாருங்கூடி
அம்புகளெடுத்தார்சுற்றுகத்தியும் ஆயுதங்களெடுத்தார்
சண்டைக்குப்போகக்கூடினரெல்லாம் சங்கிப்படையோர்கள்
அந்தவேளையில்சங்கிராசனும் ஆணவமிகப்பேசி
சண்டைக்குப்போகராசனிடத்தில் தானும்விடைவாங்கி
கண்டபேரண்டபட்சிமேலேறினான் கனத்தசத்தமிட்டு
பட்டணம்விட்டுப்புறப்பட்டானும் படைகள்தான்சூழ
துந்துமிபம்பைகள்தாரைமுழங்கிட தொனிசெய்யுங்கடல்போல
பேரிகைசச்சரிசின்னமுழங்கிட பெரியபடைசேனை
காடுமலைகளெல்லாந்தாண்டி கடுகநடந்தார்கள்
ஆறுகுளங்கள்பலதுந்தாண்டி அணியணியாநடந்து
மக்கமடுக்ககாதவழியில் வந்துயிறங்கினார்கள்
மயிதானத்தில்வந்துமிறங்கினர் மகாகடல்போல
மட்டிலடங்காகூடாரங்களை மலைபோலடித்தார்கள்
கணக்கில்லாதகூடாரங்களை கண்டமட்டுமடித்தார்
அணியணியாககூடாரத்தை அடித்தார்நகமுகமும்
ஜேஜேயென்றிடச்சங்கிப்படையோர் செறிந்தாரெல்லோரும்
மட்டிலடங்காச்சந்தோஷமானார் கனத்தசங்கியர்கள்

அந்தவிடத்தில்மக்கத்தார்களின் ஒட்டகந்தனைமேய்த்து
இருந்தாரஸ்ஹாப்மவ்விடமொருவர் அன்சாரியென்போர்
வந்தபடைகளைகண்ணால்கண்டு பயந்துநடுங்கிப்போனார்
கிடுகிடுவென்றுகைகால்பதறிட கிடுகலங்கிப்போனார்
மலைபோலிருக்கிறபேர்களைக்கண்டு மயங்கிவாடிப்போனார்
கன்னங்கரேலென்றிருப்பதைக்கண்டு கலங்கிவாடிப்போனார்
சுவற்றிலெழுதியசித்திரம்போல சோர்ந்துவாடிநின்றார்
அந்தவேளையில்ராசசங்கி அவ்விடந்தான்மேயும்
ஒட்டகையெல்லாங்கையாற்பிடித்து ஒவ்வொருஒட்டகமாய்
பொழுதுக்குக்காட்டிவிழுங்கிப்போட்டான் பெரியசங்கிராசன்
சின்னபேரியின் தண்ணீர்முழுதும் சேறோடுதான்குடித்தான்
அந்தப்புதுமையைக்கண்ணாற்கண்டு அன்சாரியென்போர்
தன்னையும்பிடித்துத்தின்பானென்று சஞ்சலமிகவாகி
அவ்விடமிருக்கமனதில்பயமாய் அன்சாரியென்போர்
ஓரேயோட்டமாமக்கத்தைநாடி ஓடியோடிவந்தார்
தப்பிப்போனோநாமவன்கையில் சஞ்சலமாகாமல்
என்றுநினைத்துஓரேயோட்டமா வந்தார்மக்கநகர்
பள்ளிக்குச்சென்றுநபியுல்லாவின் பாதந்தனைப்போற்றி
வள்ளல்நபியேவரிசைத்தூதே வேகக்கடலாரே
நாகப்பாம்பொடுவழியிற்பேசிய நபிநூர்முஹம்மதே
வழியிற்புலியொடென்மொழிபேசிய வல்லோன்றிருத்தூதே
நாகப்பாம்பையொருமிழக்கோலா லடித்தநன்னபியே
சொல்லிடநாவும்வரவில்லையெனக்கு தூயநன்னபியே
கருமலைபோலகூட்டமும்வந்தொரு காதவழிக்குள்ளே
இறங்கியேபடங்குகளடித்தாரெல்லாம் ஏகமாமலைபோல
ஒவ்வொருமலைபோலிருக்கிறாரொருவர் உடல்பெருத்தவராய்
அதிலொருதலைவனிருக்கிறானபியே அவனையும்நான்பார்த்தேன்
கண்டவுடன்கிடுகலங்கிபோனேன் கைகால்வராமல்
நான்மேயவிட்டஒட்டகமெல்லாம் நபியேநீர்கேளும்
காபர்கள்எலிதனைநெருப்பினில்சுட்டு எடுத்துதின்பதுபோல்
பொழுதுக்குக்காட்டிஒவ்வொருஒட்டக மாகப்புசித்துவிட்டான்
அங்கொருயேரியின்தண்ணீர்வற்றிட அவ்வளவுங்குடித்தான்
என்னசொல்வனேதுசொல்வே னிறசூல்நன்னபியே
ஜின்னோபரியோபூதமோதேவோ தெரியாதென்றனக்கு
அவனோடெதிர்க்கயாரால்முடியும் அப்படிப்பட்டவன்காண்

## அலியார் சங்கிராஜனைக் கொல்லப்போகுதல்

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அஞ்சமதாகபியுல்லா
என்னசொன்னீரேதுசொன்னீ ரென்றமறியீரோ
மூன்றால்பூதப்படைகளையனுப்பிய மலுக்குமூலுக்குராசன்
பின்னும்சண்டைக்கெங்கபடைகளை பெரிதாயனுப்பிவித்தான்
ஆகையாலினிநாமெதிராதிருந்தா லிங்குவரத்துனிவான்
என்றுமுஹம்மதுநபியுல்லாவும் சொன்னாரப்போது
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அந்தேரவேளையிலே
வேங்கையாலிப்புலியாரெழுந்து விள்ளுவாரப்போது
நாயன்றாதேநவமணியான நபிகள்நாயகமே
அல்லாறஹ்மத்துச்செய்வானுங்கி லவனொருபாராமல்
பொல்லாத்துஷ்டன்போக்கிரியானவன் பெரியோன்மூனிவுள்ளோன்
கல்லின்மனதான்கசடுங்கிறைந்தவன் கடையெட்டப்பாவி
அவனைபடக்கிடவென்னையனுப்பும் அல்லாவருள்தூதே
சண்டைசெய்துநான்செலித்துவருகிறேன் சல்லல்லாநபியே
வெற்றிப்பெற்றுநான்வென்றுதருகிறேன் வேதாம்பர்நபியே
அடியேன்றனக்குவிடைநீர்தாரும் அல்லாயிறசூலே
என்றவார்த்தையைக்காதிலேகேட்டு இறசூல்நபியுல்லா
வெற்றியும்வலிமையும்கொடுப்பானல்லா வெல்லபோருமென்றார்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ஆதியலியுல்லா
சந்தோஷமானார்சண்டைக்குப்போக சர்தாரலியுல்லா
கத்தியையெடுத்துகையில்பிடித்தார் கத்தாவலியுல்லா
மலைகளைத்துண்டுதுண்டாமாக்கிடும் வல்லசுல்பக்காரர்
கற்களைத்துண்டுதுண்டமாக்கிடும் கனத்தசுல்பக்காரர்
பூமியையிரண்டாய்பிளந்திடும்வல்ல பெரியசுல்பக்காரர்
அந்தக்கத்தியைகையில்பிடித்தா ரல்லாபுலியுல்லா
அரசர்தலைகளைகாலால்மிதித்திடும் ஆணுவமுள்ளதுல்துல்
அண்டகோணத்தையெட்டிப்பறந்திடும் ஆங்காரமுள்ளதுல்துல்
குதிரைகள்தலையைகூசாமல்மிதிக்கும் கொற்றவர்மாதுல்துல்
அந்தக்குதிரையைசிங்காரித்தோர் ஆண்மையுள்ளகம்பர்
சேனமுமெடுத்துபூட்டினரப்போ சிங்கவலிகம்பர்
காலுக்குத்தண்டையும்போட்டாரப்போ கனத்தமுடிகம்பர்
கடிவாளமுமெடுத்துப்போட்டனர் கனத்தவலிகம்பர்
குதிரையைப்பிடித்துவந்தார்கம்பர் அலிபுலிதன்கிட்டே

அப்போதலியார் ஆதியைநினைத்து ஆங்காரதுல்துலின்மேல்
வீரியஅலியார்குதிரைமேலேறின ரங்கேரவேளையிலே
வானமும்நடுங்கின பூமியும்நடுங்கின மலையுநடுங்கினவாம்
புலியும்நடுங்கின அரியும்நடுங்கின பூமிதனிலுள்ள
பலபலபடைப்புகளெல்லாம்நடுங்கின பாரஅலியாலே
கம்பருமொக்கநடந்தாரப்போ அலியார்தன்கூட
காற்றாய்ப்பறந்துபோகுதுதுல்துல் கனத்தபடையைநாடி
வேகமாய்ப்பறந்துபோகுதுதுல்துல் வெள்ளப்படையைநாடி
செந்தூளெழுந்துபறக்குதுதிசைகள் ஒன்றுந்தெரியாமல்
கருந்தூளெழுந்துபறக்குதப்போ ககனந்தெரியாமல்
விண்ணுமறைந்துபோச்சுதுவப்போ குதிரைவிரைவாலே
காடுவனமெல்லாந்தாண்டிநடந்தார் கத்தாஅலிபுலியார்
மாடகூடங்களைவிட்டுநடந்தார் வல்லயலிப்புலியார்
ஏறியாறுகள்தாண்டிநடந்தார் ஏகனலிப்புலியார்
குளங்களருவிகளெல்லாங்கடந்தார் கொற்றவலிப்புலியார்
இப்படித்தாண்டிப்போனார்சங்கி யிருக்குமிடமாக
அந்தவேளையிலவனுடபட்சி அங்கோரிட தனிலே
பெரியமலைபோல்மேய்ந்திருந்தது பெலக்காரமுளபட்சி
அந்தபட்சியைக்கண்ணாற்கண்டார் அல்லாப்புலியுல்லா
அந்தவேளையில் அலியார்வருவதைக்கண்டான் சங்கியவன்
நம்முடபட்சிக்கிரையிவனென்று நினைத்தான்சங்கியவன்
பட்சியைப்பார்த்துச்சொன்னானப்போ பாரசங்கிராசன்
அதோவருகிறபேர்களைப்பிடித்துக் கொத்திவிழுங்கென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அந்தபட்சியது
கொத்தவிழுங்கிடபறந்ததுபட்சிக் கொற்றவலிகிட்டே
பட்சிபறந்துவருவதைக்கண்டார் பாரஅலியுல்லா
அலிப்புலிகிட்டேநடந்துவந்தது கொத்திதான்விழுங்க
வாயைத்திறந்துகொத்திடவென்று; வல்லப்பட்சியது
அந்தவேளையிலென்னசெய்தார் வல்லஅலியுல்லா
கத்தியையுருவிவெட்டினார்வாய்மேல் கனத்தஇடிபோல
அந்தவெட்டினாலிரண்டுதுண்டாய் வீழ்ந்ததுபட்சியது
பெரியமலைபோலகீழேவிழுந்தது பெலமுள்ளபறவையது
வெள்ளரிக்காய்போல்விரிந்துபோச்சுது ஓரேவெட்டாலே
பட்சியிறந்திடக்கண்டான்சங்கிப் பதறித்தானெழுந்து
பல்லைநெறநெறவென்னக்கடித்தான் பாரசங்கிராசன்
கண்களிரண்டுஞ்சிவந்துபோச்சுது சங்கிக்கானாலும்
எட்டிப்பழம்போல்சிவந்துபோச்சுது இரண்டுகண்ணுமப்போ
உதட்டைப்பல்லாற்கடித்துக்கொண்டான் உற்றசங்கிராசன்
எழுபதுபாரதண்டாயுதத்தை யெடுத்தான்கைதனிலே

சீறிகடந்தான் அலியார்கிட்டே சீக்கிரமாய்ச்சங்கி
குதிரைமேலிருக்கும் அலியார் தன்னைப் பெலமெலாந்தான்கூட்டி
ஓங்கியோரடிவிம்மியடித்தா னுங்காரங்கொண்டு
அந்த அடியைக்கையிலேதாங்கினார் அலியாரந்நேரம்
தாங்கிடவிரண்டுதுண்டாய்முறிந்தது தண்டாயுதமப்போ
மலைமேலவ்வடி விழுமேயானால் மரமெல்லாமுறியும்
ஆணலியாகியபடியாலடியை அலியார் தாங்கினர்காண்
மற்றப்பேரால்முடியாதவ்வடி வலியேதான்தாங்க
அந்தப்புதுமையைக்கண்ணுற்கண்டு அப்போசங்கிராசன்
இப்படிப்பட்டவல்லமையோர்க ளெவருமுலகிலில்லை
இதுநாள்வரைக்குங்கண்டதேயில்லை யென்றுசங்கிராசன்
தன்னுடவிரலைமூக்கின்மேல்வைத்தான் தயிரியந்தான்செய்து
என்னுடபட்சியையிரண்டாவெட்டினு யேழைகுலத்தானே
தண்டாயுதத்தைமுறிந்திடச்செய்தா யிதனாலேநீயின்று
வல்லமைக்காரனாயினோமென்று கொஞ்சமுமெண்ணாதே
ஆனாலாகட்டுமுன்பெயரென்ன எனக்குச்சொல்லுமென்றான்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ஆதிப்புலியுல்லா
மக்கமாநகரமாளுமுஹம்மது மருகரானவர்நான்
திக்குதிசைகளெல்லாமஞ்சிட சண்டைசெய்பவர்காண்
உன்னையுமுன்குலராசனைவெட்டு மலிப்புலிநானென்றார்
அந்தசொல்லைகாதிலேகேட்டு அப்போமதசங்கி
ஜின்னோடுபூதகணங்களைவெட்டிய சூரஅலியிவராம்
ஆனாலாகட்டும்பார்ப்போமொருகை அலியார்வல்லமையை
என்றுமனதிலுள்ளெண்ணினான்சங்கி வலியராசாவும்
அந்தவேலையிலென்னசொல்கிறான் அலியார்முகம்பார்த்து
என்னைகெலித்திடத்துணிந்துவந்தா யேழைமானிடனே
பஞ்சகுலத்தில்பிறந்தவனின்னம் பயமுள்ளவநீ
என்னுடவல்லமையிவ்வளவென்று எண்ணாதேநீயும்
உன்னைக்கெலித்திடவந்தவனுக்கு மூருதனைப்பிடிக்க
என்னைக்கெலித்திடுங்கெட்டிக்கார னாகவிருந்தாக்கால்
வாளமர்செய்திடும்வல்லமையறிந்திட வாவென்றுசொன்னான்
அந்தமொழியைக்காதிலேகேட்டு அப்போதலியாரும்
நல்லதுநல்லதுஉன்சொற்படியே நானுசம்மதியே
எப்படியெப்படிசண்டைகள்செய்திட உனக்குசம்மதியோ
அப்படியெல்லாம்சண்டைகள்செய்திடு மறிவில்லாச்சங்கி
என்று அலியார்கையிலெடுத்த ரிலங்குசுல்பக்கார்
என்பதுபாரக்கத்தியைகையி லெடுத்தான்சங்கிராசன்
கத்தியாலோங்கிவெட்டினவலியைக் கனத்தபெரியவெட்டு
அந்தவெட்டைத்தாங்கினாரலியார் சுல்பக்கர்வாளால்

இரண்டுதுண்டாய்வாளுமுறிந்து விழுந்ததுதரைமேலே
கத்திமுறிந்துவிழ்ந்திடசங்கி கண்கள்நெருப்பாகி
பல்லைநெறநெறவென்றுகடித்தான் பாதகனானசங்கி
முன்னால்பட்சிதன்னைவதைத்தான் முறித்தான்தண்டமதை
பின்னுங்கத்தியைமுறித்தாரென்று பெரியகோபமானான்
அந்தவேளையில்சிவந்ததுகண்கள் சங்கிராசர்க்கு
அந்தவேளையிலென்னசொல்லுகிறான் சங்கிராசாவும்
ஆண்மையுள்ள அலியேயானா லென்சொல்லைக்கேளும்
கெட்டிக்கார அலிநீயானால் என்சொல்லைக்கேளும்
குதிரைவிட்டுக்கீழேயிறங்கி குஸ்திசண்டைசெய்யும்
பரியைவிட்டுக்கீழேயிறங்கிப் பாரச்சண்டைசெய்யும்
உன்னுடவல்லமைகளெல்லாங்காட்டிடு ஒன்றுமறைக்காமல்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போதலியாருந்
நரகுக்குடியாய்ப்புகுந்திடும்பாவியே நான்சொல்லக்கேளு
எப்படியெப்படியுன்மனமெண்ணுதோ அப்படியெல்லாஞ்செய்
உன்மனச்சம்மதிப்படியேசம்மதி யெனக்குமென்றுசொல்லி
ஏறியிருந்ததுல்துலைவிட்டு இறங்கினாரப்போது
மலைபோல்நீண்டசங்கிராசன்முன் வந்தாரலியாரும்
சண்டைக்குவாவெனக்கூப்பிடசங்கிமுன் வந்தாரலியாரும்
கிட்டேயலியார்வந்திட ச்சங்கியைக் கொண்டுறமாய்ப்பிடித்து
அலியைப்பூமிமேல்தள்ளிடநாடி அப்போசங்கிராசன்
சாடித்தள்ளினான் அலிப்புலியை சங்கிமதங்கொண்டு
கல்லினுள்ளிருப்புக்கம்பம்போல நின்றாரலியாரும்
நயங்காச்சியூற்றியகம்பம்போ லிருந்தாரலியாரும்
மரத்திலடித்தஆணியைப்போல வல்லாலிப்புலியார்
பிடித்தபிடியைவிடவேயில்லை பெரியவலியலியார்
பச்சைமரத்தினாணியைப்போல பிடித்தாரலியாரும்
அவனாலானமட்டுந்தள்ளினான் ஆங்காரங்கொண்டு
பலமெல்லாங்கூட்டிதள்ளினானலியை பெரியசங்கிராசன்
அசையுறவில்லைவிடவுமில்லை அவனையலிப்புலியார்
அப்போதலியார்சங்கியைப்பார்த்து அடபாவியேகேள்
என்னைத்தள்ளினாயினிநானுன்னை யானுந்தள்ளுகிறேன்
சண்டைமுகத்தினிலஞ்சிடவேண்டாம் சமத்தைநீகாட்டு
இந்தவேளையிலுன்னுடவலியை என்முன்னேகாட்டு
கொஞ்சமுமஞ்சிடவேண்டாமிப்போ சங்கிராசாவே
உன்றனுனுவமெல்லாங்காட்டிடு சங்கிராசாவே
என்றுசொல்லிஅலிப்புலிதள்ளிட இருண்டமலைபோல
முட்டிமோதியேகீழேவிழுந்தான் முரட்டுச்சங்கிராசன்
நீண்டமரம்போல்கீழேவிழுந்தான் நீளசங்கிராசன்

கிடுகிடுவென்ன நடுங்கிப்போனான் கெட்டசங்கிராசன்
ஒடுங்கியும்போனான்கலங்கியும்போனான் உயர்ந்தசங்கிராசன்
எண்ணின எண்ணங்கள்பாழாய்ப்போச்சுது சங்கிராசர்க்கு
வந்தகாரியம்பலியாமற்போச்சுது சங்கிராசர்க்கு
நினைத்தவேலைகள்முடியாமற்போச்சுது சங்கிராசர்க்கு
ஊருக்குப்போகமுடியாமற்போச்சுது சங்கிராசர்க்கு
உயிரேநில்லாமலோடிப்போச்சுது சங்கிராசர்க்கு
ஆணவமெல்லாம்பறந்துபோச்சுது சங்கிராசர்க்கு
அந்தவேளையில்சங்கியின்மார்மேல் அலியார்தானூந்தி
கத்தியெடுத்துசங்கியினுடைய கழுத்தையறுக்கப்போனார்
அந்தவேளையில்சங்கிராசனும் அலியார்முகம்பார்த்து
ஐயாகேளுமரசேகேளு மலியாரேகேளும்
உன்றன்வலிமையையானறியாமே லோடியிங்குவந்தேன்
என்னுடவுயிரையிழந்திடவிங்கு வோடிநானும்வந்தேன்
பாவியின்சொல்லைக்கேட்டுநானும் யிங்குபதறிவந்தேன்
பெண்டுபிள்ளைகளெல்லாம்விட்டுப் போயிடநான்வந்தேன்
பணத்துக்காகவுயிரையிழந்திட பாவிநான்வந்தேன்
வந்தபின்தெரிந்ததுதங்கள்வல்லமை வல்லஅலியாரே
ஏழையடியேனானுமுனக்கு என்னைக்காக்கவேணும்
இந்தவேளையிலென்றனுயிரை கொல்லாமல்விடவேணும்
அப்படிவிட்டால்வீரர்தன்புலியே அதிகதருமமுண்டு
பெண்டுபிள்ளைகள்முகத்தைப்பார்ப்பேன் பின்னும்வரவேமாட்
நீங்கள்கிருபைசெய்திடவேணும் செடியோனலியாரே [டேன்
என்றநானாவிதமாககெஞ்சினான் சங்கிராசாவும்
அந்தச்சொல்லெல்லாங்காதிலேகேட்டு அப்போதலியார்க்கு
அதிகவிறக்கமுமாச்சுதவன்மேல் அண்ணலலியாற்கு
விட்டிடவேணுமென்றுநினைத்தார் வேங்கையலிப்புலியார்
இருந்தாப்போலொருசத்தமும்வந்தது ஏகன்புலியாரே
பொல்லாதரோகிபோக்கிரியானவன் பேச்சைநீகேம்பாதே
வெட்டிப்போடுமிரண்டுதுண்டாய் விடாதேவெட்டாமல்
அந்தசத்தத்தைகாதிலேகேட்டு அல்லாப்புலியுல்லா
வெட்டிப்போட்டனர்சங்கிராசனை வேதஅலியுல்லா
செத்துநரகுக்கிரையாய்ப்போனான் சங்கிராசாவும்
மாண்டுநரகுக்கிரையாய்ப்போனான் வல்லராசாவும்
சங்கியிறந்திடக்கண்டாரவனுட சேனைத்திறளெல்லாம்
சொல்லாமலெல்லாமோடிபோயின தயிரின்குடம்போல
சிதறிச்சிதறிஓடினாரெல்லாம் சேனைப்படையோர்கள்
மகரிபுபட்டணம்போனாரெல்லாம் வாய்நீரில்லாமல்
அப்போதலியும்கம்பருந்துல்னும் அல்லாவருளாலே
வெற்றிபெற்றுவந்தனர்திரும்பி வரிசைமக்கநகர்

## மலுக்கு இராஜனுக்குச் சேதிசொல்லுதல்.

அலிவருவதைக்கண்ணாற்கண்டு அஹ்மதுநபியுல்லா
மூன்றுயார்களும்அஸ்ஹாப்மார்களு மொய்த்துத்திரளாக
எதிர்கொண்டார்கள் அலியாருக்கு இன்பமிகப்பெருக
அப்போதலியார்நபியுல்லாவி னடிமலர்பாதம்போற்றி
எல்லோருஞ்சேர்ந்துப்பள்ளிக்குப்போயினர் பெரியகடல்போல
நடந்தசங்கதியெல்லாஞ்சொன்னார் நபிக்குஅலியாரும்
சங்கதியெல்லாங்கேட்டெல்லோரும் சந்தோஷமானார்கள்
அந்தவேளையில்மேல்கடல்புறமா பொழுதும்போயடைந்தது
நபியுல்லாவும்யார்கள்அஸ்ஹாபுமாய் நாயன்றனைத்தொழுது
அவரவர்வீடுகளெல்லாம்போனார் அச்சங்களில்லாமல்
நபியுல்லாவும்தங்கள்வீட்டுக்கு போனார்நிலவொளிபோல
உண்டுகுடித்துச்சந்தோஷமாக உறங்கினாரெல்லாம்
உலகிலுள்ளபடைப்புகளெல்லா முறக்கமாகிப்போச்சு
சேவல்கள்கூவிகிழக்கும்வெளுத்தது ஸுபுஹ்நேரமாச்சு
சொன்னார்பாங்குபிலாலுமப்போ தொழுதிடவாங்களென்று
வாங்குசத்தத்தைகாதிலேகேட்டு வந்தார்கள்பள்ளிக்கு
ஸுபுஹ்தொழுகையைதொழுதெல்லோரும் சுகமாயிருந்தார்கள்
சங்கியின்கூடவந்தவரெல்லாம் திசைதிசையாய்ச்சிதறி
எல்லாமொன்றாய்ச்சேர்ந்துக்கூடினர் ஏகக்கூட்டமதாய்
மகரிபுபட்டணம்போனாரெல்லா மனதுமிகவாடி
சஞ்சலம்பெரியதாய்ப்போனாரெல்லாம் சங்கிதனையிழந்து
சஞ்சலத்தோடுகோட்டைக்குள்வந்தார் சங்கிப்படையோர்கள்
மாடகூடங்களெல்லாந்தாண்டினர் வாடியமுகமாக
கொலுமுன்னாகப்போனாரெல்லாம் கூட்டமாகக்கூடி
மலுக்குராசன்பாதம்பணிந்து நின்றாரெல்லோரும்
வாடியமுகமாயெதிரில்நிற்க மலுக்குராசன்கண்டு
அலியைவெட்டிடபோனபேர்களே ஆணவமுள்ளோரே
என்னவிதத்தாலிப்படிவந்தீ ரெல்லாருங்கூடி
வந்தகாரணஞ்சொல்லுங்களென்றான் மலுக்குராசாவும்
போனகாரியஞ்சொல்லுங்களென்றான் பெரியராசாவும்
திரும்பிவந்ததைசொல்லுங்களென்றான் சூராராசாவும்
என்னகாரணம்மேதுகாரண மெனக்குச்சொல்லென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு சங்கிப்படையோர்கள்
பாதம்பணிந்துதண்டமுஞ்செய்து பயந்துமிகநடுங்கி
இராசர்க்கெல்லாமிராசனாகிய ராசாவேகேளும்
சங்கிராசன்கூடவேபோனோம் சற்றுமஞ்சாமல்
மக்கமாநகரம்காதமிருக்கையில் வழியிலிறங்கிருந்தோம்
மக்கத்தார்களொட்டகமெல்லாம் வந்துமேய்ந்திடவே

அந்தஓட்டகமெல்லாம்பிடித்து சங்கிராசாவும்
பொழுதுக்குக்காட்டில்விழுங்கிபோட்டான் சங்கிராசாவும்
பட்சியைமேயவிட்டானங்கே சங்கிராசாவும்
அய்யாவேநீயினிமேல்கேளு மாகும்வேலைகளை
ஒத்தைகுதிரைக்காரனும்வந்தா னோராள் தனைக்கூடி
பஞ்சையைபோலவந்தானையா பாதபஞ்சையவன்
சண்டைக்குவந்தவீரனுமல்ல சதிமானக்காரன்
பாட்டைசாரிகள்போலவேவந்தான் பார்ப்போர்தங்களுக்கு
குதிரைவருவதைக்கண்டான்சங்கிக் கொடியராசாவும்
பட்சியைப்பார்த்துசொன்னானப்போ பாரசங்கிராசன்
குதிரையைக்கொத்திவிழுங்கிடுவென்றான் கொடியசங்கிராசன்
கொத்திவிழுங்கிடப்போனதுபட்சிக் குதிரையின்தன்கிட்டே
அந்தவேளையிலென்னசெய்தா னந்தக்குதிரைக்காரன்
கத்தியையுருவிப்பட்சியைவெட்டினான் கனத்தவிடிபோல
அந்தவெட்டினால்ரெண்டாய்போச்சுது அந்தப்பட்சியது
பட்சியிறந்திடக்கண்டான்சங்கிப் பாராராசர்க்கு
கண்களிரண்டும்சிவந்துபோச்சுது கடுங்கோபங்கொண்டு
தண்டத்தாலேயடித்தானையா தண்ட முறிந்துபோச்சு
கத்தியினாலேவெட்டினானப்போ கத்தியொடிந்துபோச்சு
அந்தவேளையில்அலியார்சீறி ஆங்காரங்கொண்டு
ஆட்டைதூக்கிப்போடும்வாறு யவனைத்தான்தூக்கி
கீழேபோட்டுக்கழுத்தையறுத்தார் கொற்றவலியாரும்
செத்துமாண்டுபோனானையா சங்கிராசாவும்
நாங்கள்பயந்துவந்தோமையா ராசாமாமலுக்கே
வாயாற்சொன்னால்தெரியாதையா ராசாமாமலுக்கே
கிட்டேபோனால்தெரியுமையா ராசாமாமலுக்கே
பார்த்தாலப்போதெரியுமையா ராசாமாமலுக்கே
சொல்லிடவல்லமையெங்களுக்கில்லை ராசாமாமலுக்கே

## மலுக்குராசன் கோபித்துச் சொல்லுதல்.

இந்தச்சேதிகளெல்லாங்கேட்டு ராசாமாமலுக்கு
நறநறவென்றுபல்லைக்கடித்தான் ராசாமாமலுக்கு
உருட்டிமிரட்டிப்பார்த்தானப்போ ராசாமாமலுக்கு
அந்தவேளையிலென்னசொல்கிறான் மலுக்குராசாவும்
முன்னால்போனபூதத்தைக்கொன்றான் முரட்டுஅலியென்போன்
பின்னால்போனசங்கியைவெட்டினான் பெரியஅலியென்போன்
ஆனாலாகட்டுமாகட்டுவலுமையை யறிவேனன்போயி
என்னுடவாளுக்குஇரையாய்க்கொடுப்பேன அலியின்தன்னுயிரை
விட்டுவிடுவேனாலேசாவலியை வெட்டிடுவேன்தலையை
இத்தனை ஆணவமெல்லாமச்சதா அலிக்கு என்னைக்கெலிப்பானா

ஆளுவமெல்லாம் அடைக்கிவைக்கிறேன் ஆகட்டுமாகட்டும்பார்
இப்படிமனுக்குராசன்சொல்லிட இருந்தபடைவீரர்
எங்களையாளும்ராசனேகேளு மெங்கள்சொல்லையென்றார்
அந்தவேளையில்ஜின்னின்படையோர் ஆங்காரமிட்டெழுந்து
அலியைவென்றிடப்போரோமென்றார் மனுக்குராசாவே
அதன்பின்பூதப்படையோரெழுந்து அய்யாராசாவே
பொல்லாவலியைவெட்டிகெலித்திடப் போறோம்நாங்களென்றார்
பின்புசங்கிப்படையோரெழுந்து பெரியாராசாவே
நாங்கள்போரோமலியைக்கெலித்திட நல்லசண்டைசெய்ய
துருக்கிப்படையும் அமிப்படையும் சொன்னாரிதுபோல
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போமாமனுக்கு
சந்தோஷமானான்மென்மேலாகத் தணியமகிழ்வாக
நால்வகைப்படையோர்தங்களைப்பார்த்து ராசாமர்மனுக்கே
நானினிசொல்கிறேன்கேளுங்களென்றான் ராசாமாமனுக்கு
முன்னால்போனபூதப்படைகளு முழுதுமாண்டுபோனார்
பின்னால்போனசங்கிராசனும் பேசாமல்மாண்டான்
ஆந்தப்பழிகளைவாங்குவோர்நீங்கள் அச்சமில்லாமல்
அலியார்முஹம்மதுகம்பரைவெட்டி அறுத்துவாங்கள்தலையை
கோட்டையையிடித்துப்போடுங்கள் தூசியாய்ப்பறக்கச்செய்திடுங்கள்
பெண்டுபிள்ளைகளைசிறையாய் சேர்த்துப்பிடித்துகொண்டுவாங்கள்
அப்படிசெய்துவருவீராகில் அதிபதியாகத்தருவேன்
கேட்டகேட்டபடியேவெகுமதி கொள்ளும்படிகொடுப்பேன்
இந்தக்ஷணமேசண்டைக்குபோங்க ளென்றான்ராசாவும்

## நால்வகைப்படை மக்கம் போகுதல்.

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு நால்வகைப்படையோர்கள்
ஈட்டிகளெடுத்துகையிற்பிடித்தா ரெத்தனையோவீரர்
கத்திகளெடுத்துகையிற்பிடித்தார் கணக்கில்லாவீரர்
தண்டாயுதத்தைகையிலெடுத்தா ரெத்தனையோவீரர்
சக்கரமெடுத்துகையிற்பிடித்தா ரெத்தனையோவீரர்
அம்புகளெடுத்துகையிற்பிடித்தா ரெத்தனையோவீரர்
கவண்களெடுத்துகையிற்பிடித்தா ரெத்தனையோவீரர்
சுருளுக்கத்திகள்கையிலெடுத்தா ரெத்தனையோவீரர்
ஆயுதமெல்லாபூட்டினரன்று அளவில்லாபடையோர்
இராசனிடத்துக்குவந்தனரெல்லாம் ராசாதிராசே
சண்டைக்குபோகயெங்களுக்கெல்லாம் தாரும்விடையென்றார்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ராசாமாமனுக்கு
சீக்கிரமாகப்போங்களெல்லாம் சண்டைக்குஎன்றானும்
சண்டைசெய்துகெலித்தினிவாங்கள் சிப்பாய்மார்களென்றான்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு நால்வகைப்படையோரும்

சந்தோஷமாகப்புறப்பட்டார் சண்டைசெய்யவென்று
பட்டணம்விட்டுவெளியேவந்தார் பெரியகடல்போல
விடுதிவிடுதியாய்நடந்ததுபாளயம் வெள்ளக்கடல்போல
அணிஅணியாகநடந்ததுசேனைகள் அலையொலிகடல்போல
படபடவென்னநடந்ததுதிரளாய்ப் படையின்பெருங்கூட்டம்
தடதடவென்னநடந்ததுதிரளாய்த் தானையின்பெருக்கூட்டம்
குமுகுமுகுமுவெனநகமும்வாத்தியம் குமுறுதுபேரொலியாய்
வகைவகையானமேளசங்கீத முழங்குதுநகமுகமும்
சிச்சிரிதிண்டிமம்தாரைகளோசைகள் தானேமுழக்கமிட
பேரிகைபூரிமல்லரியெக்காளம் பேரொலியாயொலிக்க
தூசிகளெழுந்துபொழுதைமறைத்திட நடந்ததுசேனைவெள்ளம்
ஆறுமலைகளெல்லாந்தாண்டி நடந்தார்மக்கநகர்
காதமிருக்கஅங்கோரிடத்தி லிறங்கினர்கடல்போல
நகமுகமெங்கும்கூடாரமடித்தார் நால்வகைப்படையோர்
விதவிதமாககூடாரமடித்தார் நால்வகைப்படையோர்கள்
பெரியமலைபோலெங்குந்திரிந்திட படங்குகளடித்தார்கள்
அணிஅணியாகக்கடைவீதிகளு மலங்காரஞ்செய்தார்கள்
ஆட்டமும்பாட்டமும்செய்தாரெல்லா மானுவமிகப்பேசி
வானின்முழக்கம்போல் முழங்கினதெங்குமேளவாத்தியங்கள்
நாலுதிசைகளுமொரேசத்தமா நகாரடித்தார்கள்
மக்கமாநகரங்கேட்டதுசத்தம் வானினிடிபோல
அந்தச்சத்தத்தைகேட்டுநபியு மஸ்ஹாப்மார்களுமாய்
எப்போதுமில்லாசத்தமிதேது எங்கேமுழங்குதுபார்
ஓரேமுழக்கமாமுழங்குதுசத்தம் எந்நேரமோயாமல்
எந்ததிசையினிலிருந்துவருகுது இந்தசத்தமது
பார்த்திடவேண்டுமென்றெலாங்கூடி பகர்ந்தாரந்நேரம்
அஞ்சுவேளையும்பாங்குசொல்லும் பிலாலவரைக்கூவி
மினாருவின்மேலேறிநீர்பாரு முழங்குதுமிந்தவொலி
எந்ததிசையிலிருந்துவருகுது என்றுவுற்றுப்பாரும்
எனறசொல்லைக்காதிலேகேட்டு எழுந்துபிலாலப்போ
ஏறியேபார்த்தார்நாலுதிசைகளும் ஒருதிசைமுகமாக
பெரியகடல்போலகூடாரமடித்து மகாசேனையாக
படையின்கூட்டத்தைக்கண்ணுற்கண்டு பிலாலுமந்நேரம்
கால்கைநடுங்கிடகீழேயிறங்கினர் கனத்தபிலாலவரும்
நபிகளுக்கெல்லாம்பாதுஷாவாகிய நபியேநீர்கேளும்
கண்டதுசொல்லிடமுடியாதெனனால் காரணநனநபியே
மக்கமடுத்தாப்போலொருகாத வழியிற்குள்ளாக
பெரியகடல்போல்சேனைகள்வந்து படங்குகள்தானடித்து
இறங்கியிருக்கிறாரென்றுசொல்வே னிறசூல்நபியே

என்னகாரியமாவந்தார்களோ எந்தநகராரோ
சண்டைக்குவந்தபேர்களாயிருந்தால் சருதார்நபியேகேள்
ஒருவராலுமாகாதெதிர்க்க உள்ளபெரும்படையாம்
கட்டிலடங்காப்படையாயிருக்குது கடல்போல்தானென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போநபியுல்லா
இந்தப்படைகளெவ்விடமிருந்து வந்தபடையிதுவோ
ஒன்றுந்தெரிந்திடவில்லையென்றார் உடையோநபியுல்லா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு ஆதிப்புலியெழுந்து
அரசமிதித்தஏறிப்பின்வந்த அஹ்மதுநபியேகேள்
மலைபோலுயர்ந்தமூன்றுமூழுந்தான் மலுக்குராசாவும்
நம்முடபேரிலனுப்பினானிப்படை நபிகள்நாயகமே
ஜின்னின்படைகளும்பூதபடைகளும் இரண்டொருகடல்போல
அருக்கிப்படையும்ஹமிப்படையும் சேர்ந்தொருகடல்போல
கூடிவந்தனர்நால்வகைப்படையும் கொடியசண்டைசெய்ய
என்றசொல்லைக்காதிலேகேட்டு இறசூல்நபியுல்லா
நால்வகைப்படைகளைவெல்வதுஅரிது நாயனலியாரே
பெரியகூட்டமாகூடிவந்தார் பெரியோனலியாரே
என்றசொல்லைக்காதிலேகேட்டு ஏகனலியாரும்
நபிகளுக்கெல்லாம்நபியாய்வந்த நவமணிநன்னபியே
காட்டினிலாறுவோடிடச்செய்த காரணநன்னபியே
நாகப்பாம்பைவழியினில்வதைத்த நபியேநாயகமே
சொல்லிடக்கேளுமென்றன்வார்த்தையைத் தூதரால்வந்தவரே
அல்லாதுணையும்தங்கள்துவாவின் வரிசையுமுண்டாகில்
ஏழுகடல்போல்படைகள்வந்தாலு மெனக்கொருபாரமல்ல
மலைபோலுயர்ந்தபெரும்படைகூடி வந்தாலுமஞ்சேன்
அவரவர்களுயிரைவானம்போயிட அனுப்பிவைத்திடுவேன்
பொடிப்பொடிப்பாகவுடல்களைவெட்டி போக்கிடுவேநாகம்
மூளைகள்சிதறிடமண்டைகளொடிந்திட மாட்டிடுவேன்சண்டை
ஒருநொடிக்குள்ளேசெய்வேன்தூனென உடையோநன்னபியே
ஒன்றுக்குமஞ்சேனல்லாவுதவியால் உடையோநன்னபியே
அந்தப்படைமேலென்னையனுப்பிடும் அல்லாதிருந்தூதே
வந்தபடைமேலென்னையனுப்பிடும் வல்லோனிருந்தூதே
சண்டைக்குப்போயினான்கெலித்துவருகிறேன் சருதாரானவரே
என்றசொலலைக்காதிலேகேட்டு எழுந்துநபியுல்லா
அல்லாஉமக்குவெற்றியும்பலமும் தருவானலியாரே
ஆனாலாகட்டுஞ்சண்டைக்குப்போவீர் அஞ்சாமல்நீயும்
உங்கள்வீட்டுக்குப்போய்நீர்வாரும் உடையோனலியாரே
என்றசொல்லைக்காதிலேகேட்டு எழுந்துஅலியாரும்
பாத்திமாநாயகம்வீட்டுக்குப் போனார் பாரஅலியுல்லா

என்னகாரணம்வந்திடுஞ்செய்தியை யென்னுடன்சொல்லென்றான்
அடியாள்தனக்குவந்தசெய்தியை அரசரேநீர்சொல்லும்
நினைத்தவையெல்லாமடியாளுடனே நீதரேநீர்சொல்லும்
என்றசொல்லைக்காதிலேகேட்டு ஏகனலியாரும்
நபிபின்மகளேநாயகவிளக்கே நான்சொல்லக்கேளும்
இன்றுநால்வகைச்சேனைகள்வந்து இருக்குதுபெரிதாக
அந்தச்சண்டைக்குபோகிடவேணும் அஹ்மதுநபிமகனே
கொடியசண்டைக்குபோகிடவேணும் கொற்றநபிமகனே
படைகளைவெட்டிகெலித்திடவேணும் பயகாம்பர்தன்மகனே
என்று அலியார்சொல்லிடக்கேட்டார் இறசூல்நபிமகளார்
என்னசொன்னாரெந்தன்பாவா என்றன்கணவனாரே
அந்தப்படியேகேட்டிடுமென்றார் பாத்திமாநாயகியும்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு ஆகிப்புலியலியார்

## அலிறலியல்லாஹு நால்வகைப்படை போகுதல்.

சந்தோஷமானாரந்தவேளையில் சண்டைக்குத்தான்போக
உடனேதுல்துல்குதிரைக்குவுறமா ஜீனிவைத்துக்கட்டி
சிங்காரமாகநாலுகாலுக்கு தண்டையதுபோட்டார்
வானின்பரியைச்சிங்காரித்தார் வல் அலியாரும்
மேகப்பரியைச்சிங்காரித்தார் வெற்றியலியாரும்
அந்தவேளையிலென்னச்செய்தா ராதிப்புலியல்லா
ஏழுலோகத்தையொன்றாய்வெட்டிடு மிலங்குஞ்சுல்பக்கார்
நாட்டினுள்ளமலைகளைப்பிளந்திடும் நல்லசுல்பக்கார்
ஓரேவீச்சுக்குயிரண்டாய்ப்பிளந்திடு மொளியின்சுல்பக்கார்
(அந்த) கத்தியையெடுத்துக்கையில்பிடித்துக் கத்தாப்புலியலியார்
துல்துல்குதிரைமேலேறினாரப்போ தூயவலிப்புலியார்
வானின்பரிமேலேறினாரப்போ வல்லாலிப்புலியார்
மேகப்பரிமேலேறினாரப்போ வேங்கைப்புலியலியார்
குதிரைதுல்துலெண்ணினதப்போ கொற்றப்புலியலியார்
வான்மேல்விட்டாலொருகொடிக்குள்ளே பறந்துவந்திடுவேன்
மலைமேல்விட்டால்மலைகளதூளெழ காலால்மிதித்திடுவேன்
படைமேல்விட்டால்காலால்முதித்துப் பாழுபடுத்திடுவேன்
இராசர்முடிகளைச்செண்டுபோல் காலால்சிதறமிதித்திடுவேன்
கண்கள்மூளைகள்பிதுங்கிடகாலால் கசக்கிமிதித்திடுவேன்
இப்படிநானுவிதமாதுல்துல் எண்ணிநடந்ததுவே
அலியார்கையில்பிடித்திடுங்கத்தி அந்தப்படையைப்பார்த்து
வாயினைகழுவிடப்போதப்படைகள் வந்ததாம்முன்னம்
தின்னநமக்குகுணவுமில்லையே நீவுளசேனையது
இப்படிஅலியார்சுல்பக்காரும் சொல்லிடவவ்வேளை
கம்பர்சொல்லினரிப்படையெல்லாம் நமக்குப்போதாது

இப்படி துல்துலும்வாளுங்கம்பரும் வல்லமைத்தான்பேச
தாரங்கர்துல்துல்தன்னைநடத்தினார் தூய அலியுல்லா
வானம்நடுங்கின பூமிநடுங்கின வகைவகையாயுள்ள
மலைகளெல்லாம்நடுங்கின தன்று மரமும்பலதெல்லாம்
செந்தூளெழும்பிபோச்சுதுவப்போ திசைகள்தெரியாமல்
கருந்தூளெழும்பிபோச்சுதுவப்போ கதிரோன்தெரியாமல்
காற்றின்வேகமாய்ப்பறந்துவருகுது கனத்ததுல்துலு
மேகம்போலபறந்துவருகுது வேகதுல்துலு
கீழ்மேல்தெரியாமற்பறந்துவருகிறது குதிரை துல்துலு
துல்துல்நெருங்கிவருவதைக் கண்டார்நால்வகையார்கள்
அந்தவேளையில்சங்கியின் கூட யிருந்தபடையோர்கள்
அலியார்வரவைகண்டிடவப்போ அங்கங்கிடுகலங்கி
நால்வகைப்படையோர்வந்தபேர்களே எங்கள்சொற்கேளும்
அதோகுதிரைமேல்வருகிறானே அவன்றானலியாராம்
பூதம்சங்கிலியைவெட்டியவல்லமை புலியலியிவர்தான்காண்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு நாலவகைப்படையோர்கள்
ஏழுகடலுங்கலங்கினார்போல எழுந்தாரெல்லோரும்
சீக்கிரமாகத்தயாராயிருங்கள் சேவகமார்களே
நம்முடையஎதிரியதோவருகிறான் நால்வகைப்படையோரே
என்றசொல்லைக்காதிலேகேட்டு எல்லாவீரர்களும்
தயாரானாராயுதம்பூட்டிச் சண்டைக்குப்படையெல்லாம்
கலகலவென்றுநால்வகைப்படைகள் கலக்கமாகிப்போச்சு
கடலதுகலங்கிடும்வாறதுபோல கலந்தாரெல்லாரும்
அதோவருகிறகல்முழப்பயலை அடையவளைத்துக்கொள்ளும்
அம்புகளெடுத்துபோடுங்களவன்மேல் அண்டந்தெரியாமல்
கிட்டேவந்தாலீட்டியால்குத்துங்கள் குடல்கள்சரிந்துவிழ
தலைமூளைகள்சிதறிவிழுந்திட தண்டத்தாலடியுங்கள்
என்றவார்த்தையைக்காதிலேகேட்டார் ரேகன்புலியலியார்
அந்தவேளையிலென்னச்செய்தார் ஆதிப்புலியலியார்
குதிரைக்குச்சிமிட்டாகொடுத்தாரப்போது கொற்றவலியுல்லா
கிடுகிடுகிடுவெனபூமியதிர்ந்திட கேசரிநபியுல்லா
கொக்குக்குலத்தினில்ராசாளிப்போல் புகுந்தாரலியுல்லா
ஆட்டுக்குலத்தினிற்புலிபுகுந்தாற்போல் ஆங்காரலியுல்லா
ஜின்னின்படையுள்சீறிபுகுந்தார் சூரஅலியுல்லா
அந்தவேளையில்அலியாருக்கு மூண்டதுபெருங்கோபம்
வாளையுருவிக்கையிலேபிடித்து வல்லயலியுல்லா
வெள்ளரிக்காயைபிளந்ததுபோல பிளந்தாரலியுல்லா
கத்திரிக்காயை அறுப்பதுபோல அறுத்தாரலியுல்லா
மண்ணும்விண்ணும்தெரியாமற்போச்சுது அந்நேரவேளையிலே

போடுபோடெனபோட்டாரப்போ பெரியவலியுல்லா
மாட்டுமாட்டெனமாட்டினாரப்போ வல்லயலியுல்லா
அந்தவேளையிலென்னச்செய்தார் நால்வகைப்படையோர்கள்
ஒருபுறம்ஜின்னின்படைகள்வளைந்தா ருடையோனலியாரை
ஒருபுறம்றாமிப்படைகள்வளைத்தா ருற்றயலியாரை
ஒருபுறம்துருக்கிப்படைகள்வளைத்தா ருயர்புகழலியாரை
ஒருபுறம்சங்கிப்படைகள்வளைத்தா ருடையோனலியாரை
நாலுபுறமும்வளைத்துக்கொண்டார் நாயகரலியாரை
மேகம்போலக்கவிந்தாரெல்லாம் வேதயலியார்மேல்
அந்தவேளையிலென்னசெய்கிறா ரதிப்புலியலியார்
கம்பரைப்பார்த்துக்குதிரையின்வாலைப் பிடித்துக்கொள்ளென்றார்
(ஆஆ) விட்டாரப்போ அலியார்கத்தியை முன்பின்தெரியாமல்
கொடுத்தார்குதிரைக்குச்சிமிட்டா அலியார்கோபமிகவாகி
அந்தவேளையில்துல்துல்குதிரை ஆடிவருகுதுபார்
சரகரவென்றுசுழலுது துல்துல் கடுகடைதானாக
மேகம்போலபறந்துபாயுது வேகதுல்துலு
காற்றைபோலபறக்குதுபடையுள் கனத்ததுல்துல்
மேகம்போலமூடிக்கொண்டது தூசியவ்வேளை
ஓரேயிருளாயிருண்டுக்கொண்டது எங்குந்தெரியாமல்
மினுமினுமினவென மின்னுதுகத்திமின்னல்போல
தகதகதகவெனமின்னுதுகத்தி சந்திரனொளிபோல
வெட்டுக்குவெட்டுகுப்பல்குப்பலாக விழுகுதுகுதிரைகளும்
கால்வேறாகதலைவேறாக விழுகுதுகுதிரைகளும்
மூளைகள்தயிரின்குடம்போல் சிதறிவிழுகுதுகுதிரைகளும்
வீச்சுக்குவீச்சுவிழுகுதுசின்னங்கள் வெள்ளக்கடல்போல
ஒருபுறம்சிங்கிமார்கள்மடிந்தார்கள் கூகூகூவென்று
ஒருபுறம்றாமிப்படைகள்மடிந்தார்கள் உற்றகடல்போல
ஓடுதுரத்தமாறாய்ப் பெருகிஓரேவெள்ளமாக
கட்டுமரங்கள்போலப்பிணங்கள் மிதக்குதுகமுகமும்
மலைகள்போலஜின்னின்படைகளு மடிந்துமாண்டுபோனார்
என்னசொல்வேனேதுசொல்வே னன்றுநடந்தசண்டை
இப்படிகா[illegible]ய்ச்சண்டை அலியார்தான்செய்து
மீந்தபேர்களையிஸ்லாமாக்கி விட்டுஅலியாரும்
மக்கநகர்க்குவந்தாரலியும் முஹம்மதுநபிமுன்பில்
நடந்தசங்கதியெல்லாஞ்சொல்லினார் நல்லயலியாரும்.

ஆமீன் ! ஆமீன் !! யாறப்பல் ஆலமீன் !!!

மலுக்கு மூலுக்கு ராஜன் கதை முற்றிற்று.

---

Printed at Shahul Hameedia Press, Madras 5—10-9-49.

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள்
## காரண சரித்திரம்.

இதாகிறது கல்விக் கடலாகிய இமாம் அப்துல்லாஹில் யாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்புர் றப்பானீ வல் கவதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கருமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமுமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த தொகையை தமிழில் மொழி பெயர்த்து, முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திர மென்னும் நாமமிட்டு அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு விலை ரூ 2 8 0

ஷை அறபுத் தமிழ் அல்சன்கல் அப்கார் பிபகுதியில் கவ்சுல் அல்லம் விலை ரூ. 4 8 0

# தாரீகுல் குலபா.
## அரபியாவில் தோன்றிய முஸ்லிம் கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.
### 1-வது பாகம்.

நமது முஸ்லிம் கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமாகும். ஏனெனில் அச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும் இஸ்லாத்தை நிலைநாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத்தின் சாத்துவங்களும் இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை முறையே எழுதி பல பாகங்களாக வகுத்து அச்சிடப்பட்டு வருகின்றன.

இதில் முதற்பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதற் கலீபாவாகிய ஹஜ்ரத் அபூபக்கரிஸ்ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. சரியான கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 16-பேஜ் சைசில் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு கட்டியது.

இதன் விலை ரூ. 1 4 0

ஷை இரண்டாம் பாகம் விலை ரூ. 1 4 0

ஷை மூன்றும் பாகம் விலை ரூ. 1 4 0

---

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பிராஞ்ச் ஆபீஸ்:—

நெ. 194, கேய்ஸர் தெருவு, பெட்டா கொழும்பு 11, (ஸிலோன்)